
# சம்மாந்துறை
# ஹிஜ்றா நவீன பொதுச் சந்தை
# திறப்பு விழா சிறப்பு மலர்



மக்கள் பணிமனை ஹிஜ்றா சந்தி - சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 - 07 - 2005

*With Best Compliments From...*

# FLEXIBILITY TO MEET CUSTOMER NEEDS

## FAST TURNAROUND AND ROUND THE CLOCK SERVICES



# TOTAL RELIABILITY

## SRI LANKA PORTS AUTHORITY

**NO. 19, CHURCH STREET, COLOMBO 1.**
**TEL: 2421201 FAX: 2440651**

**Internet-http://w.w.w.slpa.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14271
080

2004/08/02

# சம்மாந்துறை
# ஹிஜ்றா நவீன பொதுச் சந்தை
# திறப்பு விழா சிறப்பு மலர்

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி



மக்கள் பணிமனை ஹிஜ்றா சந்தி - சம்மாந்துறை

09 - 07 - 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*


# OUR FOUNDER LEADER



## Ashaheed Dr. M.H.M. Ashraff

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

இன்று சம்மாந்துறைத் தாயின் கருவறை கர்வம் கொள்கிறது. அந்தக் கர்வம் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் விடுதலை என்ற பாடத் திற்கு அரிச்சுவடி எழுதிய பெருமகன் முஹம்மது ஹு"ஸைன் முஹம்மது அஷ்ர.ஃப் அவர்களை பெற்றெடுத்தத னால் உருவானதே. இன்று அந்த மண்ணிலே அப்பெரும் தலைவனின் சிஷ்யன் ஒருவனால் ஆற்றப்படுகின்ற சேவைகளின் பதிவாக வருகின்ற மலரினை, அப்பெரும் தலைவருக்கு சமர்ப்பணம் செய்கின்றோம்.

சம்மாந்துறை பற்றிய கனவு தலைவர் அஷ்ர.ஃ ப் அவர்களுக்கு பலவாக இருந்திருக்கும். தான் பிறந்த மண்ணை தென் கிழக்கின் முகவெற்றிலை யாக - உரிமை மண்ணாக அவர் பார்த்திருக்கலாம். தென் கிழக்கின் தலைமைப் பீடமாக பார்த்திருக்க லாம். நகர வர்த்தக மையமாகப் பார்த்திருக்கலாம். தான் பிறந்த மண்ணிலே ஆசைகள் இருப்பது சாதாரண மனிதன் ஒவ்வொரு வருக்கும் உள்ள விடயம்தானே. அந்த ஆசை அவருக்கும் இருந்தி ருக்க லாம். அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்ற அவா நமக்கு மத்தியிலே - சம்மாந்துறை மக்களின் நெஞ்சிலே இளைய தலைவராக உட்கார்ந்திருக் கின்ற சகோதரர் அன்வர் இஸ்மாயில் அவர்களு க்கும் எழுந்திருக்கக்கூடும். அந்த உந்துதலினால் ஒரு நீண்ட கனவுகளின் வழியே அவர் பயணிக்கி ன்றார். அந்தப் பயணத்தின் போதெல்லாம் அவர் சதாவும் தனது தலைவரின் நினைவுகளிலே திளை த்திருக்கின்றார்.

இந்தவகையில் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பல பணிகளை சம்மாந்துறை யிலே நிறைவேற்றி இருக்கின்றார்; நிறைவேற்றி வருகின்றார். உலமாக்களுக்கான தலைமைக் காரியாலயம், நகரின் நடுவிலே ஹிஜ்றா என்ற வர்த்தக மையம், அதற்கு முன் ஒரு சிறு பூங்கா, நகரின் நடுவிலே உள்ள பள்ளிவாசலின் முகப்பழகு, பக்கத்தில் பிரயாணம் செய்வதற்கான நவீன பஸ்தரிப்பிடம், ஊரின் ஒரு புறத்தில் ஜனாதிபதி கலாசார மற்றும் விளையாட்டுத் துறை நிலையம், மறுபுறத்தில் மத ஸ்தலங்களை உள்ளடக்கிய புனித பிரதேசம், நெல்லுப்பிடிச் சந்தியில் முக் கோண முகப்புத் தோற்றம், பக்கத்தில் உள்ள சிற்றோடைக்கருகே பொழுது போக்கு இடம், நகரினூடே நீண்ட அகண்ட வீதிகள், பாடசாலைகள் எல்லாம் பலமாடிக் கட்டிடங்கள், பலன்காணும் பள்ளிவாசல்கள் மத்ரசாக்கள்,சுற்றிவர புனர் நிர்மா ணம் செய்த நீர்ப்பாசன வசதி, வரலாற்றுப் புகழ் கொண்ட வீரையடி அணைக்கட்டு, பல்கலைக் கழகத்தின் மாணவர் விடுதி, தொழில் நுட்பக் கல்லூரி முதல் பாடசாலை வரை கேட்போர் கூடம்,மின்சார,சுகாதார எழுச்சி. சூழவரவுள்ள இற க்காமம், மத்திய முகாம்,செந்நெல்புரம், மஜீட்புரம், நெயினாகாடு கிராமங்களின் புத்தெழுச்சி. இந்தப் பதிவுகளை எல்லாம் தலைவர் அஷ்ர.ஃபுக்கு சமர்ப்பணம் செய்யத்தானே வேண்டும். அதனை த்தான் இந்த மலர்க்குழு சாதித்திருக்கிறது. தலை வரின் மறைவின் பின்னர் உருவான இந்தச் சூழ்நிலைகள் அவரது சிஷ்யன் - நமது கதாநாய கன் அன்வர் இஸ்மாயிலின் பெரும் பணியே. அந்தப் பணிகளின் பதிவு தலைவருக்கு சமர்ப்ப ணமா கவாவது சேர்வதில் இம்மலர்க்குழு பெரும் மனநிறைவடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி காரியாலய
சனாதிபதி அலுவலகம்
OFFICE OF THE PRESIDENT

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்
அதி மேதகு ஜனாதிபதி
**சந்திரிகா பண்டாரநாயக குமாரணதுங்க**

## ஆசிச் செய்தி

சம்மாந்துறை ஹிஜ்றா நவீன சந்தைக் கட்டிடத் தொகுதியின் அங்குரார்ப்பண ஞாபகார்த்தமாக வெளிவரும் இம்மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன்.

எனது அரசாங்கம் இன,மத,பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் செயற்படு வதை இலக்காகக் கொண்டது. 1994 இல் எனது அமைச்சரவையில் முஸ் லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அங்கத்துவம் பெற்ற காலத்தில் இருந்து தென் கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி முயற்சியில் நாம் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றோம். அதன் முதற்கட்டமாக 1995 இல் தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தை நான் உருவாக்கியதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இன்று இதன் அடிப்படையில் சுமார் 40 ஆண்டு காலமாக பூர்த்திசெய்யப்ப டாதிருந்த சம்மாந்துறை ஹிஜ்றா நவீன சந்தைக் கட்டிடத் தொகுதியை எனது அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயிலின் காலத்தில் சகல தடங்கலையும் நீக்கி பூர்த்தி செய்து எனது வழிகாட்டலின் கீழ் திறந்து வைப்பது குறித்து நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உங்களது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களை உங்களது தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களே எனக்கு அறிமுகம் செய்துவைத்தவர். அவர் பிறந்த மண்ணிலே அவர் அறிமுகம் செய்துவைத்த அன்வர் இஸ்மாயில் மூலம் இந்த சந்தை திறந்து வைக்கப்படுவதில் இன்னும் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியை அடைகின்றேன்.

இந்த மண்ணுக்கு தலைவர் அஷ்ர.்.புடன் வருகை தந்த நான் மீண்டும் அன்வர் இஸ்மாயிலுடன் வருகை தர எண்ணினேன். ஆனால் தவிர்க்கமு டியாத சூழ்நிலை காரணமாக வரமுடியாமல் போய்விட்டது. ஆனால் என்றும் சம்மாந்துறை மக்களோடு நான் இரண்டறக் கலந்திருக்கின்றேன். விரைவில் உங்களுக்கு மத்தியில் வந்து உரையாற்ற வேண்டும் என்ற விருப்பமுடனே என்றும் உள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக, அபிவிருத்தி அரசியலில் மிகுந்த அக்கறை கொண்ட அன்வர் இஸ்மாயில் அவர்கள் தலைவர் அஷ்ர.்.ப் அவர்களின் பாணியிலே என்னை அணுகி உங்கள் தேவைகளை பூர்த்திசெய்து வருகின்றார். இதுவரை அவர் தனக்கென எதனையும் கேட்டுப்பெறாத ஒரு அரசியல்வாதி. இதன் அடிப்படையில் சம்மாந்துறையில் புனித பிரதேச பிரகடனம் ஒன்றினையும், ஜனாதிபதி கலாசார மண்டபம் நிறுவும் பணியையும் நான் மேற்கொள்ள வுள்ளேன்.

முஸ்லிம்களின் அபிலாசைகளை திருப்திசெய்யாத வகையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படாது. இந்த நாட்டின் எல்லா இன மக்களும் திருப்தியுறத் தக்கவகையில் பொருத்தமான தீர்வொன்றினை மேற்கொள்வதில் எனது அரசாங்கம் முனைப்பாக இருக்கிறது என்ற செய்தியையும் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

உங்களது பாராளுமன்ற உறுப்பினர் மக்கள் நலனில் அதிகம் அக்கறை கொண்டு செயற்படும் துடிப்பான இளைஞன் - எதனையும் செய்து முடிக்கும் அவாக் கொண்டவர். அவர் எனது ஆட்சியில் கிழக்கு மாகாண உட்கட்ட மைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சராக இருப்பது எனக்கு பெருமை தருகிறது. அவர் அரசியல் வாழ்வில் நீடித்து இருக்க வேண்டும். இன்று இடம்பெறும் சந்தைக் கட்டிடத் தொகுதி அங்குரார்ப்பணம் மூலம் இப்பிராந்திய மக்கள் பெரிதும் பயன் பெறுவர் என நம்புகிறேன். உங்கள் ஒவ்வொருவ ருக்கும் எனது நன்றிகள்.

**சந்திரிகா பண்டாரநாயக குமாரணதுங்க**
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்
அதி மேதகு ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Messege From:
**Hon. Mahinda Rajapaksa M.P.**
Prime Minister of Sri Lanka
& Minister of Highways

## OPENING OF HIJRA MODERN SUPERMARKET AT SAMMANTHURAI

I am pleased to send my felicitation on the occasion of the ceremonious opening of the Hijra Modern Supermarket at Sammanthurai.

It is a long felt need for Samanturai, since it is predomin antly populated with the Muslim community engaged in business and farmers in suburban areas who look forward for marketing facilities for their agricultural crops.

I would be remiss if I do not place in record, a word of appreciation of the instinct support extended by the Hon. M I Anver Ismail MP., Deputy Minister of Infrastructure Development in the Eastern Province, to make this dream a reality. I am privileged to involve my self us the Chief guest at this splendid opening ceremony of the **'HIGIRA SUPER MARKET'**, Sammanthurai.

I congratulate all who contributed their mite to make this project a success and wish the people of Samanthurai peace, prosperity and a brighter future.

**Hon. Mahinda Rajapaksa M.P.**
Prime Minister of Sri Lanka
& Minister of Highways

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி



**Hon. Mangala Samaraweera M P**
Minister of Ports , Civil Aviation and
Deputy Minister of Education.

## OPENING OF HIJRA MODERN SUPERMARKET AT SAMMANTHURAI

I have pleasure in sending this message on the occasion of the grand opening of the Hijra Modern Supermarket at Sammanthurai.

This thickly populated town consisting of a majority Muslim community is a developing town in the Ampara coastal area. The business community have been making representations over a long period of time to the authorities to provide them with a commercial centre at Sammanthurai.

Hon. M I Anver Ismail MP, Deputy Minister of Infrastructure Development in the Eastern Province has been persistently requesting for the establishment of a Modern Supermarket and with the funds provided by the Ministry of Infrastructure Development in the Eastern Province, the Hijra Modern Supermarket came into existence fulfilling the dreams and aspirations of the people of Sammanthurai.

I am happy to be associated with the opening of this supermarket and I take this opportunity to congratulate the Hon. Deputy Minister and others concerned with this project on their achievement.

I wish the people of Sammanthurai peace and prosperity.

**Hon. Mangala Samaraweera M P**
Minister of Ports, Civil Aviation and
Deputy Minister of Education.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**A.L.M. Athaulla**
கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு
அபிவிருத்தி அயமைச்சர்

## ஆசிச் செய்தி

இலங்கை முஸ்லிம்கள் வருகை தந்தது தொடர்பான வரலாற்றில் சம்மாந் துறை பிரதேசமும் பெரும் இடத்தினை பிடித்திருக்கின்றது சம்மான்காரர்கள் இறங்கு துறை என்றும் அல்லது அவர்கள் கொண்டுவந்த சாமான்கள் துறை என்றும் சொல்லப்பட்டு காரணப் பெயராகி இன்று இப்பிரதேசம் சம்மாந்துறை என்ற பெயராக விளங்குகின்றது.எதுவாக இருந்தாலும் பண்டைய காலத்தில் பெருவியா பாரங்களோடு தொடர்பாக இருந்த இப்பிரதேசத்துக்கு இது வரை காலமும் சந்தை ஒன்று இல்லாதிருந்தது பாரிய குறையாகவே இருந்து வந்திருக்கின்றது.

அல்லாஹ்வின் உதவியால் இக்குறை தீர்க்கப்பட்டு ஒரு நவீன சந்தைக் கட்டிடத் தொகுதியினை அமைத்து திறக்கப்படுவதையிட்டு நான் பெருமிதம் கொள்கிறேன். இக்கட்டிடத் தொகுதிக்கு பணம் ஒதுக்கீடு செய்து கொடுக்கின்ற ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கப் பெற்றமையையிட்டு நான் மகிழ்ச்சியடை கின்றேன்.

அல்ஹம்துலில்லாஹ் என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்துக் கொண்டி ருக்கும் சகோதரன் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் சம்மாந்துறை பிரதேசம் தொடர்பான அபிவிருத்திகளில் காட்டி வருகின்ற அக்கறையினை அப்பிரதேச மக்கள் நன்கு அறிவர்.

வரிசைப் படுத்தப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளில் இந்நவீன சந்தையின் அவசியத்தை உணர்ந்து அதனை இவ்வாறு அழகாக கட்டி முடிக்க வேண்டும் என்று அவர் கொண்டிருந்த அவரது அவாவைப் பாராட்டு கின்றேன். அவரது தூய்மையான அவாவிற்கு வெற்றி கிடைத்திருக்கின்றது.

இச்சந்தை இன்னும் வளரவும் இப்பிரதேசத்தின் பெயருக்கு காரணமாயிருந்த அதன் செயற்பாடுக ளோடு இப்பிராந்தியத்தில் இப்பிரதேசம் மிளிர எனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு கடந்த காலங்களில் தத்தமது வனப்பு சிறப்புக்களை இழந்து வஞ்சிக்கப்பட்டிருக்கும் நமது கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள ஊர்க ளிலும் அவர்களுக்குரியவைகள் கிடைக்கப் பெறுவ தற்காக பிரார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கின்றேன்.திட்டமிடப்படாத அபிவிருத்திகளினால் பணங்கள் வீணடிக்கப் பட்டனவே தவிர நமது மக்களின் கருத்துகள் எதற்குமே இடமிருக்க வில்லை. ஆனால் இச்சந்தை கட்டிடத்தொகுதியின் திட்டமிடல் அழகாகவும், கம்பீரமாகவும் கட்டப்பட்டிருப்பது மனதுக்கு ஒரு ஆனந்தத்தைத் தருகின்றது. நண்பர்களை ஆதரித்து விருந்தோம்பி சரியான கருத்துக்களுக்கு இடம் கொடுக்கும் சம்மாந்துறை மக்களின் இன்றைய மகிழ்ச்சியில் நானும் பங்கெடுக்கின்றேன்.

**A.L.M. Athaulla**
கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு
அபிவிருத்தி அயமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hon. Dinesh Gunawardena M.P.**
Minister of Urban
Development and Water Supply

## OPENING OF HIJRA MODERN SUPERMARKET AT SAMMANTHURAI

I am pleased to forward this message on the occasion of the grand opening of the Hijra Modern Supermarket at Sammanthurai.

This thickly populated town consisting of a majority Muslim community is a developing town in the Ampara coastal area. The business community have been making representations over a long period of time to the authorities to provide them with a commercial centre at Sammanthurai.

Hon. M I Anver Ismail MP, Deputy Minister of Infrastructure Development in the Eastern Province has been persistently requesting for the establishment of a Modern Supermarket and with the funds provided by the Ministry of Infrastructure Development in the Eastern Province, the Hijra Modern Supermarket came into existence fulfilling the dreams and aspirations of the people of Sammanthurai.
I am glad to be associated with the opening while congratulating the Hon. Deputy Minister and others concerned with this project on this achievement.

I wish the people of Sammanthurai peace, prosperity and a brighter future.

**Hon. Dinesh Gunawardena M.P.**
Minister of Urban Development and Water
Supply 3rd Floor, "Sethsiripaya"
Battaramulla.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Message from :**
**Hon. Janaka Bandara Tennakoon, M.P**
Minister of Provincial Councils and Local Government

## OPENING OF HIJRA MODERN SUPERMARKET AT SAMMANTHURAI on 9th July, 2005

It is with great happiness that I send my felicitation on the occasion of the ceremonious opening of the Hijra Modern Supermarket at Sammanthurai.

I understand that the Muslim community engaged in business and the farmers of the area who were looking forward for marketing facilities for their agricultural crops welcome the opening of this modern supermarket which would benefit them immensely.

I express my appreciation of the instinct support extended by the Hon. M I Anver Ismail MP., Deputy Minister of Infrastructure Development, in the Eastern Province, to make this dream come true.

I wish the people of Samanthurai peace, prosperity and a brighter future .and I take this opportunity to congratulate all who contributed their force to make this project a great success .

**Hon. Janaka Bandara Tennakoon, M.P**
Minister of Provincial Councils and
Local Government
330, Union Place,
Colombo –02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்**
சட்டத்தரணி
கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு
அபிவிருத்தி பிரதியமைச்சர்

## ஆசிச் செய்தி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் மீதும் அவர்களது தோழர்கள் மீதும் ஸலவாத் சொன்னவனாக இந்த மலருக்கான ஆசிச் செய்தியினை எழுதுகின்றேன். என்னைப் பொறுத்தவரையில் இந்த நூல் மிகவும் முக்கியமானது என கருதுகின்றேன். ஏனென்றால் சம்மாந்துறையின் பழமை, பள்ளிவாசல்கள், சந்தை அபிவிருத்தி முதலான விடயங்களை உள்ளடக்கிய கட்டுரைகளும் கவிதைகளும் இந்நூலிலே அடங்கியுள்ளன. நமது ஊரின் வரலாறு பற்றித் தேடுகின்றவர்களுக்கு இந்நூல் ஒரு தடயமாகவாவது அமையும் என்பதிலே எனக்கு சந்தேகமில்லை. முன்னர் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் செந்நெல் கிராம மக்களின் முக்கிய தேவையாக இருந்த நீர்ப்பிரச்சினையைத் தீர்க்கும் அம்மக்களுக்கான குடிநீர்த் திட்டம் பற்றி வெளியான நூலும் இந்தவகையில் குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறையின் ஹிஜ்றா சந்தியை துவக்கிவைக்கும் நிகழ்வின் ஞாபகமாக ஒரு சிறு மலரினைக் கொண்டுவரவேண்டும் என்று நான் எண்ணியபோது எனது பணிமனையினர் இத்தகைய ஒரு விரிவான மலரினை இதனோடு தொடர்புபட்ட கிராமச் சபையின் முன்னாள் உறுப்பினர்களையும் கொண்டு குழுவாக அமைத்து மிகவும் முக்கியம் வாய்ந்த நூலாக மாற்றியிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அல்ஹம்துலில்லாஹ்! என்னுடைய அரசியல் வாழ்க்கையை நான் மிகவும் புனிதமாகக் கருதுகின்றேன். ஏனென்றால் இறைவனும் எனது அரசியல் வழிகாட்டி தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களும் இந்த மண்ணின் மைந்தர்களும் எனக்கு தந்த அமானிதமாகவே இதனைக் கருதுகின்றேன். என்னுடைய காலப்பகுதியில் நான் மிகவும் நேர்மையாகவே சிந்தித்திருக்கின்றேன். பழைய காலத்தைப் போல தண்ணீர் இல்லாத காட்டுக்கு நான் யாரையும் மாற்றவில்லை. அரசியலை பணம் பண்ணுகின்ற வியாபாரமாக கருதவில்லை. மக்களின் சமூக அபிவிருத்திக்காக ஒவ்வொரு கணமும் சிந்தித்து செயற்படுகின்றேன். அவ்வாறு செயற்படுகின்றபோது சிலர் பாதிக்கப்படலாம். அது எனது தனிப்பட்ட உணர்வின் காரணமாக ஏற்பட்டது அல்ல. பொது உணர்வின் பிரதிபலிப்பே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மாற்றுக் கட்சிக்காறர்கள் எதிரியாகப் பார்க்கலாம். நான் அவர்களை நண்பர்களாகவே நோக்குகின்றேன். என் மீது எரிச்சலும் பொறாமையும் கூட சிலருக்கு இருக்கலாம். அத்தகைய தன்மை இருக்குமா னால் அது இந்த ஊரின் அபிவிருத்தியில் நீங்கள் கொள்கின்ற எரிச்சலாகவே அமையும். நான் முஸ்லிம் அரசியலிலே தெளிவாக இருக்கின்றேன். நான் சமகால முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தூரமாக இருப்பதுகூட முஸ்லிம் அரசியலிலும் தலைவர் அஷ்ரஃபின் அரசியலிலும் எனக்கிருக்கின்ற தெளிவே அதற்கு காரணமாகும். ஐக்கிய தேசிய முன்னணி அரசு மாட்டிவைத்திருக் கின்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் உள்ள சிக்கல்களில் இருந்தும் பொ துக் கட்டுமாண விடயங்களிலும் முஸ்லிம் சமூகத்தின் சுதந்திரம் பற்றி நான் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றேன்.

இன்று இந்த விடயங்கள் பரிமாறப்படுகின்ற சமகாலத்திலே முஸ்லிம் சமூகம் அபிவிருத்தியிலும் தன்னிறைவு காணவேண்டும். அவ்வாறில்லாது வெறுமனே முஸ்லிம்களின் சுதந்திரத்திற்கான அறிக்கையினை மாத்திரம் விடுகின்ற அரசியலை என்னால் செய்யமுடியாது. அபிவிருத்தி என்ற மாயையில் நான் இருக்கவில்லை. தெளிவான முஸ்லிம் அரசியல் விடுதலை என்ற பாதையிலே காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்ற தந்திரபாயத்தோடு நான் இயங்கிக்கொண்டிருக்கின்றேன். தலைவர் அஷ்ரஃ பின் அரசியலிலும் இதுதான் இருந்தது. இலங்கை அரசியலில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளும் மக்கள் விடுதலை முன்னணியினரும் இன்று இதே நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றனர். கையிலே வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்காக அலைகின்ற முட்டாள்தனம் என்னிடமில்லை. முஸ்லிம்களின் உரிமை உரிமை என்று கூறி அறிக்கை களை விடும் போலித்தன அரசியலைச் செய்ய நான் விரும்பவில்லை. இந்த வரிசையிலேதான் எந்த அரசினால் முஸ்லிம்களை சரியாக கையாள முடியுமோ அந்த அரசிலே இருந்து கொண்டு முஸ்லிம் அரசியல் பற்றிய கருத்துக்களிலும் சரியான நிலைப்பாடுகளில் இருந்து கொண்டு சமூமும், தென் கிழக்கும் என்ன அபிவிருத்திகளைக் காணவேண்டுமோ அதனையும் செய்து கொண்டிருக்கின்றோம்.

தென் கிழக்கின் அபிவிருத்தி தொடர்பாக தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கு பல இலட்சியங்கள் இருந்திருக்கலாம். அவரது அரசியற் கனவுகளின் பெரும் மையமாக தென் கிழக்குப் பிராந்திய அபிவிருத்தி அமைந்திருந்தது. அதனை நோக்கிய அவரது இலட்சிய நகர்வுகள் முற்றுப்பெறுவதற்கு இடையில் நம்மீது அப்பொறுப்புக்களை விட்டுவிட்டு அவர் நம்மிடமிருந்து விடைபெற்று விட்டார். இறைவனுடைய நாட்டத்தால் அப்பொறுப்புக்களை சுமக்க வேண்டிய கடப்பாடு எனக்கும் வந்து சேர்ந்தது. சமகால முஸ்லிம் காங்கிரஸ் திசை மாறிச் செல்கின்றபோது தலைவர் அஷ்ரஃபின் கனவுகளைச் சுமப்பதற்காக நாம் எதனையும் இழந்து தயாராகவுள்ளோம். இந்த வரிசை யிலேதான் சம்மாந்துறையில் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளை ஆரம்பித்து வைத்திரு க்கின்றோம். உலமாக்களுக்கான ஒரு தலைமைக் காரியாலயம் இந்த மண்ணிலே உதயமாகி வருகிறது. இந்த மண்ணின் மக்களின் வாழ்க் கையோடு ஒட்டிய காணி நீர்ப்பாசனத் துறையை பெருமளவு புனரமைப்புச் செய்துள்ளேன். புதிய பாலங்கள் மூலம் கிராமங்களை இணைக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தை உருவாக்கியுள்ளேன்.பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை அபிவிருத்திப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளேன்.

மஸ்ஜித்களையும், மத்ரசாக்களையும் அபிவிருத்தி செய்யும் இலட்சியப் பாதையில் உள்ளேன். நகரிலே அழகிய சந்தைக் கட்டிடமும் பள்ளிவாசலும் பஸ்தரிப்பிடமும் கொண்டு அமையும் கனவினை நனவாக்கி வருகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக தேசிய ரீதியிலே அமையும் ஜனாதிபதி கலாசார நிலையம் ஒன்றையும், புனித பிரதேச பிரகடனத்தையும் மேற்கொண்டு வருகிறேன். இவையெல்லாம் என்னுடைய ஓரிரு வருட கால பாராளுமன்ற உறுப்பினர் காலத்தில் செயற்படுத்தப்பட்டு வருவதே. ஒரு சில தனிப்பட்ட நபரது அல்லது என்னுடைய கட்சிக்காரரது தேவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கலாம். ஊரின் அபிவிருத்தி என்றவகையிலே நீங்கள் எந்தவகையிலும் மற்றவர்களுடன் ஒப்பிடும்போது என்னை குறைகாண முடியாது. மாறாக என்னை நீங்கள் கனதியாகவே காணலாம். இந்த கருத்துக்களின் அடிப்படையில் நான் எதிர்க்கட்சி இல்லாத ஒரு அரசியலை இந்த மண்ணிலே உருவாக்க விரும்புகின்றேன். நாம் ஒன்றிணைந்து இன்னும் விரிவான அடிப்படையில் செயற்பட்டு இன்னும் பல்வேறு வளர்ச்சியை துரிதமாக காணமுடியும். சமூக நோக்கம் தவிர வேறு நோக்கம் நமக்குள் இருந்தால் அவற்றை நாம் பேசித் தீர்க்க முடியும். இன்ஷாஅல்லாஹ் எல்லாம்வல்ல இறைவனுடைய திருப்பொருத்தங்கள் நிறைந்த ஓர் ஊராக நமது ஊரை மாற்றுகின்ற பணியிலே நாம் ஒன்றினைவோம். இந்த மலர் தென் கிழக்குப் பிராந்தியத்திலே முதன்மை பெறுகின்ற சந்தைக் கட்டிடத்தை திறந்துவைக்கும் பணியின் பதிவாக வெளிவருகிறது. இதில் இந்த சந்தையினுடைய வரலாற்றைப் பற்றியும் குறிப்பிட வேண்டியுள்ளது.

நமது வரலாற்றின் ஆரம்ப கட்டங்களில் சம்மாந்துறை 'துறை' ஆக இருந்தபொழுது வர்த்தகப் பொருட்களை ஏற்றி இறக்கும் விற்பனை நிலைய மாக சம்மாந்துறை ஆலையடிப் பிரதேசம் திகழ்ந்திருக்கின்றது. இந்த வரலாற்று ரீதியான வர்த்தக செயற்பாட்டுத் தொடர்ச்சியையும், என்றும் இருந்தது போன்று கிழக்கின் வர்த்தகத்தினையும் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது. அதனடிப்படையில் சம்மாந்துறையின் மத்தியான ஹிஜ்றா சந்தி சந்தைக் கட்டிடத் தொகுதியை ஸ்தாபிப்பதற்கு நமது முதுபெரும் அரசியல்வாதிகள் பெரிதும் முயன்றிருக்கின்றார்கள். சுமார் நாற்பது வருடகால அரசியல் வரலாற்றில் அதனை அவ்வரசியல்வாதிகளால் சாதிக்க முடியாமல் போய்விட்டது. அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் உதவியால், இந்த மக்களின் ஒத்துழைப்பால் ஹிஜ்றா சந்தைக் கட்டிடத் தொகுதியை பூர்த்திசெய்ய முடியாமல் தடையாக இருந்த காரணிகளை 24 மணி நேரத்திற்குள் அகற்ற முடிந்தது. அதன்பேரில், கிழக்கிலே பெரும் வர்த்தக சந்தைக் கட்டிடத் தொகுதியாக ஹிஜ்றா சந்தைக் கட்டிடத் தொகுதியை பூர்த்திசெய்ய முடிந்து ள்ளது. இதற்கு ஒத்துழைத்த ஹிஜ்றா சந்தைப் பிரதேசத்தில் வாழ்ந்த குடும்பத்தினர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். நன்றி கூறுகின் றேன்.இவ்வத்தனை காரியத்தையும் எனக்கு செய்வதற்கு இறைவன் நாடியிரு க்கின்றான். அதி உத்தம ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக குமாரணது ங்க அவர்களும், மாண்புமிகு பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஸ அவர்களும், கிழக்கு உட்கட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா அவர்களும், ஏனைய அமைச்சரவை உறுப்பினர்களும் பெரிதும் உதவியுள்ள னர். இவ்வமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பை நல்கியிருக்கிறார்கள். அனைவருக்கும் மிக்க நன்றி!

குறிப்பாக கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் களுபகன, அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் சிறிவர்தன, அரசாங்க அதிபர் ஹேரத் அபேவீர, கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் (அபிவிருத்தி) அப்துல் மஜீத், கிழக்கு உட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஏ.எம். நஹியா, அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் யூ.எல்.ஏ. அஸீஸ், அம்பா ரைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பீர்முகம்மதுத்தம்பி, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம்.எம். நசீர், சம்மாந்துறை பிரதேச சபையின் விஷேட ஆணையாளரும், செயலாளருமான ஏ.எம். சுபைர் ஆகியோருக்கு எனது நன்றியினை நிச்சயம் நான் தெரிவிக்க வேண்டும்.

மேலும் என்னோடு ஒத்துழைக்கின்ற அம்பாரை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் ஏ.எல்.எம். நிசார், அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலய பொறியியலாளர் எம்.ஐ.எம். றாசிக், மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியக முகாமைத்துவப் பணிப்பாளர் பத்மசிறி, பொறியியலாளர் ஏ.ஆர். தஸ்தகீர், தொழில்நுட்ப உதவியாளர் இன்திக, ரத்ன நிர்மாண நிறுவகப் பணிப்பாளர் நிகால், முன்னாள் கட்டிட ஒப்பந்தக்காரர் ஏ.எம். அஸீஸ், கலைத்துவ உதவிகளை வழங்கிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.ஏ. றசூல், எனது தனிப்பட்ட உதவியாளர் எம்.ஐ.எம். நபீஸ் ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சம்மாந்துறையின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் இக்கட்டி டத் தொகுதியின் ஞாபகார்த்தமாக மலர் வெளியிடும் குழுவின் தலைவர் எஸ்.எல்.ஏ.சலாம், அதன் உறுப்பினர்கள், வாட் சபை முன்னாள் உறுப்பினர் கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. எனது இணைப்புச் செயலாளர்கள், அலுவலக ஊழியர்கள், இச்சந்தைக் கட்டிட நிர்மாணப் பணியில் ஆலோச னைகளையும் ஆதரவினையும் நல்கும் என் கட்சிக் காரர்கள், எப்போதும் என் பணிகளை விமர்சித்துக்கொண்டிருக்கின்ற எதிர்க்க ட்சிக்காரர்கள், எனது கண்ணின் மணிகளான சம்மாந்துறை மக்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். இறுதியாக என்னோடு எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கின்ற கண்ணியத்திற்குரிய உலமாக்கள், எல்லாவற்றுக்கும் மேலாக அனைத்தும் திருப்தியாக நடைபெற உதவுகின்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கும் நன்றிகூறுகின்றேன். தலைவர் அஷ்ரஃ பின் கனவான தென் கிழக்கின் உருவாக்கப் பணிகளுக்கு உதவும் பணிகளில் ஒன்றாக நமதூர் அபிவிருத்திப் பணிகளும் இடம்பெறுகின்றது என்ற திருப்தியுடன் பொது மக்களுக்கு இச்சந்தைக் கட்டிடத்தை கையளித்து திருப்தியுடன் விடைபெறுகின்றேன்.

நன்றி!

***எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்,***
பிரதியமைச்சர்,
கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE SECTION
உசாத்துணைப் பகுதி



**Messege From:**
**Hon. Tyronne Fernando, P.C.**
Governor
Northern & Eastern Provinces.

## MESSAGE OF FELICITATION BY THE HON. GOVERNOR NORTHEN & EASTERN PROVINCES.

I have great pleasure in extending my best wishes on the occasion of the ceremonial opening of the Hijra Modern Supermarket at Sammanthurai by Hon. Prime Minister of Sri Lanka

This was a long felt need of the people of Sammanthurai and now it has been accomplished through the efforts of Ministry of Infrastructure Development in the Eastern Province.

The market will cater to the immediate needs of the public in their door step. In the past people had to travel long distance to purchase their daily needs with immense transport difficulties.

Now the difficulties confronted by the people have been settled and I advise the people to make use of this opportunity well and fulfill their requirements.

I pray and wish this to be a successful venture.

Tyronne Fernando, P.C.
Governor
Northern & Eastern Provinces.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**K. Kalupahana**
Secretary,
Ministry of Infrastructure
Development in the Eastern Province

## MESSAGE FROM SECRETARY.

It is a pleasure to write this congratulatory message of good wishes on the occasion of the issue of this commemorative souvenir in connection with the opening of the impressive market complex in Sammanthurai town. There is no doubt that the Sammanthurai Hijra Market complex which is being opened today will not only serve the people of Sammanthurai town but also the hundreds of villages in the area. This is indeed a commendable achievement since the long-felt urgent need of the people of Sammanthurai is fulfilled now. This new asset is solely due to the endeavours and determined efforts of Hon. A L M Athaulla, Minister of Infrastructure development in the Eastern Province and Hon. M I Anver Ismail, Deputy Minister and this will serve several thousands of citizens of Sammanthurai and I believe this is really a contribution for the current development process of Sammanthurai town.

This will be a hub marketing centre to all market products of the area and villages around thus meeting the daily needs of the people of the area. The opening of this market will generate new job opportunities to everybody specially for the unemployed youth resulting in the expansion of the economy of the country. Also will facilitate exporters and importers of goods ready markets for their agricultural and industrial products and being a fishing area, fishing community could find ready markets for their products. Finally, this would fulfill a long felt need.

Since the construction of this building is a part and parcel of the National wealth of the entire nation, this should be treated as a national property and well maintained by the local authority for future generations.

I take this opportunity to extend my good wishes to the people of this region and to join with them in their joyous moment and to thank all who contributed for this achievement.

**K. Kalupahana**
Secretary, Ministry of Infrastructure
Development in the Eastern Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு.கே. சபாவதிப்பிள்ளை**
வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி
ஆணையாளர்,

## வாழ்த்துச் செய்தி.

இன்று மிகவும் கோலகலமாக திறந்துவைக்கப்படுகின்ற சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தைக் கட்டிடத் தொகுதி சார்பில், எனது வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். வடக்கு - கிழக்கு மாகாணத்திலேயே, கூடிய இடப்பரப்பைக் கொண்ட இந்த சம்மாந்துறைப் பிரதேசத்துக்கு இந்த வொரு சந்தைக்கட்டிடத்தொகுதி போதாது என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏனெனில் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய இந்த சம்மாந்துறைப் பிரதேசம் ஐந்து பிரதேச சபை உப அலுவலகங்களை உள்ளடக்கியதாகும். எனவே, ஆகக்குறைந்தது 05 சந்தைக் கடைத் தொகுதி களாவது உருவாக்கப்படவேண்டுமென, கௌரவ பிரதியமைச்சர் எம்.ஐ.அன்வர இஸ்மாயில் அவர்களையும், பிரதேச செயலாளரையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நகரசபையாக தரம் உயர்த்தப்படக்கூடிய நிலையிலுள்ள சம்மாந்துறைப் பிரதேச சபைக்கு இந்த சந்தைக் கட்டிடத் தொகுதி மிகுந்த ஒரு வரப்பிரசாத மாகும் என்பது கண்கூடு. இப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமை ச்சருமான கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் பாரிய முயற் சியின் மத்தியில் இந்த சந்தைக் கட்டிடத் தொகுதி அமைக்கப் பட்டு இருப் பதை நான் அறிவேன். இதன்மூலம், சம்மாந்துறைப் பிரதேச சபைக்கு எதி ர்காலத்தில் கூடிய வருமானங்களை ஈட்டுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதுமாத்திரமல்ல, பல மில்லியன் ரூபா பெறுமதி உடைய ஒரு கட்டிடத் தொகுதியையும் சம்மாந்து றைப் பிரதேச சபை ஒரு சொத்தாகப் பெற்றுக்கொள்கின்றது. இவ்வாறு எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் அவற் றினுடைய வருமானங்களையும், சொத்துக்களையும் அதிகரிக்கச் செய்யுமாக இருந்தால், எந்த உள்ளூராட்சி மன்றத்திற்கும் நிதிப்பற்றாக்குறை ஏற்படாது, அவை சுயமாக செயற்பட வழியேற்படுமென எதிர்பார்க்கின்றேன். கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு அமைச்சின் நிதி மூலம் அயராத முயற்சியினால் இந்த சந்தைக் கட்டிடத் தொகுதியை உருவாக்கிய கௌரவ பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும், அவரோடு இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டுக் கொண்டு செல்கின்ற சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர், உத்தியோகத்தர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பது போல தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நல்லமுறையிலே பயன்படுத்தி ஊருக்கு மறக்கவொண்ணாத பல சேவைகளை ஆற்றிவரும் கௌரவ பிரதி அமைச்சர் அவர்களின் சேவை மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, இந்த ஊர் பல வழிகளிலும் முன்னேற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

***கே.சபாபதிப்பிள்ளை,***
வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்,
உள்ளூராட்சி திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**එච් එම් හේරත් අබේවීර**

දිසාපති අම්පාර දිස්ත්‍රික්කය

## අම්පාර දිසාපතිගේ පණිවුඩය

සමන්තුරයේ නවීන වෙළඳපොල ගොඩනැගිලි සංකීර්ණය අතිගරු ජනාධිපතිතුමිය අතින් 2005-07-09 දින විවෘත කරනු ලැබීම පිළිබඳ විශේෂ අවස්ථාව නිමිතිකොට ගෙන පළකරනු ලබන සමරු කලාපයේ මාගේ අදහස් ද සටහන් කිරීමට අවස්ථාව ලැබීම පිළිබඳව සතුටුවෙමි

වර්තමාන ආර්ථික ක්‍රියාවලිය තුල නිෂ්පාදන අලෙවි කිරීම හා පාරිභෝගික සේවා පවත්වාගෙන යාම සඳහා පහසුකම් සහිත ස්ථානවල අවශ්‍යතාවය පිළිගත් කාරණයක් වන අතරල සමන්තුරය නගරයේ එවැනි ස්ථානයක් ඉදිකරනු ලැබීමෙන් සමන්තුරය නගරවාසීන්ට පමණක් නොව ප්‍රදේශවාසීන් සියලු දෙනාටම ඉමහත් ප්‍රයෝජනයක් සැලසෙනු නොඅනුමානයග

රුපියල් මිලියන 30 ක පමණ වියදමින් මෙවැනි පහසුකම් සහිත නවීන ගොඩනැගිලි සංකීර්ණයක් සමන්තුරය නගරයේ ඉදිකිරීමට හැකිවුයේ දිගාමඩුල්ල දිස්ත්‍රික්කයේ ගරු පාර්ලිමේන්තු මන්ත්‍රී සහ නැගෙනහිර පළාතේ යටතල පහසුකම් සංවර්ධන නියෝජ්‍ය අමාත්‍ය එම් අයි අන්වර ඉස්මායිල් මැතිතුමාගේ අප්‍රතිහත ධෛර්යය නිසා බව සමන්තුරය ජනතාව පිළිගන්නවා ඇතග ගරු නියෝජ්‍ය අමාත්‍යතුමාගේ මග පෙන්වීම මත ක්‍රියා කරමින් මේ කාර්යය නිම කිරීම සඳහා කැපවීමෙන් කටයුතු කළ සමන්තුරය ප්‍රාදේශිය ලේකම් - එම් එම් නසීර් මහතාටත් සමන්තුරය ප්‍රාදේශිය සභා ලේකම් - ඒ එම් එම් සුබයිර් මහතා ඇතුලු අනිකුත් නිලධාරීන්ටත් ප්‍රශංසා කරමිග

ප්‍රදේශයේ ජනතාවගේ ජීවන තත්ත්වය ඉහල නැංවීම සඳහා මේ ව්‍යාපෘතිය තුලින් ඉඩ සැලසේවා යැයි සුභාශිංසනය කරමිග

එච් එම් හේරත් අබේවීර
දිසාපති
අම්පාර දිස්ත්‍රික්කය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**A .A .Majeed**
**Director ( Development)**
Ministry of Infrastructure
development in the Eastern Province

## MESSAGE FROM THE DIRECTOR (DEVELOPMENT)

It gives me great pleasure to send greetings and congratulatory message on the occasion of the ceremonious opening of the Hijra Modern Supermarket Complex. As a public Administrator of the area for more than twenty years, I am sure that the opening of Market complex marks a new chapter in the development path of the Sammanthurai cluster, where the market complex is a long felt need of the people for their socio-economic prosperity.

For me, as the Director (Development) of the Ministry of Infrastructure Development in the Eastern Province it is indeed a moment of great pleasure to coordinate the construction of this Market complex under the instruction of the Hon. A L M Athaulla, Minister of Infrastructure Development in the Eastern Province and the Hon. M I Anver Ismail, Deputy Minister of Ministry of Infrastructure Development in the Eastern Province and the guidance of Mr. K Kalupahana, Secretary, Ministry of Infrastructure Development in the Eastern Province.

I hope that people of the area will exploit the opportunities and potentials fo the Market complex to revive their economic prosperity in the post conflict environment.

Finally, I wish all the beneficiaries to have a great business environment and prosperity and also thank all contributors towards this timely achievement.

A .A. Majeed
Director ( Development0
Ministry of Infrastructure development in the Eastern Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**CECB**
**G H Pathmasiri**
Deputy General Manager .
Engineer Procure & Construct Unit of
CENTRAL ENGINEERING CONSULTANCY
BUREAU – KANDY BASE OFFICE.

## MESSAGE FROM THE DEPUTY GENERAL MANAGER (EPC) ENGINEER PROCURE & CONSTRUCT DIVISION OF CECB

It gives me a great pleasure to pen this message to the Souvenir published on the occasion of opening the Market Complex at Sammanthurai in the Eastern province of Sri Lanka. I believe that, it is important to mention, how CECB Kandy Base office came so far to Sammanthurai, to design and construct this Market Complex. the most beautiful holding in the Ampara area, undoubtedly it is the OPD at Ampara Hospital which was done by CECB. Having seen this building, Hon. Minister, Ministry of Infrastructure development in the Eastern Province Mr. A L M Athaulla invited CECB to take part in the Eastern Province Development.

The completion of two storied OPD building in a record time of 70 days in high professional standards is the high light in the Eastern Province. We take this opportunity to pay our tribute to the Hon. Minister Mr. Athaulla for guiding us to create such a beautiful building in a very short time. The Hon. Deputy Minister of Ministry of Infrastructure Development in the Eastern Province Mr. M I Anver Ismail thought of taking our services to his electorate after seeing above buildings. These are the high lights of our interesting journey from Kandy Central Hilly region to Akkaraipattu and Sammanthurai the valley in Eastern.Sri Lanka

CECB Kandy Base Office has great pleasure of being partners of the Ministry of Infrastructure Development in the Eastern Province and are very glad and proud for bringing to reality the Hon. Anver Ismail, Deputy Minister's Dream of the beautiful architecturally and aesthetically pleasing Super Market Complex to decorate the town of Sammanthurai which is being offered to the public today, just in 100 days. We pay our tribute and regard to both the Hon. Minister and Hon. Deputy Minister of Infrastructure Development for placing such high confidence on CECB. We firmly believe this building will be maintained to long last as at today.

**G H Pathmasiri**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யூ. எல்.ஏ. அஸீஸ்
அம்பாறை மாவட்ட மேலதிக
அரசாங்க அதிபர் அவர்களது

## ஆசிச் செய்தி

சந்தைக் கட்டிடத் திறப்பு விழா ஞாபகார்த்த மலருக்கு இச்செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கிழக்கு மாகாணத்தில் பெருமளவு முஸ்லிம்களைக் கொண்ட நகரங்களில் ஒன்றாகிய சம்மாந்துறை இன்று பல துறைகளிலும் பெரும் வளர்ச்சியைக் கண்டு வருகின்ற பிரதேசமாகும். கல்விச் செல்வமும், பொருளாதாரச் செளிப்பும், ஆத்மீக விழிப்புணர்வும் இங்கே ஒருமித்துக் காணப்படுவது இறைவனது பெரும் கொடையாகும். இத்தனை சிறப்புக்களைக் கொண்ட இப்புனித மண்ணில் காலத்துக்கு காலம் சிறந்த தலைவர்கள் உருவாகி கல்விக்கும், பொருளாதார வளத்துக்கும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. அந்த வரிசையில் மறைந்த பெருந்தலைவர் அஷ்-ஷஹீத் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களது வழி நின்று கடந்த பல ஆண்டுகளாக சம்மாந்துறை யின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பினை கௌரவ பிரதியமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அவர்கள் செய்து வருகின்றார்கள். சம்மாந்துறை மண்ணின் உள்ள அனைத்துக் குறைபாடுகளும் அடையாளம் காணப்பட்டு அன்னவரினால் படிப்படியாக நிவர்த்தி செய்யப் பட்டு வருகின்றன.

சம்மாந்துறை நகரின் முக வெற்றிலையாக அமைந்துள்ள ஹிஜ்றா வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய சந்தைத் தொகுதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் திறந்து வைக்கப்படுகின்ற நிகழ்வானது கௌரவ பிரதியமைச்சர் அவர்களினது ஆற்றலினையும் ஜனாதிபதியவர்கள் சம்மாந்துறை மக்களையும், பிரதியமைச்சர் அவர்களையும் எந்தளவுக்கு கௌரவப்படுத்துகிறார் என்பதன் வெளிப்படையாகவும் அமைந்துள்ளது.கடந்த காலங்களில் கூட இலங்கையின் பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களை எல்லாம் அழைத்து வந்து சம்மாந்துறையின் சகல பிரதேசங்களிலும் மக்களின் தேவைகளை கௌரவ பிரதியமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்துள்ளமை வரலாற்றுச் சான்றுகளாக அமையும் என்பதில் ஐயமில்லை. எதிர்வரும் காலங்களில் அன்னாரது சேவைகள் சிறக்கவும், இதய சுத்தியான அவரது செயற்பாடுகள் வெற்றியடையவும் அனைவரதும் இணைந்த ஆதரவும், பிரார்த்தனைகளும் என்றென்றும் அவருக்கு பக்கதுணையாக அமையவும் இறைவனை வேண்டுகின்றேன்.

யூ.எல்.ஏ. அஸீஸ்,
மேலதிக அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எம்.எம். நசீர்**
பிரதேச செயலாளர், சம்மாந்துறை.

ஆசிச் செய்தி:

சம்மாந்துறை நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதிக்கான நினைவு மலர் வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.சம்மாந்துறை வாழ் மக்களின் நீண்டகாலத் தேவைகளில் தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினைகளில் ஒன்றான பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி இல்லாத குறையை நிவர்த்திசெய்யும் நோக்கமாக பல ஆண்டுகள் முயற் சித்தும் பயனளிக்காத நிலையில் கௌரவ கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் சட்டத்தரணி எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் (பா.உ.) அவர்களின் அயராத முயற்சியின் பிரதிபலனாக அவர் கண்ட கனவு நனவாக மாறியது இதற்கு என்றென்றும் இவரை இவ்வூர் மக்கள் பாரட்டவும் நன்றி கூறவும் கடைமைப்பட்டவர்களாகவே உள்ளனர்.

சுமார் 50 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளும் கொண்ட நவீன சந்தைக் கட்டிடத் தொகுதி சம்மாந்துறையின் இதயம் என்று வர்ணிக்கப்படும் ஹிஜ்றா சந்திக்கு அருகாமையில் இஸ்லாமிய கலை கலாசார விழுமியங்கள் பிரதிபலிக்கத்தக்கதாக அழகிய தோற்றத்தில் காட்சியளிப்பது அனைவரையும் கவர்ந்ததாகும். இவ்வாறான நவீன சந்தைக் கட்டிடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டமை எமது ஊரின் அனைத்து மக்களினதும் மிக முக்கியமான தேவையை நிவர்த்தி செய்வதுடன், மன ஆறுதலையும் திருப்தியையும் தருகிறது.

அந்தவகையில் இப்பாரிய பணியை சிறப்பாகச் செய்வதற்கு கௌரவ பிரதியமைச்சருடனும் என்னுடனும் இணைந்து செயற்பட்ட சகல உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் என்றும் பாராட்டுக்குரியவர்கள். நினைவுகூறப்பட வேண்டியவர்கள். விசேடமாக தாங்கள் மனமுவர்ந்து தங்க ளது குடியிருப்புக்களை, வியாபாரம் செய்த இடங்களை இக்கட்டிடத் தொகுதி அமைப்பதற்கு விட்டுக்கொடுப்புடனும் நன்னோக்குடனும் செயற்பட்ட வர்களுக்கும் இவ்வூர் மக்கள் விசேட நன்றிகூற கடமைப்பட்டவர்களாகும். மேலும் இக்கட்டிடத் தொகுதி கட்டப்பட்ட நோக்கம் நிறைவேறி சகல தரப்பினரும் நன்மைபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். நல்லவை நடக்கட்டும். அதை நாம் ஏற்றுக்கொள்வோம்.

**எம்.எம். நசீர்,**
பிரதேச செயலாளர்,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எம்.எஸ். பீர்முகம்மதுத் தம்பி**
அம்பாரைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி
ஆணையாளர் அவர்களின்

## ஆசியுரை

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற சம்மாந்துறை நகரம் அம்பாரை, கல்முனை, நெயினாகாடு ஆகியவற்றின் மத்தியில் அமைந்துள்ள ஒரு சந்திக் குடியிருப்பாகும். இச்சந்திக் குடியிருப்பின் வர்த்தக தொடர்புகள் இயல்பானது. இந்தவகையில் சம்மாந்துறை ஹிஜ்றா சந்தியில் தற்பொழுது நிமிர்ந்து நிற்கும் இந்த சந்தைக் கட்டிடத் தொகுதியானது, இதன் வளர்ச்சியில் ஒரு ஆரம்ப கட்டமேயாகும். இதன் எதிர்கால வளர்ச்சி பல நவீன வசதிகளைக் கொண்டதும், பல அடுக்கு மாடிகளைக் கொண்டதுமான ஒரு கட்டிடத் தொகுதியாக எதிரகாலத்தில் அமையுமென்று தீர்க்கதரிசனத்துடன் கூறிக்கொள்கின்றேன்.

இந்த சந்தைக் கட்டிடத் தொகுதி அமைந்துள்ள இடத்தின் வரலாற்றினை நோக்கும் போது இக்கட்டிடத் தொகுதிற்கு பின்னால் பாரிய முயற்சியொன்று செயற்பட்டு வந்துள்ளமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. அத்துடன், இதனுடைய வளர்ச்சி படிப்படியாக வளர்ந்து வந்துள்ளமையையும், இறுதியில் இவ்வாறான பாரிய கட்டிடத் தொகுதியொன்றினை சம்மாந்துறை கண்டுள்ளத னையும் என்னால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சம்மாந்துறையிலுள்ள பெரியார்களினதும், வயதில் முதிர்ந்த பொதுமக்களினதும் கூற்றுக்களை அவதானிக்கின்ற பொழுது, மக்கள் குடியிருப்பாக இருந்த நிலம் இன்று பல இன மக்களும் சுமுகமாக வந்து பொருட்களை விற்பனை செய்யவும், கொள்வனவு செய்யவும் கூடிய வசதிகளைக் கொண்ட ஒரு பாரிய சந்தை யாக வளர்ச்சியடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்த நிலத்தை சந்தையாக ஆக்க வேண்டும் என முன்னோர்கள் கண்ட கனவு இன்று நனவாகியுள்ளது. இச்சந்தை ஆரம்பத்தில் மீன்களும், மரக்கறிகளும் விற்கின்ற சந்தையாக இருந்து படிப்படியாக முன்னேறி மல்கம்பிட்டி பாதையோரமாக ஒரு கடைத்தொகுதியையும் அதன் பின் அதில் மேல்மாடிகளையும் அது பெற்றுள்ளது. அதன் பின்னால் சந்தையின் முற்பகுதியில் பல சரக்குக் கடைகள், மற்றும் இறைச்சிக் கடைகளும், சிற்றுண்டிச்சாலையையும் பெற்று சிறந்து விளங்கியது. சந்தையின் மத்தியிலே மீன் சந்தை அதனோடு இணையப்பெற்றுள்ளது அதன் வியாபாரத்தை ஊக்குவிக்கின்ற நடவடிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தை நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், சந்தையை சூழவிருந்த குடியிருப்புக் கொட்டில்கள் சந்தையின் அழகை கெடுத்துக் கொண்டிருந்தது. அவற்றில் குடியிருந்தவர்களை அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை அங்கிருந்து அகற்றிவிட்டு, அந்த இடத்தில் இந்த கடைத்தொகுதி அமைக்கப்பட்டிருப்பது ஒரு பாரிய முயற்சியாகும். ''போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும்'' என்ற மனநிலையோடு ஊரின் நன்மை கருதி செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சருமான கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது திணைக்களம் சார்பாகவும் எனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரவித்துக் கொள்கின்றேன். அத்தோடு, இவ்விடயத்தில் அமைச்சருக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டு, இக்கடைத்தொகுதி அமைக்கப்பட ஒத்துழைப்பு வழங்கிய பிரதேச சபை செயலாளர், மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

***எம்.எஸ். மீர்முகம்மதுத்தம்பி,***
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
உள்ளூராட்சித் திணைக்களம்,
அம்பாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஏ.எம்.எம். சுபைர்**
சம்மாந்துறை பிரதேச சபையின் விஷேட
ஆணையாளரும், செயலாளரும்,

## ஆசிச் செய்தி.

சம்மாந்துறை ஹிஜ்றா சந்தியில் அலங்கார வேலைப்பாடுகளுடன், அமைக்கப்பட்டிருக்கும் இரு மாடிகளைக் கொண்ட சந்தைக் கட்டிடத் தொகுதி இன்று பொதுமக்களுக்காக திறந்துவைக்கப்படுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியும் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சருமான கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் அயராத பாரிய முயற்சிக ளினால் கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து இந்த சந்தைக் கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. இந்த சந்தை அமைக்கப் பட்டுள்ள நிலத்தில் முன்பு மக்கள் குடியிருப்புக்களும், சிறுசிறு வியாபார நிலையங்களும், ஒரு பகுதியில் சந்தையுமே இயங்கி வந்தது. அந்தச் சிறிய சந்தையை பெரிதாக்க வேண்டுமெனும் நோக்கில் அப்போதைய அரசியல்வாதிகளும், பொது மக்களும் மேற்கொண்ட முயற்சியினால், சந்தை படிப்படியாக உயர்வடைந்து இன்று இந்நிலைக்கு வந்துள்ளது.

இந்த சந்தை வளவில் முன்பு குடியிருந்தோர் அங்கு இருக்கும் வரை சந்தை அமைப்பு வேலை நடைபெறாது எனவும், சந்தை அமைப்புக்கு இடம் போதாது என்ற காரணத்தினாலும், அங்கு குடியிருந்தவர்களை வேறு இடங்களில் குடியமர்த்துவது எனவும், அவர்களுக்கு குடியிருக்க நிலமும், குறைந்த வாடகைக்கு ஒரு கடையறையும் வழங்குவதாகவும் அப்போது நெசவுக் கைத்தொழில் அமைச்சராகவிருந்த கௌரவ எம்.ஐ. அப்துல் மஜீட் (பா.உ.) அவர்களால் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் ஒரு சாரார் அதனை ஏற்றுக்கொண்டாலும், இன்னும் ஒரு சாரார் அதற்கு உடன்படாது இருந்துள்ளார்கள். உடன்படாதது மட்டுமன்றி கட்டக் கூடாது எனவும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அங்கு குடியிருந்தோர்களின் நிலங்களுக்கு உத்தரவுப் பத்திரமே வழங்கப்பட்டிருந்த காரணத்தினால், அவற்றை இரத்துச் செய்து அங்கு குடியிருந்தவர்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு சம்மாந்துறை முன்னாள் பிரதேச செயலாளர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். காலத்திற்குக் காலம் பல விசாரணைகள் இடம்பெற்றும், ஒன்றுகூடல்களும், கலந்துரையாடல்களும் நடைபெற்றும் வந்துள்ளன. இதன்மூலம் அங்கு குடியிருந்த சிலர் நிலத்தை விட்டு வெளியேறினார்கள். சிலர் நிலத்தை விட்டு அகலமுடியாது எனக்கூறி அங்கே இருந்து வந்துள்ளார்கள். அங்குள்ள அனைவரையும் பூரணத்துவமாக வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், மல்கம்பிட்டி வீதிப் பக்கமாக 12 அறைகளைக் கொண்ட கடையறைகள் அமைக்கப்பட்டன. அடுத்த கட்டமாக அதற்கு மேல்மாடியில் 11 கடையறைகள் அமைக்கப்பட்டன. இவ்விரண்டு அமைப்புக்களும் வெவ்வேறு நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று சந்தையின் உட்பக்கமாக சில்லறை வியாபாரம், மரக்கறி வியாபாரம், இறைச்சி வியாபாரம் என்பனவற்றிற்காக 20 கடையறைகள் உருவாக்கப்பட்டன. அத்தோடு மீன் சந்தையும் அங்கு அமைக்கப்ப ட்டது. இவ்வாறான காலகட்டத்தில் அங்கு இயங்கிவந்த சந்தையை தற்காலிக ஏற்பாடாக சம்மாந்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு உரித்தான காணியில் சந்தை இயக்க வைக்கப்பட்டது. சந்தை அமைப்பு வேலை நடைபெற்று முடிந்ததும் தற்காலிக சந்தை மூடப்பட்டு, நிரந்தர சந்தைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

இவ்வளவும் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், சந்தை நிலத்தில் உரிமை கோரிக்கொண்டு இடத்தைவிட்டு அகலாது 09 பேர் அதிலேயே குடியிருந்து வந்தார்கள். அவர்களை அகற்றுவது மிகுந்த சிரமங்களை தந்துகொண்டிருந்தது. சந்தை அமைப்பு வேலைகளுக்கு அவர்களது குடியிருப்பு தடையாக இருந்த அதேவேளை, சந்தையின் அழகை வெளியில் தெரிய முடியாதளவு அவர்களது குடியிருப்புக்கள் அமைந்திருந்தது. அத்துடன், இடப்பற்றாக்குறையும் நிலவியது. அவர்கள் இறுதியாக குடியிருந்த அந்த நிலத்திலேயேதான், இன்றைய புதிய கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டு அழகாகக் காட்சியளிக்கின்றது. அந்த இடத்தைவிட்டு அகலாது விடாப்பிடியாக இருந்த அந்த 09 பேருடன் கலந்துரையாடிய தற்போதைய அமைச்சர் கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள், அவர்களது விருப்பங்களைப் பெற்று அவர்களது கோரிக்கைளை நிறைவேற்றி ஒவ்வொருவருக்கும் குடியிருக்க வளவும், குறைந்த வாடகையில் கடையறை ஒவ்வொன் றும் தருவதாக வாக்களித்து அவர்கள் அனைவரையும் இணங்கச் செய்து சந்தைக் கட்டிடத் தொகுதி அமைப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்கள். ''கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்'' என்பது போல் கௌரவ அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் பேச்சுக்கு மதிப்பளித்து நிலங்களைவிட்டு அகன்றோர், அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரும், தற்போதைய கௌரவ அமைச்சருமான எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களும், சம்மாந்துறைப் பிரதேச செயலாளரும், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளரும், அரசாங்க அதிபரின் முன்னிலையிலும், சட்டத்தரணி ஒருவரின் முன்னிலையிலும் அவர்களது கோரிக்கைகள் உள்ளடங்கிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டால் மாத்திரமே நாங்கள் நிலங்களை விட்டு அகல்வோம் என்று கூறியதன் நிமித்தம், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அதன் பிரதிகள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டன.

சந்தைக் கட்டிடத் தொகுதி அமைப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்ட, அந்த நோக்கம் வெற்றி பெறுவதற்கு வழிவகுத்த கௌரவ அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும், கௌரவ அமைச்சர் அவர்களின் கூற்றுக்கமைய ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர் அவர்களுக்கும், சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஜனாப். எம்.எம். நசீர் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன், சந்தை அமைப்பு வேலைக்காக நிலங்களை விட்டு வெளியேறிய அனைவருக்கும் நன்றிகூறிக் கொள்கின்றேன். மற்றும், சந்தை அமைப்பு வேலைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பாதிப்புக்குள்ளான வர்த்தகர்களுக்கும், கட்டிட வேலையை மேற்கொண்ட ஒப்பந்தகாரருக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், மற்றும் இதில் யார்யாரெல்லாம் அவர்களது கடமைகளை ஆற்றினார்களோ அவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.இந்த சந்தையமைப்பு வேலைக்கு நில உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்பதோடு, இதோடு தொடர்புடைய ஒருசில அரசஊழியர் களும் இந்த அமைப்பு வேலைக்கு தடையாக இருந்தார்கள் என்று கூறினால் மிகையாகாது. இவ்வாறான ஒரு கட்டிடத் தொகுதி இக்காலகட்டத்தில் அமைக்கப்படக்கூடாது என்பது ஒருசிலருடைய நோக்கமாக விருந்தது. 50 க்கு மேற்பட்ட கடைய றைகளைத் தன்னகத்தே கொண்டு இலங்கும் இந்த சந்தைக் கட்டிடத் தொகுதி விற்பனையாளர்களுக்கும், கொள்வனவாளர்களுக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு ஒருசில வாரங்களுக்கு முன் இரு அரச ஊழியர்கள் என்னிடம் வந்து இந்தப் பிரதேச சபைக்கு நீங்கள் விஷேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள். இந்தப் பிரதேசத்தினுடைய நடவடிக்கைகள் அனைத்திலும் உங்களது விருப்பம் தொனிக்க வேண்டும். இந்த சந்தைக் கட்டிடத் தொகுதி இப்பொழுது நமக்கு அவசியமானதல்ல. இந்த அமைப்பு வேலைகளை உங்களிடம் கேட்டுத்தான் அமைச்சரும் மேற்கொள்ள வேண்டும். இந்த பிரதேச சபைக்கு மக்களால் தெரிவுசெய்ய ப்பட்ட ஒரு தவிசாளர் இருந்தால், அவர் இதற்கு தடைவிதித்து இருக்கலாம். அப்படியிருக்க அந்த தலைவரின் இடத்தில் இருந்து செயற்படும் தாங்கள் ஏன் அதற்கு தடையாக இருக்கக்கூடாது என்று அந்த இருவரும் என்னிடம் கூறினார்கள். அந்த இருவரில் ஒருவர் சம்மாந்துறை பிரதேச சபை உத்தியோகத்தர்களில் ஒரவராவார். ஊரின் அபிவிருத்திக்காகவும், ஊரின் நன்மைக்காகவும் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஆதரவு வழங்க வேண்டியது எனது கடமையாகும் எனவும் நான் ஒரு அரச உத்தி யோகத்தன் ஆதலால், இதற்கு எனது பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் நான் ஒரு அரசியல்வாதி அல்ல எனவும் அவ்விருவரிடமும் கூறியனுப்பினேன்.

இவ்வாறு பற்பல எதிர்ப்புக்கள், இடர்பாடுகள் போன்றவற்றின் மத்தியிலேயே இவ்வாறான கட்டிடமைப்பு வேலை நடைபெற்று முடிந்துள்ளது. இவ்வாறு பற்பல எதிர்ப்புக்களையும் எதிர்கொண்டு, எதிர்த்தவர்களை எல்லாம் அணைத்தெடுத்து அவர்களது மனங்களை வென்று அந்த இடத்திலேயே சந்தையமைக்க வேண்டுமென்று விடாப்பிடியாக இருந்து செயற்பட்டு, கடந்தகாலத்தில் நிறைவேற்றப்படாதவொரு கட்டிட அமைப்பு வேலையை நிறைவேற்றி சரித்திரத்தில் இடம்பிடித்துக்கொண்ட கௌரவ அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் இச்சேவை சம்மாந்துறையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வாகும். மேலும் சரித்திர நாயனாகிவிட்ட அவரது சேவை முன்னெடுத்துச் செல்லப்பட இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பதற்கொப்பாக கௌரவ அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் சேவையினால் அவரை ஈன்றெடுத்த தாய் மாத்திரமல்ல; அவரது தாய் மண்ணும் இன்று மகிழ்ச்சியடைகிறாள்.

**ஏ.எம்.எம். சுபைர்,**
செயலாளர்/அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
பிரதேச சபை அலுவலகம், சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ஹாஜ் மௌலவி **எம்.பி. அலியார்** (தேவ்பந்தி)
சம்மாந்துறை ஜம்இய்யதுல்
சபைத் தலைவர் அவர்களின்

## ஆசிச் செய்தி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

கண்மணி நாயகம் ரசூல் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்லியவனாக இந்த செய்தியை எழுதுகின்றேன்.

சம்மாந்துறை ஜம்இய்யதுல் உலமா சபையின் சார்பில் இந்த செய்தியை விடுப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். சம்மாந்துறையினுடைய முக்கியமான தேவைகளில் ஒன்று அல்ஹம்துலில்லாஹ் இன்று பூர்த்தியடைகின்றது. ஹிஜ்றா சந்தையினை நிர்மாணிப்பதில் நமது ஊரின் மக்கள் பிரதிநிதிகள் பலர் பங்கெடுத்தாலும் இன்று அதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து பூர்த்திசெய்திருக்கின்ற பெருமையை சம்மாந்துறை மக்களுடைய பிரதிநிதி சகோதரர் அன்வர் இஸ்மாயில் பெற்றிருக்கின்றார். அல்லாஹுத்தஆலா அவருக்கு நல்ல ஹிதாயத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்க வேண்டும்.

இந்த சந்தையின் முன்பகுதியிலே சொந்தக்காரர்களாக இருந்தவர்களுடைய பிரச்சினைகளை சிக்கலில்லாது மஷுறா அடிப்படையிலே அவர் தீர்த்துவைத்ததை நான் பாராட்டுகின்றேன். சந்தையை மக்கள் தமது தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அன்றி வீண்விரயம் செய்கின்ற இடமாக, பொழுது போக்கின்ற இடமாக மாற்றிக்கொள்ளாது இருக்க வேண்டும். அல்ஹம்துலில்லாஹ் நமது சந்தையோடு பள்ளிவாசலும் அமைந்திருக்கிறது. நாம் பள்ளிவாசலுடைய புனிதத்தை பாதுகாக்க வேண்டும். தொழுகை நேரங்களில் சந்தையின் அமர்க்களத்தை குறைத்து தொழுகையுடைய கண்ணியத்தைப் பேணவேண்டும். சம்பூரணமாக நமது மக்கள் இஸ்லாத்திற்குள் நுழைந்து கொள்ள வேண்டும். அதற்கு அல்லாஹுத்தஆலா அருள்புரிய வேண்டும். இச்சந்தையை அமைப்பதற்காக உழைத்த பாராளுமன்றப் பிரதிநிதிகள், பிரதேச சபையினர், பொதுமக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவருக்கும் அல்லாஹுத்தஆலா அருள்பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

அல்-ஹாஜ், மௌலவி **எம்.பி. அலியார்** (தேவ்பந்தி),
அமீர், மஜ்லிஸ் அஷ்ஷுறா,
தலைவர் - ஜம்இய்யதுல் உலமா,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம நம்பிக்கையாளர்
கலாபூஷணம் , அல்-ஹாஜ் மௌலவி
**A.C.A.M. புஹாரி (அல்-கபூரி) J.P.**

## ஆசிச்செய்தி.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹிம்.

சம்மாந்துறை நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள நவீன சந்தை கட்டிடத் தொகுதியை அதிமேகு ஜனாதிபதி சந்திக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க அவர்கள் திறந்து வைக்கும் வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்வினை ஆவணப்படுத்தும் மலருக்கு சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையின் பிரதம நம்பிக்கையாளர் என்ற வகையில் ஓர் ஆசிச்செய்தியைக் கேட்டமைக்காக முதற்கண் எனது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.''அல்ஹம்துலில்லாஹ்"

ஒரு நகரின் துரித பொருளாதார அபிவிருத்திக்கு பலமுக்கிய அம்சங்கள் தேவை, அவற்றுல் மிகப்பிரதானமான ஒன்றுதான் சகல வசதிகளும் கொண்ட ஒரு சந்தைக்கட்டிடத் தொகுதியாகும் ஒரு நகரின் சந்தை வாய்ப்பு அதிகரிக்கும்போது உற்பத்தியும் தொழில் வாய்ப்பும் அதிகரிப்பதுடன் மொத்த வியாபரமும் சில்லறை வியாபாரமும் சிறந்து விளங்கும். இதனால் அந்தப்பிரதேச மக்களின் வாழ்கைத்தரமும் மேலோங்கும் என்பதில் சந்தேகமில்லை.

சம்மாந்துறையைப் பொறுத்தவரை அது அம்பாரை மாவட்டத்திலே மிகப் பழமைவாய்ந்த இரண்டு பட்டின சபைகளில் ஒன்று, கல்முனையும் சம்மாந்துறையும் 1952 ம் ஆண்டு முதல் பட்டின சபையின் அந்தஸ்தைப் பெற்றிருந்தாலும் கல்முனையில் ஏற்பட்ட வளர்ச்சியை சம்மாந்துறையில் காணமுடியவில்லை. மிக நீண்டகாலமாக பட்டினம் இல்லாத பட்டினசபை யாகவே சம்மாந்துறை திகழ்ந்து வந்துள்ளது.

1977 க்குப் பின்னர்தான் சம்மாந்துறையின் தலை எழுத்தை மாற்றுவதற்கான திட்டங்கள் ஆட்சியாளர்களினால் ஆரம்பிக்கப்பட்டன. ஹிஜ்றா சந்திக்கான பெயர்மாற்றம், நீர்த்தாங்கி, ஜூம்ஆப் பள்ளிவாசல், சந்தைக்கட்டிடத்தொகுதி, நகர மண்டபம், பலநோக்கு கூட்டுறவுச் சங்க விஸ்தரிப்பு, கல்விக்கந்தோர், வங்கிகள், பண்டகசாலைகள், தனியார் கடைத்தொகுதிகள் என்பன அமைக்கப்பட்டன.மின்சார வசதிகளும், குழாய் நீரும் இந்தப்பிரதேசத்தின் பெறுமானத்தை அதிகரிக்கச் செய்தன தற்போது ஹிஜ்றா சந்தியில் இருந்து பிரிந்து செல்லும் நான்கு பாதைகளிலும் ஒவ்வொரு அடி நிலமும் இலட்ச ரூபாய் பெறுமானம் உள்ள நகரமாக சம்மாந்துறை மாறிக் கொண்டு வருவது நமக்கெல்லாம் மகிழ்வையூட்டுகிறது.

இந்தப் பின்னனணியில்தான் நாம் ஹிஜ்றா சந்தின் சந்தைக்கான கட்டிடத் தொகுதியின் வரலாற்றை இரைமீட்டிப்பார்ப்பது பொருத்தமானதாகும் ஆரம்ப காலம் முதல் அமைச்சர் அல்-ஹாஜ் எம்.ஏ. அப்துல் மஜீத் B.A. அவர்களும் 1994 முதல் அமைச்சர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் L.LM. அவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குத்தெற்குகான கட்டிடத் தொகுதியை அமைக்க தங்களது முழுமையான பங்களிப்பை நல்கினர்.

இதே காலப்பகுதியில் பிரதி அமைச்சராக இருந்த மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் சட்டத்தரணி அவர்கள் நகருக்கு மெருகூட்டும் மணிக்கூட்டுக் கோபுரத்தை நிறுவினார், (அதற்கான கூலிகளை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக)

அதன்பின்னர் பதவிக்கு வந்த கௌரவ பிரதி அமைச்சர் எம். ஐ. அன்வர் இஸ்மாயில் சட்டத்தரனி அவர்கள் பாரிய சாவலுக்கு முகம் கொடுக்க வேண்டியவரானார். அம்பாறை வீதி பக்கமாக உள்ள நிலத்தில் சந்தையின் முகப்பொலிவைக் காட்டும் பகுதியில் - கிழக்கு மேற்காக கடைத்தொகுதிகளை அமைப்பதில் ஏற்கனவே தீர்க்க முடியாமல்போன பிரச்சினைகளை தீர்க்க வேண்டியிருந்தது. சில தனியார் கடை சொந்தக்காரர்கள் நீதிமன்றம் வரை கூட சென்றிருந்தனர். அவர்களை அன்போடு அழைத்து நகரை அழகுபடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அவர்களுக்கான மாற்றீடுகளை செய்து கொடுத்து அவர்களது முழுமையான சம்மதத்துடன் தனது பணியை மேற்கொண்டு கடந்த காலங்களில் எல்லாம் இருந்து வந்த பிரச்சினைகளை தனது சாதுரியத்தினால் தீர்த்து சந்தைக் கட்டிடத்தை பூர்த்தி செய்துள்ளார்.

இஸ்லாமிய கட்டிடக்கலையின் நுட்பங்களையும் வண்ணங்களையும் கலந்து வடிவமைக்குமாறு கட்டிடக்கலை நிபுணர்களை பணித்தார், அவரது கற்பனைக் கனவு இன்று இஸ்லாமிய கலாசார விழுமியங்களையும் உள்ளடக்கிய நவீன சந்தை கட்டிடத் தொகுதியாக தலைநிமிர்ந்து நிற்கிறது. (இதற்கான கூலியை அல்லாஹ் அவருக்கும் வழங்குவானாக)

இதே வரிசையில் நகருக்கு மேலும் மெருகூட்டுவதற்கான இஸ்லாமிய கட்டிடக்கலை நுட்பங்களுடன் அமைக்கப்படடுள்ள ஹிஜ்றா ஜும்ஆ பள்ளிவாசலின் நுழைவாயிலும் எமக்கு மகிழ்ச்சியை தருகின்றது. இவ்வாறே நெல்லுப்போடிச்சந்தி, பங்களாவாடிச் சந்தி நுழைவாயில்கள், நெடுஞ்சாலை விஸ்தரிப்பு, தென்கிழக்கு பல்கலைக்கழக விவசாயபீட அபிவிருத்தி, உலாமாக்களுக்கான தலைமைக் காரியாலயம், சகல வசதிகளையும் கொண்ட பஸ்தரிப்பிடம் போன்ற பல திட்டங்களை வடிவமைத்துக் கொண்டிருக்கும் சகோதரர் அன்வர் இஸ்மாயில் தென்கிழக்கிலேயே தலைசிறந்த நகரங்களுள் ஒன்றாக சம்மாந்துறையை மிளிரச் செய்யவேண்டுமென்ற இலட்சியக் கனவுகளுடன் இராப்பகலாக உழைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் கேள்வியுற்று பெருமிதமடைகிறோம். அவரது முயற்சிகள் வெற்றிபெற அல்லாஹ் அவருக்கு சகல வளங்களையும் வழங்குவனாக.

ஆமீன்.

கலாபூஷணம் , அல்-ஹாஜ் மௌலவி
**A.C.A.M. புஹாரீ** (அல்-கபூரி) J.P.
பிரதம நம்பிக்கையாளர்
இஸ்லாமிய செயலகம்
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் குழு

அல்-ஹாஜ் எஸ்.எல்.ஏ. சலாம் -தலைவர்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

ஜனாப் எல்.ரி.ஏ. றசீது
செயலாளர்

ஜனாப் றமீஸ் அப்துல்லாஹ்
மொழித்துறைத் தலைவர். (தெ.கி.ப.க)

ஜனாப் ஏ.ஸி. இஸ்மாலெப்பை
ஓய்வுபெற்ற அதிபர்

அல்-ஹாஜ் எம்.எச். அஸீஸ் மெய்டீன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

ஜனாப் ஏ. ஆமிது லெவ்வை வைத்தியர்
முன்னாள் கி.ச. தவிசாளர்

ஜனாப் ஏ. அலியார்
முன்னாள் கி.ச. உறுப்பினர்

அல்- ஹாஜ் ஐ.ஏ. றசூல்
உதவிக் கல்விப் பணிப்பாளர்

ஜனாப் வை.பி. சலீம்
பிரதியமைச்சரின் இணைப்புச் செயலாளர்

ஜனாப் ஏ.ஆர். எம். அஷ்ர.:.ப் (பீ. ஏ) நளிமி

ஜனாப் எம்.ஐ.எம். நபீஸ்.

அல்-ஹாஜ் யூ.எல். பஸீர்
பிரதியமைச்சரின் பொதுசன தொடர்பு அதிகாரி

ஜனாப் எம்.எம்.ஏ. காதர் ஆசிரியர்
பிரதியமைச்சரின் இணைப்பதிகாரி

ஜனாப் எம்.எச்.எம். ஹில்மி

ஜனாப் எம்.சி. அன்சார்

ஜனாப் ஜே.எம். ஹனிபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணம் பரப்பும் எமது மலர்!

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

என்றும் இல்லாதவாறு சம்மாந்துறைப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகள் நடைப்பெற்று வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கல்வி, சுகாதார, விவசாய, பொது வசதிகள், கலாசார, சமயம் என்ற அளவில் இம் முயற்சிகள் நடைப்பெற்று வருகின்றன. இதற்கு பெரும் காரணமாக அமைந்தவர் எமது மண்ணிலே பிறந்த சகோதரர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள் ஆகும். அவருடைய அபிவிருத்தி முயற்சிகளின் பாதையிலே இன்று சம்மாந்துறை ஹிஜ்ரா சாலையிலே தலை நிமிர்ந்து நிற்கும் சந்தைக் கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படுகிறது. இதன் நினைவாக மலர் ஒன்று வெளிவர வேண்டும் என்று நாம் கனவு கன்டோம். அந்த கனவு நனவாகி நமது மலர் இன்று மணம் பரப்புகின்றது. இம் மலரை வெறும் நினைவு மலராக மாத்திரமன்றி பயனுள்ள வரலாற்றுப் பதிவு மிக்க மலராக மாற்றுவதற்கு நாம் முயற்சித்திருக்கின்றோம்.

சம்மாந்துறையின் சந்தை வரலாற்றிலே ஆலையடிப் பிரதேசம் முக்கியமானது ஆலையடிப் பிரதேசம் பெரிய பள்ளிவாசல், சின்னப்பள்ளி வாசல் அமைந்த சூழலை அண்மித்தே உள்ளது. இந்த பெரிய பள்ளிவாசலும், சின்னப்பள்ளி வாசலும் அமைந்த பிரதேசத்தினை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்து வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இதனையொட்டி இப் பிரதேசம் பற்றிய முக்கியமான கட்டுரையை இம் மலரிலே முன்னாள் அதிபர் எஸ்.ஏ. றாஸிக் அவர்கள் எழுதியுள்ளார்கள். புனித பிரதேசம் என்ற அளவிலும் பள்ளிவாசல்களுக்கு நிதிகளை ஒதுக்குவது என்ற வகையிலும் பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் இக் கட்டுரையில் தொடர்புபடுவது முக்கியமானது.

அடுத்து இம் மலரில் சிறப்புக் கட்டுரையாக அமைவது ஹிஜ்ரா பொதுச் சந்தை வரலாறாகும். ஹிஜ்ரா பொதுச்சந்தையின் வரலாறு சம்மாந்துறை அரசியல் வரலாற்றோடு பின்னிப்பிணைந்ததாகும். ஹிஜ்ராவில் பொதுச்சந்தைக் கட்டிடத்தை பூரணப்படுத்தி முடிக்க வேண்டும் என்று சம்மாந்துறையை பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 40 வருட காலமாக எடுத்த முயற்சிகள் தோல்வியிலே முடிந்துள்ளன. ஆனால் கௌரவ பிரதிஅமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அதனை ஒரு சவாலாகக் கருதி இக்கட்டடத்தினை அழகிய அம்சங்கள் நிறைந்த கலாசார பண்புகள் மலிந்ததாக பூர்த்தி செய்திருப்பது மிகப் பெறுமதி வாய்ந்த வரலாற்றுப் பதிவாகும். அந்த வரலாற்றினை இக் கட்டுரை விரிவாகப் பதிவுசெய்திருக்கிறது.

மேலும் இந்நூலிலே அண்மைக்கால அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய கட்டுரைகளும் அமைந்துள்ளன. குறிப்பாக கடந்த 3 ஆண்டுகளில் இப் பிரதேச கல்வி, சுகாதார,விவசாய, நீர்ப்பாசன, மின்சார,சமய, கலாசார அபிவிருத்தி கட்டுரைகளும் பஸ்தரிப்பு நிலையம், ஜனாதிபதி கலாசார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் விளையாட்டுத் துறை நிலையம் முதலானவை பற்றிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இறுதியாக ஹிஜ்ரா சந்தை கட்டடத்தொகுதி பற்றிய பல்வேறு கவிஞர்களின் மனப்பதிவுகளும் இம் மலரில் கவிதைகளாக மணம் பரப்பி உள்ளன.

மொத்தத்தில் இம் மலரின் மூலம் நமது நீண்ட அரசியல் பாரம் பரியத்தில் கடந்த 3 ஆண்டுகளும் நாம் கடந்த பாதையை பதிவு செய்திருக்கின்றோம். இது அன்வர் இஸ்மாயில் என்ற தனி மனிதனின் முயற்சியே ஆயினும் நமது பாதையில் ஒப்பீட்டளவில் இம் மூன்று ஆண்டுகளில் மிக நீண்ட தூரம் பயணம் செய்திருக்கின்றோம் என்பதை கண்டு கொண்டோம். அதனோடு நமது வரலாற்றின் குறுக்கு வெட்டு முகத்தினையும் பார்த்திருக்கின்றோம். ஆகவே நமது மலர் மணம் பரப்பி இருக்கின்றது என்ற திருப்தியுடன் விடைபெறுகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் பலர் இந்த மலராக்க வேலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக இந்நூலின் கட்டுரையாளர்கள், கவிஞர்கள், மலர்க் குழுவினர், கௌரவ பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர். வை.பி. சலீம், மக்கள் பணிமனை உத்தியோகத்தர் எம்.சீ.அன்சார் ஆகியோருக்கும் 'மைகிரியேசன் எட்வர்டைசிங்' நிறுவனத்தினருக்கும், விளம்பரதாரருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்ஹாஜ் **எஸ். எல். ஏ. சலாம்** B.A.
(ஓய்வுப் பெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர்)
பிரதம ஆசிரியர் - மலர்க் குழு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சம்மாந்துறை :**
**பெரியபள்ளிவாசல்,சின்னப்பள்ளிவாசல் ஆலையடிச் சந்தையின் வரலாற்றுப் பின்னணியும்,புனித பிரதேச பிரகடனமும்.**

சம்மாந்துறைப் பள்ளிவாசலின் வரலாறு சுமார் 500 வருடங்கள் பழமை வாய்ந்தது. அதற்கடையாளமாக பெரிய பள்ளியில் இரண்டு அவுலியாக்கள் (இறை நேசர்கள்) நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அத்துடன் தொழு கைக்காக வுழுச்செய்யும் ஹவுழும் (நீர்த்தடாகமும்) மிகப் பழமை வாய்ந்தது. இந்த ஹவுளு சுமார் 200 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். சம்மாந்து றையில் அன்றிருந்த குடிகளின் சார்பாக, ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு கருங்கல் செதுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டதாகும். இன்று வரை இவ் ஹவுளு எவ்வித சேதமின்றி, பழுதின்றி பாவிக்கப்படுகிறது. இவ் ஹவுளும் பெரிய பள்ளியின் ஒரு முதிசமாகும்.

மேலும், 1937 ஆம் ஆண்டுக்கு முன் இப்பள்ளியின் பழைய கட்டிடத்தின் மர வேலைப்பாடுகள் மிகமிகப் பெறுமதி வாய்ந்ததாகும். இன்றைய பெரிய பள்ளி கட்டத் தொடங்கியதும் பழைய பள்ளியின் சின்னங்கள் அனைத்தும், கவனிப்பாரற்று அழிந்து விட்டதாக முன்னோர் குறைபட்டுக்கொண்டார்கள்.

இத்தகு சிறப்பு வாய்ந்த சம்மாந்துறை பெரிய பள்ளியின் வரலாற்றை தெரிந்து கொள்வதற்கு முன்பாக, இப்பள்ளியின் அமைவிடமான சம்மாந்து றையின் சரித்திரத்தை சற்று தெரிந்து கொள்வது சாலச் சிறந்ததாகும். ஏனென்றால் சம்மாந்துறையின் சரித்திரத்துடன் பெரிய பள்ளியின் வரலாறு பின்னிப் பிணைந்துள்ளது.

9ஆம் 10ஆம் நூற்றாண்டுகளில் அராபிய வணிகர் இலங்கைக்கு வந்தமைக்கான பற்பல குறிப்புக்கள், கொழும்பு, திருகோணமலை, புளியந்தீவு, (மட்டக்களப்பு) போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், அராபிய நாணயங்கள் சான்று பகர்கின்றன. இஸ்லாத்திற்கு முந்திய கால கட்டங்களிலும் இலங்கையில் அராபிய வணிகரின் வருகையும், இருப்பும் இருந்துள்ளதை மேலும் ஆதாரப்படுத்தும் ஆய்வுகளும் உள்ளன.

இலங்கைப் பண்டங்களை சீனாவுக்கும், தூரகிழக்கு நாடுகளுக்கும் கொண்டுசென்று வணிகம் புரிந்தவர்களும் இந்தியாவின் கடல் வணிகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பங்கு கொண்டிருந்தவர்களும் அரேபியர்களும் முஸ்லிம்களுமாவர். 'பாவேசா' என்ற போர்த்துக்கீச யாத்திரிகர் இந்தியாவில் தான் தங்கியிருந்த (1500-1516) காலகட்டத்தில் தனது அனுபவங்களைக் கூறுகின்றார். ''மேற்காசியா, கிழக்காசியா, ஆகிய பகுதிகளுடன் இந்தியா நாடாத்திய வணிகம் முழுவதும் முஸ்லிம்களின் கைகளில் இருந்தது" என கூறியுள்ளமை கவனத்திற்குரியது.

இவ்வாறு வணிகத்தில் ஈடுபட்ட அரேபியர், முஸ்லிம்கள் சம்மாந்துறைக்கு ஏன் வந்தனர்? எப்படி வந்தனர்? என்று நோக்க வேண்டியுள்ளது.'பாவா ஆதம் மலை' வரலாற்றுக்கு முன்பட்ட காலம் தொடக்கம் அரபு உலகில் அறியப்பட்ட இஸ்லாமிய சின்னமாகும். ஆகவே மிக ஆதி காலத்திலிருந்து அராபியர் ஆதம் மலை தரிசிப்பதை ஒரு புனித கடமையாகக் கொண்டிருந்தனர். ஆயினும் இவர்கள் இங்கிருந்து திரும்பிச் செல்லும்போது சிவப்பு மாணிக்கம், வாசனைத் திரவியங்கள், தேன், யானைத்தந்தம், மான் கொம்பு போன்ற பொருட்களை கொண்டு சென்றனர். இதற்காக அவர்கள் பயன்படுத்திய பாதை மட்டக்களப்பு வாவியாகும். வடகீழ் பருவக்காற்றின் உதவியுடன் பாய்க்கப்பலில் சம்மாந்துறையில் கப்பலை கட்டிவிட்டு தரைமார்க் கமாக இரத்தினபுரி ஊடாக ஆதம் மலையை தரிசித்தனர்.

இன்று மட்டக்களப்பு என்று அழைக்கப்படும் இடம் அன்று சம்மாந்துறை யைத்தான் குறித்து நின்றது. இதன் வரலாறு மிக மிக நீண்டது. 1628 இல் ஒல்லாந்தர் புளியந்தீவில் மட்டக்களப்பு வாவியின் வடக்கில் தமக்காக ஒரு கோட்டையைக் கட்டினர். அன்று முதல் புளியந்தீவு மட்டக்களப்பானது. மட்டக்களப்பு சம்மாந்துறையின் கிழக்கெல்லையில் 'மட்டக்களப்புத் தரவை' என்ற பெயரோடு இன்று வரை அழைக்கப்பட்டு வருகின்றது.

கொன்ஸ்டன்டைன் டிஸா என்ற போர்த்துக்கீசத் தளபதி போர்த்துக்கல்லின் தனவந்தரான லிஸ்பனுக்கு பின்வருமாறு எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்பு சிறந்த ஆதாரமாகும். ''நான் 27 நாட்கள் பயணத்தின் பின்னர் மட்டக்களப்பு துறையை வந்தடைந்து, இத்துறையின் பிரதான பட்டனமாகிய 'ஸமன்டுரே' ZABAN DURE யில் தனது பரிவாரங்களுடன் 22 நாட்கள் தங்கியிருந்தேன். என்று குறிபிட்டுள்ளார்.

அதேவேளை 'ஜோக்கப் பெர்னாந்து' என்ற ஒல்லாந்து அதிதி 1676 யில் கூறியுள்ள ''மட்டக்களப்பு என்ற சம்மாந்துறையையும் கண்டியையும் ஐந்து காட்டுப்பாதைகள் தொடர்புபடுத்தி இருந்தன" என்ற விபரம் கூர்ந்து நோக்கபப்பட வேண்டியது.

ஒல்லாந்தர் இலங்கையில் முதன் முதல் காலடி வைத்த இடம் சம்மாந்துறையாகும். இச் சம்பவம் 31.03.1602 இல் நிகழ்ந்துள்ளது. 'ஸ்பில்பேகன்' என்ற ஒல்லாந்து தளபதி இந்தியாவில் இருக்கும்போது மட்டக்களப்பு ஆறு எங்கே உள்ளது என்று கேட்டறிந்து வந்துள்ள சம்பவம் வரலாற்றில் மறைக்கமுடியாததாகும். 'ஸ்பில்பேகன்' சம்மாந்துறை முஸ் லிம்களின் உதவியோடுதான் கண்டி அரசன் விமலதர்மசூரியனைச் சந்தித்து (1591-1604) ஒப்பந்தம் செய்துகொண்டது வரலாற்றுச் சான்றாகும்.

மேலும் 'டிஒய்லி' DOYLY என்ற கண்டி இராச்சியத்தின் பிரித்தானிய தூதுவர் தனது தினக்குறிப்பில் ''போர்த்துக்கீசர் காலத்தில் சம்மாந்துறை கண்டி இராச்சியத்தின் பிரதான துறைமுகமாக இருந்தது" எனப் பதிந்துள்ளார்.

கி.பி. 16ம் நூற்றாண்டு வரையும் வாவியின் தென்பகுதியே (சம்மாந்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு எனப் பெயர் பெற்றிருந்தது. வீரமுனைச் செப்பேடு, சீர்பாதர்வ ரன்முறை கல்வெட்டு, கண்ணகி வழக்குரைகாதை என்பவைகள் இதைச்சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வாறு வங்காள விரிகுடாவிலிருந்து மட்டக்களப்பு வாவியூடாக யாத்திரி கர்களும், சரக்கு கப்பல்களும், மார்க்கப் பிரசாரர்களும் சம்மாந்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ள சம்பவங்கள் ஏராளம் ஏராளம். இதன் அடிப்படையில்தான் மத்திய கிழக்கில் இருந்தும், ஆப்கானிஸ்தான், இந்தியா போன்ற இடங்களில் இருந்தும் சமயப் பெரியார்கள் இஸ்லாத்தைப் போதிப் பதற்காக இப்பாதையைப் பயன்படுத்தினர். அந்தவகையில் சம்மாந்துறையின் சூழலில் சுமார் 10 க்கு மேற்பட்ட அவுலியாக்கள் அடங்கப்பட்டுள்ளனர். இவ்வடக்கஸ்தலங்களில் எல்லாம் பள்ளிவாசல்கள் அமையப்பெற்றுள்ளன.

அன்று ஒருநாள் 1500 ஆம் ஆண்டளவில் இருக்கலாம், இந்தியாவின் கிழக்குக்கரையிலிருந்து சரக்குக் கப்பல் ஒன்று வங்காளவிரிகுடாவிலிருந்து மட்டக்களப்பு வாவியூடாக சம்மாந்துறையை வந்தடைந்தது. அக்கப்பலில் இருந்து இரண்டு இறை நல்லாடியார்களும், ஆறு வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஒன்றும் சம்மாந்துறையில் காலடிவைத்தனர்.சம்மாந்துறையின் வரலாற்றுக்கும், இவ் அவுலியாக்களின் வருகைக்கும், பெரிய பள்ளியின் உதயத்திற்கும் உள்ள தொடர்புகளை இனி நோக்குவோம்.

இந்த அவ்லியாக்கள் அன்று சம்மாந்துறையின் 'சிங்கிரிகாடு' என்று அழைக்கப்பட்ட இன்றைய பெரியபள்ளியின் சூழலில் வந்து தங்கினர். இவர்களில் ஒருவர் பெயர் கோசப்பா. இவர்மத்திய கிழக்கை சேர்ந்த முகபாவமும் உடற்கட்டும் கொண்டவர். மற்றவர் இவரது சீடர் கோசுமுகை யதீன் என அழைக்கப்பட்டார். இவர் தென்னிந்தியாவைச் சேர்ந்த சாயல் கொண்டவர். குழந்தை எங்கிருந்து வந்தது என்பதை அறியமுடியவில்லை. ஆனால் அவரது பெயர் உம்மு குல்தூம் என பரம்பரையாக பேசப்பட்டு வந்துள்ளது. இக்குழந்தை வளர்ந்து சம்மாந்துறையில் வாழ்கைப்பட்டு அவர் மூலமான வம்ச விருத்தியில் வந்தவர்களை கோசப்பா குடியினர் என்று இன்றும் மரியாதையோடு அழைக்கின்றனர். இக்குடியே சம்மாந்துறையில் ஆளும் அதிகாரம் பெற்று வந்தது. முன்னாள் அமைச்சர் அப்துல் மஜீத், முன்னாள் பிரதியமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் ஆகியோர் கோசப்பா குடிக்கு ள்ளே மணம் செய்தவர்கள். தற்போதைய பிரதியமைச்சர் சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் அவர்கள் நேரடியாக கோசப்பா குடியைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்று இன்றைய பெரியபள்ளிவாசல் சூழல் சிங்கிரி பற்றைகளால் சூழப்பட்ட காடாக இருந்தது. அதைச்சூழ முஸ்லிம் குடும்பங்களும் வாழ்ந்து வந்தன. ஊர் மக்கள் இப்பெரியார்களை அன்று ஊரில் இருந்த ஒரேயொரு பள்ளியான முகையதீன் பள்ளியில் தங்குமாறு அழைத்தனர். பல தனவந்தர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு வருமாறும் வசதிகள் செய்து தருவதாகவும் கூறினர். இவ் அன்புக்கட்டளைகளை மறுத்த அப்பெரியார்கள் தாங்கள் இவ்விடத்திலே தங்கி மக்களுக்கு நன்னெறியைப் போதிக்க விரும்புவதாக கூறினர்.

அதனால் ஊர் மக்கள் அவ்விடத்திலே அவர்கள் தங்குவதற்கும், தொழுது கொள்வதற்குமாக வெவ்வேறு இடங்களை அமைத்துக் கொடுத்தனர்.

தமிழ் மக்களும், முக்குவர்களும், முஸ்லிம்களும் இவ்வடியார்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்து ஆசிபெற்று அறிவுரைகளையும் கேட்டனர். இவர்களது வருகையை கேள்வியுற்ற அயல் ஊரவர்களும் சாரி சாரியாக வந்து சாந்தி மார்க்கத்தை அறிந்து செல்லலாகினர்.

காலவோட்டத்தில் இவ்வடியார்கள் இறையடியெய்தியதும் அவ்விடத்திலே நல்லடக்கம் செய்யப்பட்டனர். அடக்கம் செய்யப்பட்ட இடத்தை உள்ளடக் கப்பட்டதாக கட்டிடம் ஒன்று பள்ளிவாசலில் மிளிர தொடங்கியது. அன்று தொடக்கம் இப் பள்ளி கோசப்பா பள்ளி எனப் பெயர்பெறலாயிற்று. இவ்வடி யார்கள் அடக்கப்பட்டிருப்பதாலும், பள்ளிவாசல் ஒன்று உதயமானதாலும் சிங்கிரிகாடு என மக்களால் ஒதுக்கப்பட்ட இவ்விடம் மவுசு பெறத்தொடங் கியது. மக்களும் இவ்விடத்திலே அதிகம் குடியேறத் தொடங்கினர்.

இப்பிரேதேசத்தில் முஸ்லிம்களின் சனச்செறிவு அதிகரித்ததும், மக்களின் தொழுகைக்கான இடம் போதாமல் இருந்தது. 1800ஆம் ஆண்டளவில் இப்பள்ளியை விஸ்தரித்துக் கட்டும் முயற்சில் ஊரவர்கள் ஈடுபட்டனர். சிப்பி ஓட்டினால் வேயப்பட்ட கூரை, மரத்தினால் அலங்கார வேலைப்பாடு களுடைய தூண்கள், பள்ளியின் வாசல் முகப்பில் (GATEWAY) கூரையுட னான சிறு கட்டிடம் வழிப்போக்கர், யாசகம் பெற வருவோர் தங்கிச் செல்வதற்கான இருப்பிட வசதிகளுடனான தங்கிடம். ஏனென்றால் சம்மாந்துறையில்யிருந்து கண்டிக்கான ஒரு பாதை இதன் வழியாகத்தான் சென்றது. முகையதீன் பள்ளியில் மாத்திரம் வெள்ளிக்கிழமையில் ஜும்மா தொழுகை நடைபெற்று வந்த நிகழ்வு கோசப்பா பள்ளி பெருப்பித்துக் கட்டியதை தொடர்ந்து ஒவ்வோரு வெள்ளிக்கிழமையும் மாறி மாறி இவ்விரண்டு பள்ளிகளிலும் ஜும்மா நடைபெறத் தொடங்கின.

சுமார் நூறு வருடங்களுக்குப் பின்னர், அதாவது 1936 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20ஆந் திகதி வெள்ளிக்கிழமை சம்மாந்துறையின் சரித்திரத்தில் மிக முக்கியமான நாள். ஜும்மாத் தொழுகையின் பின்னர் ஒரு வாட்டசாட்டமான, கண்ணியத்துக்குரிய வெளிநாட்டை சேர்ந்த நீடூரை பிறப்பிடமாக கொண்டவர் என்றும், எனது பெயர் மௌலான ஹாஜி செய்து முஹம்மத் என்றும், அறிமுகப்படுத்தினார். தான் கனவு கண்டதாகவும், இப்பள்ளியை மெத்தை பள்ளியாக கட்டுவதற்கு வந்துள்ளதாவும் அதற்கு ஊர் மக்கள் உதவி ஒத்தாசை புரிய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர். அத்துடன் மக்களின் பார்வைக்காக கட்டப்படவிருக்கும் பள்ளின் மாதிரி அமைப்பையும் பலகையால் அமைத்து மக்கள் மத்தியில் காட்சிப்படுத்தினார்.

இவ்வேண்டுகோளை அன்றிருந்த பள்ளிவாசல் நிருவாகத்தினர் விருப்பம் கொள்ளவில்லை. ஆனால் ஊர் பெரியார்களும், மக்களும் ஆர்வம் காட்டியதனால் மெத்தை பள்ளி கட்டும் வேலைகள் ஆரம்பமாயின. முதற்கட்டமாக சம்மாந்துறையில்யிருந்த ஒவ்வொரு முஸ்லிம் ஆண்களிடம் இருந்தும் ஒரு ரூபா வீதம் வரி அறவிடப்பட்டது. 3651 பேர் ஆண்கள் அன்றிருந்ததாதக கணக்கு குறிப்பொன்று தெரிய வந்துள்ளது. மேலும் இவ்வரிகள் ஒவ்வொரு வருடமும் இரண்டு ரூபா, பத்து ரூபா எனவும் தலைவரிகள் ஊரில் அறவிடப்பட்டன. அத்துடன் செல்வந்தர்களிடமிருந்து. 100/=, 200/= என்ற வரிகளும் அறவிடப்பட்தாக தகவல்கள் உள்ளன. இது தவிர வண்டில் மாடுகள் உள்ளோர் கல், மண், மரம் போன்றவையும் ஏற்றிக்கொடுத்தனர். இப்படியாக உள்ளூர் வருமானங்களை கொண்டு மாத்திரம் இப்பள்ளி அழகுற அமையப் பெற்றது. 1936 இல் ஆரம்பிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948 இல் முடிவடைந்து. மௌலானா அவர்கள் இக்கட்டிட வேலைகளை இரவு பகலாக கண்காணித்து வந்தார். இக்கடிடவேலைகளை ஆரம்பித்தபோது இங்கு அடக்கப்பட்டிருந்த இரண்டு அவ்லியாக்களின் கபுறுஸ்தானங்கள் நடுப்பள்ளிக்குள் வருவதாக அவதானிக்கப்பட்டது. மௌலானா அவர்களின் ஆலோசனைப்படி இக்கபுறுகள் இரண்டும் தோண்டப்பட்டு இன்றுள்ள இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன. அப்போது இவ்விரு மையத்துக்களும் எவ்வித சேதங்களுமின்றி, கபன் துணிகளுக்கும் எவ்வித பாதிப்புக்களுமின்றி இருந்தாக அவ்வேலைகளில் ஈடுபட்டவர்கள் கூறியுள்ளனர்.

1936 இல் ஆரம்பிக்கப்பட்ட கோசப்பா பள்ளியின் கட்டிட நிர்மான வேலைகள் 1948 இல் பூர்த்தியடைந்து அழகுற நிமிர்ந்து வானுற உயர்ந்து வண்ணமாய் காட்சியளித்தன. வானவேடிக்கைகள், இன்னும் பல நிகழ்வுகள், கந்தூரி என்பவற்றுடன் கோலாகலமாக இப் பள்ளி திறந்து வைக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் இது போன்ற ஒரு பள்ளி எங்கும் இல்லாதால் பல ஊர்களில் இருந்தும் மக்கள் சாரி சாரியாக இப் பள்ளியை பார்பதற்கு நாளந்தாம் வருகை தந்து கொண்டிருருந்தனர். காணிக்கை போடுவதும், அவ்லியாக்களின் கப்புறஸ்தானங்களை தரிசிப்பதும், மேல்மாடி ஏறுவதும் இரசிப்பதுமாக பல வருடங்கள் இந் நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டு பெரிபள்ளிவாசலின் சூழல் கலகலப்பாக காணப்பட்டது. பெரிய பள்ளிவாசல் கலகலப்பாக காணப்பட்டது என்றால் கோசப்பா பள்ளி எங்கே? ஆம், கோசப்பா பள்ளி மிகப் பெரிதாக கட்டப்பட்டு, யாவரும் ஒரே நேரத்தில் ஜும்மாத் தொழ இடவசதிருந்ததால் 1948ம் ஆண்டு டிருந்து. இங்கு மாத்திரம் ஜும்மாத் தொழுகை நடைபெறத் தொடங்கியது. முகையதீன் பள்ளி சின்னப்பள்ளி என்ற பெயர் பெறலாயிற்று. கோசப்பா பள்ளி பெரிய பள்ளிவாசல் என்ற பெயரைப் பெற்று நிலைத்து நின்றது.

காலவோட்டத்தில் சனத்தெகை அதிகரித்தமையால் ஜும்மா தொழு கைக்கு இடம் காணாமல் இருந்ததால் பள்ளிவாசல் நிர்வாகத்தினர். பள்ளியின் இரு பக்கங்ளிலும் விஸ்தரிப்பு வேலைகளைச் செய்தனர்.அத்துடன் உள் பள்ளிக்கு பலகையினால் மேல்மாடி அமைக்கப்பட்டது. இதனால் ஜும்மா தொழுகைக்கு மக்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. என்றாலும் பள்ளியின் விஸ்தரிப்பு காரணமாக 1948ம் ஆண்டின் தோற்றம் முற்றாக மாற்றம் அடைந்து பழைய வனப்புறு வடிவம் இல்லாமல் போனது. இந் நிகழ்வு 1967 காலகட்டத்தில் நிகழ்ந்ததாகும்.

இன்று சம்மாந்துறை பெரியபள்ளிவாசல் நிருவாகம் மஜ்லிஸ் அஷ்ஷூறா என்ற அமைப்புக்குள் 40 பள்ளிவாசல்களையும், சமய கலாசார நிறுவனங்க ளையும் உள்ளடக்கியதாக ஒரே நம்பிக்கையாளர் சபையின் கீழ் இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. இவ்வாறுள்ள பெரியபள்ளியையும், சின்னப்பள்ளியையும், அவைகளோடு இணைந்துள்ள தப்லீகுல் இஸ்லாம் அறபுக்கல்லூரி, தாறுல் ஹஸனாத் குர்ஆன் மனன கல்லூரி என் பனவற்றையும் உள்ளடக்கியதாகவே புனித பிரதேச பிரகடனம் அமைந் துள்ளது. இது இலங்கையில் முஸ்லிம்களின் புனித பிரதேச பிரகடனத்தில் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது. இவ்வாறான அந்தஸ்த்தினை நமதூர் பிரதேசம் பெறுவதற்கு நமது பிரதி அமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அவர்களே முழுக்காரணமாகும். நாம் அவருக்கும் ஜனாதிபதி அவர்கட்கும் நன்றி தெரிவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறையின் சரித்திரம், பெரியபள்ளியின் பெருமை இவற்றை அவதானித்தோம். ஆனால் 'ஆலையடி' என்ற சந்தையின் ஆரம்ப நிகழ்வு களையும் நாம் அறிந்திருத்தல் அவசியம். இன்றைய தலைமுறையினருக்கு ஆலையடி என்றால் அது இடம் என்றுதான் ஊகிப்பர். அது ஒரு வர்த்தக மையமாக இருந்து சம்மாந்துறைக்குப் பெயர் பெற்று தந்தது. என்ற வரலாற்று முக்கியத்துவத்தை அவதானிப்போம்.

இன்றைய பழைய சந்தையில் பள்ளிவாசலுக்கு சொந்தமான பாரிய நிலப்பரப்பொன்று இருந்தது. ஆனால் எமது முன்னோர்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் அப்பாரிய நிலப்பரப்பு இன்று மிகவும் சுருங்கி மூன்று அறைக்கட்டிடமும் அதன் பின்னால் உள்ள சிறு நிலப் பரப்பாக மாத்திரம் காட்சியளிக்கிறது. இவ்விடத்தில் பாரிய ஆலமரம் ஒன்று தனது கிளைகளைப் பரப்பி நின்றது. இம்மரத்தின் நிழலிலும், விழுதுகளின் தராசைக் கட்டி பொருள் விற்பனையும் மும்முரமாக நடந்து வந்தன. ஆலமரமொன்று அனந்தரமாய் நின்று வர்த்தக நடவடிக்கைகள் வழமையாய் நடைபெற்று வந்ததால் அவ்விடம் ஆலையடி' எனப் பெயர் பெறலாயிற்று. அன்று ஒருவர், ஏன் 1960 களில் கூட ஆலையடிக்குப் போயுள்ளார், ஆலையடிக்குப் போகின்றேன் என்றால் பழைய சந்தையைத் தான் சுட்டிநிற்கிறது.

1500 ஆம் ஆண்டளவில் அவ்வுலியாக்கள் இருவர் பெரிய பள்ளி சூழலில் வந்துள்ளதாக குறிப்பிட்டிருந்தேன். இச் செய்தி அப்போது ஆலையடியில் சாமன்கள் வாங்கிக் கொண்டும், விற்றுக்கொண்டும் இருந்த மக்களின் காதுகளில் எட்டியதும் அப்படி அப்படியே பொருட்களை விட்டு விட்டு அவ்லியாக்களைப் பார்க்க ஓடிச் சென்ற சம்மவம் வாழையடி வாழையாக வாய் மூலம் பேசப்பட்டு வந்த உண்மையாகும்.

இவ் ஆலையடி என்ற சந்தை சம்மாந்துறையிலிருந்து கண்டிக்கு செல்வதற்கான ஐந்து பாதைகளில் ஒன்றில் அமைந்திருந்தது. மட்டக்களப்பு வாவியூடாக வரும் சரக்குக் கப்பல்கள் சம்மாந்துறையில் வந்திறங்கியதும் ஆலையடிக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து கொள்முதல் செய்யப்பட்டு 'தாவளம்' மூலம் கண்டிக்கும் மற்றும் இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. அத்துடன் கண்டி போன்ற இடங்களில் இருந்து கொண்டுவ ரப்படும் பொருட்களும் இவ் ஆலையடியில் சந்தைப்படுத்தப்பட்டன. வெளி நாட்டு வியாபாரிகள் இப் பொருட்களைப் பெற்று மீண்டும் மடடக்களப்பு வாவியூடாக பிரயாணம் செய்துள்ள வரலாற்றை முன்பு அவதானித்தோம்.

அத்துடன் காத்தான்குடி எல்லைக்குள் மட்டக்களப்பு ஆற்றங்கரை ஓரம் நெடுகிலும் பொருட்கள் சேகரித்து வைக்க 18 கிட்டங்கிகள் (கட்டிடங்கள்) கட்டப்பட்டிருந்தன. வெளிநாட்டு கப்பல்களில் வரும் பொருட்கள் இக் கிட்டங்கிகளில் சேகரித்து வைக்கப்பட்டு அவைகள் மட்டக்களப்பு வாவியூடாக சம்மாந்துறை வந்தடைந்து, மீண்டும் ஆலையடியில் இருந்து ' தாவளம்' கட்டுக்கரத்தைகள் மூலம் கண்டிக்கும் மலைநாட்டிற்கும் கொண்டு சென்ற வரலாற்றை 'காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம் ' என்ற நூல் செப்புகிறது.

இவ்வாறு பிரசித்தி பெற்றிருந்த ஆலையடிச் சந்தை காலகெதியில் மங்கி மறையலாயிற்று. கண்டி இராச்சியம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட தும், இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்ததினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை அபிவிருத்திகளிலும், போக்குவரத்து பிரயாணங்களிலும் பாரிய மாற்றங்கள் உருவாயின. கண்டிக்கான பாதைகள் கொழும்பில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் இலகுவாக்கப்படலாயின. அத்துடன் மட்டக்களப்பிலிருந்து தென்பிரதேசங்களுக்கு போக்குவரத்து பாதைகள் ஏற்படுத்தப்பட்டன. இம் மாபெரும் மாற்றங்களினால் மட்டக்களப்பு நீர்வழிப் பாதை படிப்படியாக குறையத் தொடங்கியது. ஆலையடிச் சந்தையின் மவுசும் மங்கத் தொடங்கியது. மொத்தத்தில் ஆலையடிச் சந்தை உள்ளூர்ச்சந் தையாக மாத்திரம் படிப்படியாக மாறிவிட்டது.

விசாலமான சந்தையின் அவசியம் குறையத் தொடங்கியதால் பள்ளிவாசலுக்கான சந்தையின் வளவுகளும் காணாமல் போய்விட்டன. உள்ளூர் தேவைக்கான சந்தையின் பள்ளிவாசல் வளவு இடம் பற்றாக்குறை யேற்றப்பட்டது. இதனால் சம்மாந்துறை பட்டின சபையினால் ஐந்தாறு வ ளவுகள் அம்மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும், ஊரில் உள்ள சில பெரியார்கள் தூர நோக்கின் பார்வைக்கு விரோதமாகவும் சந்தைக்காக பட்டின சபையால் சுவீகரிக்கப்பட்டன. இந் நிகழ்வு 1965 ல் நடைபெற்றது. இன்று இக்கட்டுரையில் விபரிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கி புனித பிரதேசம் பிரகடனப்படுத்தப்படுவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும். இதன்மூலம் இப்பிரதேசம் இன்னும் செழுமையும் பொலிவும் பெறும்.

அல்-ஹாஜ், எஸ். அப்துல் றாஸீக் ஜே. பி.
செயலாளர் நாயகம்,
மஜ்லிஸ் அஷ்ஷூறா,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறை ஹிஜ்றா நவீன பொதுச் சந்தை வரலாறும் வளர்ச்சியும்

'கிழக்கின் தானியக் களஞ்சியம்' எனப் பலராலும் போற்றிப் புகழப்படும் சம்மாந்துறைத் தாயகம் இன்று விழாக் கோலம் பூண்டு மகிழ்ச்சிக் களிப்பில் பூரித்துப்போய் நிற்கின்றது. 'சம்மாந்துறையின் இதயம் எனக் கருதப்படும் ஹிஜ்றாச் சந்தி அலங்காரச் சோடனைகளால் மிதப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. இம்மகிழ்ச்சிப் பிரவாகத்திற்குக் காரணம் சம்மாந் துறை மண்ணின் மைந்தனும் இளஞ்சிங்கமும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு அபிவிருத்தி உட்கட்டடைப்பு பிரதி அமைச்சருமான கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் தலைமையில் நடைபெறும் நவீன பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியின் திறப்பு விழாவும் அதனோடி ணைந்த அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஆரம்ப விழாவுமாகும். இப்பெரு விழாவினைச் சிறப்பிப்பதற்காக இலங்கைத் திருநாட்டின் பிரதம மந்திரி மாண்புமிகு மகிந்த ராஜபக்ஸ அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வது நாம் பெற்ற பெரும் பேறாகும்.

இன்றைய விழாவின் முக்கிய அம்சமாக அமையவிருப்பது ஹிஜ்றா சந்தியில் அமைந்துள்ள நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் திறப்பு விழாவாகும். கௌரவ பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் சேவையின் சின்னமாக திகழவிருக்கும் இந் நவீன சந்தைத் தொகுதி பல கோடி ரூபா செலவில் அன்னாரின் அரிய முயற்சியி னால் முற்றுப்பெற்று இன்று சம்மாந்துறைத் தாயிடம் ஒப்படைப்பதையிட்டு, இம்மண்ணில் பிறந்த ஒவ்வொரு மகனும் பெருமிதமடையாமலிருக்க முடியாது.

சம்மாந்துறையின் நீண்டகாலக் கனவாகிய நவீன சந்தை இன்று கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். இவ்வேளையில் இச்சந்தைத் தொகுதி உருவாகி வளர்ச்சி பெறுவதற்குப் பல தசாப்தங்கள் கடந்துவர வேண்டியிருந்தது. இதற்கு நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியும் காணப்படுகின்றது. அவ்வரலாற்றைச் சற்று பின்னோக்கிப்பார்ப்பது மிகப் பொருத்தமானதொரு விடயமாகும்.

### ஹிஜ்றா நவீன சந்தையின் அமைவிட முக்கியத்துவம்

எந்தவொரு நாடோ நகரமோ அல்லது இடமோ அது அமைந்திருக்கும் நிலையத்தையிட்டே முக்கியத்துவம் பெறுகின்றது. இன்று திறப்பு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் நவீன சந்தை அமைந்துள்ள இடம் சம்மாந்துறையின் மையமாக விளங்கும் ஹிஜ்றா சந்தியிலாகும். இவ்விடம் இப்பிரதேசத்தின் முக்கிய வர்த்தக மையமாகவும் போக்குவரத்து ஊடறுத்துச் செல்லும் முக்கிய சந்தியாகவும் திகழ்கிறது. முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் யூ.எல்.எம். முகையதீன் அவர்களின் முயற்சியினால் ஹிஜ்றா சந்தியின் மையத்தில் ஒரு மணிக்கூட்டுக் கோபுரமும் அதனைச் சுற்றி ஒரு சுற்று வட்டமும் அமைக்கப்பட்டது. இது இப்பகுதியின் அழகை மேலும் மெருகூட்டி நிற்கின்றது. இச்சுற்று வட்டத்தை மையமாக வைத்து நான்கு திசைகளிலும் நான்கு பெரு வீதிகள் செல்கின்றன.

இதில் முதலாவது பெரு வீதி ஹிஜ்றா சந்தியிலிருந்து கிழக்காக 'ஹிஜ்றா வீதி' என்ற பெயருடன் செல்கிறது. இவ்வீதியில் முக்கிய வர்த்தக நிலையங்களும் ஊவா அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி, வலயக் கல்வி அலுவலகம், பொலிஸ் நிலையம், தபால் நிலையம், பஸ் டிப்போ, பிரதேச செயலகம், விவசாய விஸ்தரிப்பு நிலையம், மாவட்ட வைத்தியசாலை, பிர தியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் பெருமுயற்சியினால் அமைய விருக்கும் ஜம்இய்யதுல் உலமா தலைமைக் காரியாலயமும் மற்றும் முக்கிய நிறுவனங்களும் சிறு கைதொழில் நிலையங்களும் அமைந்து அடர்த்தியான குடிசனப் பரம்பலுடன் நெருக்கமான போக்குவரத்து கட்டமை ப்புடன் காணப்படுகிறது. மேலும் கல்முனை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று போன்ற கரையோர பிரதேசங்களில் இருந்து வரும் பேரூந்துப் போக்குவரத்தின் பிரதான பாதையாகவும் இது திகழ்கிறது.

இரண்டாவது பெரு வீதி மேற்குப் புறமாக அம்பாரை நோக்கிச் செல்கிறது. இவ்வீதியில் வர்த்தக நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையம், இலங்கை வங்கி, ஜும்ஆப் பள்ளிவாசல், மின்சாரசபை அலுவலகம், பிரதேச சபை அலுவலகம், நூலகம், அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி, தபால் நிலையம், தென் கிழக்குப் பல்கலைக் கழக பிரயோக விஞ்ஞான பீடம், தொழில் நுட்பக் கல்லூரி, குடிநீர் விநியோக சுத்திகரிப்பு நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், மிருக வைத்திய நிலையம், பால் பதப்படுத்தும் நிலையம், பென்சனியர் தலைமைக் காரியாலயம், பள்ளிவா சல்கள் போன்ற இன்னோரன்ன நிறுவனங்களும் அடர்த்தியான மக்கள் குடியிருப்பும் காணப்படுகிறது.

இதேபோல் தெற்கு நோக்கிச் செல்லும் பெருவீதி மல்கம்பிட்டி வீதி என்ற பெயருடன் சம்மாந்துறை புளக் ஜே என்ற பிரதேசத்தை இரண்டாகப் பிரிக்கும் எல்லையாக அமைந்து செல்கிறது. இவ்வீதிக்கு மேற்கில் உள்ள பகுதி புளக் ஜே மேற்கு என்றும் கிழக்கில் உள்ள பகுதி புளக் ஜே கிழக்கு என்றும் பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது. இப்பிரதேசம் 1950 ம் ஆண்டிலிருந்து படிப்படியான அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருக்கிறது. கல்லோயாக் குடியேற்றத்தின் மூலம் இப்பிரதேசம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள புதிதாக குடியேறிய பகுதியாகும். இதனூடாக செல்லும் பெரு வீதி புளக் ஜே பிரதேசத்தை கடந்து பரந்த நெல்வயல் வெளியூடாகச் சென்று 'மல்கன்பிட்டி' என்ற புராதனப் புகழ்வாய்ந்த கிராமத்தைச் சென்றடைகின்றது. மேலும் இப்பாதை நெயினாகாடு என்ற கிராமத்தை ஊடறுத்து பௌத்தர்களின் பௌத்த தலமாகிய தீகவாப்பி இறக்காமம் போன்ற பகுதிகளுக்கும் செல்கின்றது. இப்பாதை நெடுகிலும் பரந்த நெல்வயல்களே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தின் முக்கிய சிறுகைத்தொழிலாகிய செங்கல்சுடும் நிலையங்கள் நூற்றுக் கணக்கில் காணப்படுகின்றன. சம்மாந்துறைக்கும், கரையோரப் பிரதேசத்திற்கும் தேவையான செங்கல்லின் பெரும்பகுதி இவ்வீதியினூடாகவே கொண்டு செல்லப்படுகின்றது. சம்மாந்துறை விவசாயிகளின் முக்கிய விவசாய நடவடிக்கைகளின் பிரதான போக்குவரத்து பாதையாகவும் இவ்வீதியே திகழ்கிறது.ஹிஜ்றா சந்தியிலிருந்து வடபுறமாகச் செல்லும் பெருவீதி சம்மாந்து றையின் பிரதான வீதியாக அமைந்துள்ளது. 'சம்மாந்துறை' என்ற பெயருடன் பாரம்பரியமாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே குடியிருப்புக்களைக் கொண்டிருந்த பகுதிகளை ஊடறுத்துச் செல்கின்றது. இப்பெரு வீதியில் சம்மாந்துறைக்கான குடிநீர் விநியோக நீர்த்தாங்கி, சம்மாந்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பள்ளிவாசல்கள், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), சம்மாந்துறைப் பிரதேச சபை, இந்துக்க ளின் வணக்கஸ்தலம், சம்மாந்துறை அமீர் அலி பொதுநூலகம் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், கைத்தொழில் நிலையங்கள் என்பன காணப்படுகின் றன. சம்மாந்துறை மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதியூடாக இப்பெருவீதி செல்கிறது.

மேற்கூறிய பிரதான நான்கு பாதைகளில் சந்திக்கும் இடமாக திகழும் ஹிஜ்றா சந்தியின் நாலாபுறமும் நகர அமைப்பைக் காட்டும் கட்டிடத் தொகுதிகள் நிறைந்து காணப்படுகின்றன. சம்மாந்துறை பிரதேச மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும் மையமாக ஹிஜ்றா சந்தி திகழ்கிறது. இச்சந்தியிலிருந்து தென் புறமாகச் செல்லும் மல்கன்பிட்டி வீதிக்கும், மேற்குப் புறமாகச் செல்லும் அம்பாரை வீதிக்கும் இடையில் அமைந்துள்ள இடமே இன்று திறப்பு விழாக் காணும் ஹிஜ்றா நவீன பொதுச் சந்தைக் கட்டிடமாகும். மேலும் இன்று சம்மாந்துறையில் 'ஜும்ஆ' பள்ளிவாசல்கள் ஆறு காணப்படு கின்றன. இவற்றில் நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதிக்கு மேற்குப் புறமாக அம்பாரை வீதியோரமாக மிகவும் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் ஹிஜ்றா ஜும்ஆப் பள்ளிவாசல் அமைந்துள்ளது. இப்பள்ளிவாசலின் முகப்பும் நுழைவாயிலும் இவ்வூரின் பெருமகன் என்று அழைக்கப்படும் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினாலே அழகுபடுத்தப்பட்டு திறந்து வைக்கப் படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல்வேறு நிலைய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் சம்மாந்துறை மக்களின் நீண்டகாலக் கனவாகிய நவீன பொதுச் சந்தைத் தொகுதி அமைந்து அழகுபெற்றிருப்பதற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

### ஹிஜ்றா சந்தியின் வரலாறு

சம்மாந்துறை ஹிஜ்றா சந்தி இன்று சன நெருக்கடி மிகுந்த இடமாகவும், போக்குவரத்து நெரிசல் அதிகரித்த இடமாகவும், மக்கள் சேவையின் குவிமையமாகவும், வர்த்தக கேந்திர நிலையமாகவும் திகழ்கிறது. ஆயினும் இவ்விடம் பல தசாப்தங்களுக்கு முன்னர் காடடர்ந்த பிரதேசமாகவும், வனவிலங்குகளின் நடமாட்டம் உள்ள இடமாகவும், சேனைப் பயிர்ச்செய்கை நடைபெறும் பகுதியாகவும் இருந்துள்ளது. இச்சந்தி நீண்டகாலமாக 'அஸறப்பா சந்தி' என்ற பெயருடனேயே அழைக்கப்பட்டு வந்தது. இச்சந்தியில் அப்போது சிறு குடிசைகள் போன்ற ஒரு சில கடைகளே காணப்பட்டன. அப்போது பின்வரும் பாடல் இங்கு பிரசித்தமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அஸறப்பா சந்தியில ஆரப்பா கடையில
போடப்பா தேயிலை, பூப்போட்ட கிளாசில "

ஆரம்பத்தில் ஹிஜ்றா என்றழைக்கப்படும் பொலிஸ் நிலைய வீதி அமைக்கப்படவில்லை. அது பின்னாளிலேயே கல்லோயா அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளுக்குப் பின்னரே திறக்கப்பட்டது. இச்சந்தியிலிருந்து தென் புறமாகச் செல்லும் மல்கன்பிட்டி வீதியில் 16கிலோ மீற்றருக்கு அப் பால் பௌத்தர்களின் புனித இடமாகிய 'தீகவாபி' என்ற இடம் காணப்படுகிறது. இதன் காரணமாக பல ஆண்டுகளாக தீகவாபிச் சந்தி என்ற பெயர் கொண்டு அழைக்கப்படலாயிற்று. இதனால் 'அஸறப்பா சந்தி' என்ற பெயர் மருவி வரலாயிற்று. ஆயினும் இச்சந்தி இப்பிரதேசத்தின் முக்கிய இடமாக மாற்றமடைந்து வந்தவேளையில் இலங்கையில் ஹிஜ்ரி 1400ம் வருடம் மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வு 1979 ம் ஆண்டு நடைபெற்றது. அதன் ஞாபகார்த்தமாக பலரின் ஆலோசனையின்படி இவ்விடம் ஹிஜ்றா சந்தி என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது.

**சம்மாந்துறையின் 'சந்தை' வளர்ச்சி பற்றிய வரலாறு**

'சாமுத்திரிகா' இலட்சணங்கள் யாவும் அமையப்பெற்ற சம்மாந்துறைத் தாயிடம் கருக்கட்டி வளர்ச்சியடைந்து இன்று பிறந்துள்ள 'சம்மாந்துறைப் பொதுச் சந்தை' என்ற சேயின் வளர்ச்சியும் வரலாறும் மிகவும் நீண்டது. சம்மாந்துறையின் வரலாற்றில் ஆரம்ப காலத்திலேயே ஒரு சந்தை ஆரம்பிக்கப்பட்டு அது பல்லாண்டு காலம் நிடித்து நிலைத்து வந்துள்ளது. இன்று சம்மாந்துறையின் 'பழைய மார்கட்' என்றழைக்கப்படும் இடம் பண் டைய காலத்தில் கண்டியரசர்களின் பொருட்கள் வாங்கும் விற்கும் இடமாக திகழ்ந்து வந்துள்ளதாக அறியக் கிடைக்கின்றது. கண்டியரசர்களின் கிழக்கின் துறைமுகமாக சம்மாந்துறை பல்லாண்டு காலம் இருந்து வந்துள்ளது. அப்போது இத்துறைமுகத்திற்கு வரும் பொருட்களும், இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களும் பரிமாற்றம் செய்யப்படும் இடமாக இச்சந்தை அமைந்திருந்தது. 'தாவளம்' என்ற பாதையூடாக இப்பொருட்கள் கண்டிராச் சியத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன.ஆயினும் இச்சந்தை தொடர் பான பூரண தகவல்கள் மேலும் ஆராயப்பட வேண்டியன.

சம்மாந்துறை என்றழைக்கப்பட்ட பட்டிணப் பகுதி முதலில் 'Sanitary Board' யின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வந்தது.பின்னர் இது 1947ம்ஆண்டு பட்டின சபை என்ற அந்தஸ்தைப் பெற்று பலத்தாபன நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு சபையாக பரிணமித்தது. கிழக்கிலங்கையின் முதலாவது பட்டின சபை யும் இதுவாகும். சம்மாந்துறையின் பெரும்பாலான பகுதி 1964 வரைபட்டின சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதியாகவே இருந்து வந்தது. பின்னர் 1964 யில் கருவாட்டுக்கல், புளக் ஜே பகுதிகள், நாவிதென்வெளி கிராம சபைக்குட்பட்ட பகுதியாக மாற்றம் செய்யப்பட்டது. சம்மாந்துறை பட்டினசபை பகுதியில் பஸார் வீதி என்றழைக்கப்படும் வீதியில் அமைந்துள்ள பொதுச் சந்தை பன்னெடுங்காலமாக இயங்கிவந் துள்ளது. இச்சந்தை அமைந்திருந்த இடம் சம்மாந்துறை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர் சபைக்கு சொந்தமா னது. இச்சந்தையில் நிரந்தரக் கட்டிடங்கள் இருக்கவில்லை. இதனைச்சுற்றி கடைத்தெரு வளர்ச்சியடைந்திருந்தது.ஆயினும் பெருகிவரும் மக்கள் தொகை க்கு ஈடுகொடுக்கும் வசதிகள் இச்சந்தையில் இருக்கவில்லை. இப்பொதுச் சந்தை இயங்கிவந்த மக்கள் 'ஆலையடி' என்றே அழைக்கலாயினர். இவ்விடத்தில் ஆல மரம் ஒன்று இருந்தது. பொது மக்களிடம் 'சந்தை'என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லைவிட 'ஆலையடி' என்ற பெயரே வழக்கிலிருந்தது. சந்தைக்கு சென்று வரும் ஒருவரிடம் 'நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்' என்றுகேட்டால் அவர் உடனே 'நான் ஆலையடிக்கு போய் வருகிறேன்' என்றுதான் கூறுவர். அந்தளவுக்கு சந்தைக்குப் பதிலாக 'ஆலையடி' என்ற காரணப் பெயர் சம் மாந்துறையில் பிரபல்யம் பெற்று விளங்கியிருந்தது.சம்மாந்துறை மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலையில் இச்சந்தை இல்லாத காரணத்தினால் இதனை விஸ்தரிக்க வேண்டிய அவசர நிலமை ஏற்படலாயிற்று. சம்மாந்துறைப் பட்டின சபையின் தலைவராக இருந்த மர்ஹூம் எம்.ஏ. அமீர் அலி (1962 - 1968, 1970 - 1977 ) அவர்களின் காலத்தில் ஆலையடி என்ற சந்தை அமைந்திருந்த பகுதிக்கு கிழக்குப் புறமாக உள்ள தனியார் காணிகள் சுவீகரிக்கப்பட்டு அவ்விடத்தில் பொதுச் சந்தைக் கட்டிடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. நீண்டகாலமாக ஓலைக்கொட்டில்களில் இயங்கிவந்த சந்தை இதன் பின்னர் ஓரளவு வசதிகளைக் கொண்ட நிரந்தர கட்டிடத்தில் இயங்கிவந்தமை சந்தை அபிவிருத்திப் படியில் ஒரு முக்கிய கட்டமாக குறிப்பிடலாம்.

ஆயினும் காலவோட்டத்தில் இப்பொதுச் சந்தை நீடித்து நிலைக்கமுடி யாத சூழ்நிலை ஏற்படலாயிற்று. சம்மாந்துறையில் குடிசனப் பெருக்கம் வருடா வருடம் பெருகி வந்தமையால் இங்குள்ள மக்கள் கருவாட்டுக்கல், புளக் ஜே பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து செல்லலாயினர். இவ்விடப பெயர்ச்சி காரணமாக 1960 ஆம் ஆண்டின் பின்னர் அப்பகுதிகள் சனநெருக்கடி கூடிய பகுதியாக மாறிவரலாயிற்று. இப்பிரதேசத்தின் மையப் பகுதியாக முன்னர் குறிப்பிட்ட ஹிஜ்றா சந்தி வளர்ச்சியடைந்து வரலாயிற்று. பயங்கரவாத நடவடிக்கையும் மக்கள் இடம்பெயர்வுக்கு முக்கிய காரணமா கும். இந்த நிலையில்தான் ஹிஜ்றா சந்தியிலும் ஒரு பொதுச் சந்தையின் அவசியம் உணரப்பட்டு அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படலாயின. பலரினதும் உழைப்பின் பலனாக உருவாகி வளர்ச்சியடைந்து வந்த ஹிஜ்றா சந்தியில் அமைந்த சந்தையின் துரித வளர்ச்சியால் பட்டின சபைப் பகுதியில் பன்னெடுங்காலமாகச் சீருஞ்சிறப்புடனும் இயங்கி வந்த சந்தை தனது முக்கியத்துவத்தைப் படிப்படியாக இழந்து வரலாயிற்று.

**ஹிஜ்றா - நவீன பொதுச் சந்தையின் வரலாற்றுப் பின்னணி**

சம்மாந்துறைப் பட்டினப் பகுதியிலிருந்த மக்கள் பெருந்தொகையில் கருவாட்டுக்கல், புளக் 'ஜே' போன்ற பகுதிகளை நோக்கி இடம்பெறலாயின. இதனால் உள்ளூராட்சி கட்டமைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. 1964 வரை சம்மாந்துறைப் பட்டின சபையுடன் இணைந்திருந்த கருவாட்டுக்கல், புளக் 'ஜே' பகுதிகள், நாவிதன்வெளி கிராமசபையுடன் இணைக்கப்படலாயின. இக்கால கட்டத்தில் நாவிதன்வெளி கிராமசபையின் 13 ம் வட்டாரமாக கருவாட்டுக்கல்லும், 14 ம் வட்டாரமாக புளக் 'ஜே'யும் இயங்கின. ஹிஜ்றா சந்தியில் அமைந்துள்ள நவீன பொதுச் சந்தைத் தொகுதி மேற்கூறிய 14 ம் வட்டாரத்திலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.சம்மாந்துறை ஹிஜ்றா பொதுச் சந்தை உருவாகி வளர்ச்சியடைந்து, இன்று நவீன பொதுச் சந்தையாக பரிணமித்து நிற்பதற்குப் பலர் தமது பூரண பங்களிப்பை நல்கி வந்துள்ளனர். 1964 ஆம் ஆண்டு நாவிதன்வெளிக் கிராமசபையின் கீழ் இப்பிரதேசம் நிருவகிக்கப்பட்ட போதிருந்து பொதுச் சந்தை தொடர்பான ஆவணங்களும் தகவல்களும் எமக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளது.கல்லோயா அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்ட காலத்திலிருந்தே குடியிருப்பு நிலம், பொதுத்தேவைக்குரிய நிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நகர நிருமாணப்படத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த நகர நிர்மாணப்படத்தில் தற்போது சந்தை அமைந்துள்ள பகுதியும், ஹிஜ்றா பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியுமாக மொத்தம் மூன்று ஏக்கர் நிலம் பஸ்தரிப்பு நிலையத்திற்காகவும் பொதுச் சந்தைக்காகவும் ஒதுக்கப்பட்டு ள்ளது. இவ்வாறு பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட மேற்படி நிலத்தை தனியாக்கள் சிலர் காடுவெட்டித் திருத்தி குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இவ்விடத்தில் பொதுச் சந்தை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் இங்கு நீண்டகாலமாக குடியிருக்கும் மக்களை வெளியேற்றுவது மிகவும் சிரமமான காரியமாகவே இருந்துள்ளது.

நாவிதென்வெளிக் கிராம சபைத் தலைவர் திரு வி.ரி. சின்னத்துரை அவர்கள் சந்தைக்குரிய நிலத்தைப் பெறுவதில் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. மேற்படி சபையின் 13 ம் வட்டார அங்கத்துவர் ஜனாப் யூ. கலந்தர் லெப்பை அவர்களினதும்14ம் வட்டார அங்கத்துவர் ஜனாப் எம். அச்சிமுகம்மது அவர்களினதும் வேண் டுதலின் பேரில் கிராம சபைத் தலைவர் திரு வி.ரி. சின்னத்துரை அவர்கள் நகர நிர்மாணப் படத்தில் பஸ் நிலையத்திற்காகவும் பொதுச் சந்தைக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள மூன்று ஏக்கர் நிலத்தை நாவிதன்வெளிக் கிராம சபைக்கு ஒதுக்கித் தருமாறு 07.08.1965 ம் ஆண்டு அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பியுள்ளார். மேற்குறிப்பிட்ட நிலம் பொதுத் தேவைக்கு ஒதுக்கப்பட்ட போதிலும் அங்கு குடியிருப்பவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் தோல்வியிலேயே முடிந்து வந்துள்ளன. 14ம் வட்டார அங்கத்தவரான ஜனாப் எம். அச்சிமுக ம்மது அவர்கள் இந் நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்ற நடவடிக் கைகள் மேற்கொ ள்ளுமாறு கிராம சபைத் தலைவரை வேண்டி 27.02.1966 ம் திகதி ஒரு கடிதம் எழுதியுள்ளார். நாவிதன்வெளிக் கிராம சபைத்தலைவர் திரு வி.ரி. சின்னத்துரை அவர்கள் சம்மாந்துறைக். காரியாலய அதிகாரி அவர்களுக்கு 19.05.1967ம் ஆண்டு மேற்படி நிலத்திலிருந்து அங்கு குடியிருக்கும் மக்களை வெளியேற்றுமாறும் அவர்களது நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறும் கோரி கடிதம் அனுப்பியுள்ளார். மேற்கடிதத்தைப் போல் பல கடிதங்கள் இவ்விடயம் தொடர்பாக அனுப்பப்பட்டும் முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை.ஒரு சந்தர்ப்பத்தில் அம்பாரை அரசாங்க அதிபர் அவர்க ளால் கச்சேரி சேவியர் அவர்களுக்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறி அறிவுறுத்தல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதம் பின்வருமாறு அமைந்துள்ளது.

எனது இல. இ.ஐ / 904
திரு எம். விஜயக்கோன் அவர்களுக்கு
கச்சேரி சேவியர்,உகனை.

**சம்மாந்துறை கிழக்கு கி.ச. க்கு இடம் ஒதுக்கல்**

1. சம்மாந்துறை கிழக்கு கி.ச.க்கு பஸ் நிறுத்தம் ஸ்தாபனத்திற்காக ஏக்கர் 1.5 இத்துடன் இணைத்துள்ள படத்தின் பிரகாரம் RDO முன்னி லையில் சம்மாந்துறை கிழக்கு கிராம சபைக்கு பாரம் கொடுத்து அறிவிக்கவும்.

2. அன்றே சம்மாந்துறை தீகவாபிச் சந்தி எஸ்.எம். இப்றாகிம் அவர் களுக்கு கொடுபட்ட இடத்தையும், RDO முன்னிலையில் ச.கி. கிராம சபைக்கு பாரம்கொடுத்து அறிவிக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அன்றே இப்றாகிம் கடையின் பின்புறமுள்ள இடத்தையும் எம்மால் உங்களுக்கு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் மார் கட்டுக்காக ச.கி கிராம சபையிடம் RDO முன்னிலையில் கலந்து பாரம்கொடுத்து அறிக்கைசெய்யவும்.

4. கௌரவ உள்நாட்டு அமைச்சு மந்திரி இம்மாதம் 13 ம் திகதி திறந்துவைக்க யோசனை செய்துள்ளமையால் இதற்கு முதலிடம் கொடுத்து நடவடிக்கை செய்யவும்.

அரசாங்க அதிபருக்காக,
1967 ஆவணி 07 ம் திகதி,கச்சேரி,அம்பாறை.

மேற்கூறிய நடவடிக்கை மூலம் பின்வரும் விடயங்களை அறியக்கூடிய தாக உள்ளது. பஸ் நிலையத்திற்கும் சந்தைக்குமாக அரசாங்கம் நிலம் ஒதுக்கியுள்ள நிலையில் மேற்படி பொதுத் தேவைக்காக நிலஅளவை செய்யப்பட்டு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளமையும் இப்பொதுத் தேவைக்கான நிலத்தில் சிலர் ஆக்கிரமித்திருப்பதையும் குறிப்பிடலாம். ஆயினும் இவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும் குறிப்பிட்ட பொது நிலங்களிலிருந்து எவரையும் வெளியேற்ற முடியாத நிலையே தொடர்ந்தது. இதே வேளை கௌரவ உள்நாட்டு அமைச்சராக இருந்த திரு டபிளியூ தசாநாயக்கா அவர்கள் 1967 ம் ஆண்டு பொதுச் சந்தைக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆயினும் சந்தைக் கட்டிட வேலைகள் தொடரப்படவில்லை. 'சம்மாந்துறைக் கிராம சபை' பெயருடன் நாவிதன்வெளிக் கிராம சபையிலிரு ந்து பிரிந்து தனியான கிராம சபையாக 1968ம் ஆண்டிலிருந்து இயங்க ஆரம்பித்தது.1968ம் ஆண்டு ஜுன் மாதம் ஏழு வட்டாரங்களைக் கொண்ட சம்மாந்துறை கிராம சபைத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

1. ஜனாப் ஏ. ஆமிதுலெவ்வை (தலைவர் 1968 - 1970)
2. ஜனாப் ஐ.எல். உதுமாலெவ்வை (தலைவர் 1970 - 1973)
3. ஜனாப் எஸ்.எம். உதுமாலெவ்வை (தலைவர் 1973 - 1977)
4. ஜனாப் எம்.ஏ. மீராலெவ்வை - சபை உறுப்பினர்கள்
5. ஜனாப் ஏ. கலந்தர்லெவ்வை - சபை உறுப்பினர்கள்
6. ஜனாப் ஏ. தம்பிலெவ்வை - சபை உறுப்பினர்கள்
7. ஜனாப் ஏ. அலியார் - சபை உறுப்பினர்கள்

ஜனாப் ஏ. ஆமிதுலெவ்வை அவர்களின் தலைமையில் முதலாவது சம்மாந்துறை கிராம சபை நிர்வாகம் ஆரம்பமானது. தலைவரும், உறுப்பினர் களும் பொதுச் சந்தை அமைக்கும் பணியில் கூடிய கவனம் செலுத்தினர். ஆயினும் இவர்களுக்கு பொதுச் சந்தையில் கட்டிடப் பணிகள் ஆரம்பிப்ப திலும், அபிவிருத்தி செய்வதிலும் தனியார் நிலத்தை ஆக்கிரமிப்பது பெரும் தடையாக இருந்தது. இதற்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்ள சபையினர் முடிவுசெய்தனர்.

தற்போது பிரமாண்டமான அளவில் காட்சி தரும் ஹிஜ்றாப் பள்ளிவாயல் அமைந்துள்ள இடமும் கிராம சபைக்கு உரியதாக இருந்தது. இந்த இடத்தில் பஸ் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆயினும் முன்னர் குறிப்பிட்ட பொதுச் சந்தை அமைப்பதில் ஏற்பட்ட சிரமத்தின் காரணமாக அவ்விடத்தைவிட்டு பஸ் நிலையம் அமைக்க சிபாரிசு செய்யப்பட்ட நிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் சந்தை அமைப்பது உசிதம் எனக் கருதி அதற்கான தீர்மானத்தினையும் சபையினர் எடுத்தனர்.

சம்மாந்துறை கிராம சபை உறுப்பினர்களின் மேற்படி தீர்மானத்தை அறிந்த சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் இவ்விடயத்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கிராம சபை தலைவர், உறுப்பினர்களை தனது இல்லத்திற்கு அழைத்து இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடல் நடத்தினார்கள். கிராம சபைத் தலைவரும் உறுப்பினர்களும் பொதுச் சந்தை அபிவிருத்திக்கு தனியார்கள் அங்கு குடியிருப்பது பெரும் தடையாக இருப்பதையும் அதனால் மாற்று ஒழுங்கு செய்ய முடிவு எடுத்திருப்பதாகவும் கூறினார்கள்.கிராம சபை உறுப்பினர்களின் கருத்தை கேட்டறிந்த முந்நாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்கள் சந்தைக்குரிய நிலத்தில் குடியிருப்பவர்களைதான் உடன் வெளியேற்றித் தருவதாகவும் சந்தைக்கென குறிப்பிட்ட இடத்திலேயே சந்தை அமைய வேண்டுமெனவும் கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட சபையினர் தனியார் ஆக்கிரமித்திருந்த பகுதி தவிர ஏனைய பகுதிகளில் சந்தைக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயினர்.

முந்நாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீட் அவர்கள் தாம் வாக்களித்தபடி சந்தைக்குரிய நிலத்தை ஆக்கிரமித்திருந்தவர்களை வெளியேற்றுவதற்காகப் பல முயற்சிகளில் ஈடுபட்டார். இது தொடர்பாக பல கலந்துரையாடல்களும் கூட்டங்களும் அவரால் நடாத்தப்பட்டன. குடியிருப்பாளர்களுக்குப் பல சலுகைகள் வழங்குவதாகவும் கூறப்பட்டது. இந்த நிலமைகள் பல வருடங்கள் நீடித்தும் இறுதிவரை இவர்களை வெளியேற்ற முன்னாள் அமைச்சர் அப்துல் மஜீட் அவர்களாலும் முடியாமலே போயிற்று. பொதுச் சந்தைக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் குடியிருந்த சிலரிடம் அரச உத்தரவுப் பத்திரம் இருந்தது. சிலரிடம் உத்தரவுப் பத்திரம் எதுவும் இருக்கவில்லை. பொதுச் சந்தை அமைப்பதற்கு தேவைப்படும் நிலத்தில் றோட்சைட்டில் 25 வருடங்களுக்கு முன்னர் பணம் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றவர்கள் சிலரும் இருந்தனர். இவ்வாறான நிலமையில் இவர்களை அகற்றுவது பெரும் சிரமமான காரியமாகவே இருந்தது.

இவர்களை இங்கிருந்து வெளியேற்றும் இன்னுமொரு நடவடிக்கை சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் அவர்களால் வெளியேறுமாறு கூறும் அறிவித்தல் வழங்கப்பட்டது. 26.05.1993ம் திகதி இந்த அறிவித்தல் சட்டரீதியாக வழங்கப்பட்டது. இந்த நடவடிக்கையும் தோல்வியிலேயே முடிவடைந்தது. இவ்விடயம் தொடர்பாக முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் யூ.எல்.எம். முகையதீன் அவர்களும் பல முயற்சிகளில் ஈடுபட்டார். 20.09.1998 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் இல்லத்தில் பொதுச்சந்தை அமைப்பது தொடர்பாகவும், அங்கு குடியிருப்பவர்களை வெளியேற்றுவது தொடர்பாகவும் கலந்துரையாடல் நடைபெற்றது. அக்கூட்டத்திலும் சரியான தீர்வு எட்டப்படவில்லை. மேலும் அம்பாறை மேல் நீதிமன்றத்திலும் குடியிருப்பாளர்களால் வழக்குத் தொடரப்பட்டு அவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுச் சந்தைக்கான நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்றும் பணி பல்வேறுபட்ட தரப்பினராலும் பல்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை அனைத்து முயற்சிகளும் முயற்கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகவே முடிந்தது. இதன் காரணமாக சம்மாந்துறை மக்களின் கனவாகிய நவீன பொதுச் சந்தை என்பது பகற் கனவாகவே சென்றுகொண்டிருந்தது. இந்த விடயம் ஒரு முடிவுக்கு வராதா? என்று ஏங்கியோர் பலர்.

**பொதுச் சந்தை நிர்மாணப் பணிகள்**

பொதுச் சந்தைக்குரிய நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்றும் நடவடிக்கை ஒருபுறமிருக்க, மீதியாக இருந்த நிலத்தில் சந்தை நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டேயிருந்தது.ஆயினும் நிரந்தரக் கட்டிடமில்லாமல் தற்காலிகக் கொட்டில்களில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாயின. இதனை உணர்ந்த சம்மாந்துறை கிராம சபைத் தலைவர் ஜனாப் எஸ்.எம். உதுமாலெவ்வை அவர்களும் உறுப்பினர்களும் மேற்கொண்ட அயராத முயற்சியின் பலனாக ரூபா 35000/= அரச நிதி பெற்று இறைச்சி, மீன்,மரக்கறி போன்றவற்றின் விற்பனைக்காகக் கட்டிடமொன்றைக் கட்டலாயினர்.

ஆனால் இக்கட்டிடங்கள் 1978 ஆம் ஆண்டு வீசிய சூறாவளியினால் முற்றாகச் சேதமடைந்தது. இதனால் எதுவித கட்டிட வசதியுமில்லாமல் சந்தை காணப்பட்டது. இதையறிந்த முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. அப்துல் மஜீது அவர்களின் முயற்சியினால் திட்டப்பணிப்பாளராக இருந்த ஏ.ஏ. பாவா அவர்களின் அனுசரணையுடன் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணத்தில் ரூபா இரண்டு மில்லியன் பெறப்பட்டு மல்கம்பிட்டி றோட் பக்கமாக உள்ள மாடிக்கட்டிட கீழ்த்தொகுதி, சந்தையின் மேற்குப் புறமாக உள்ள இறைச்சிக் கடை, மீன் மார்கட் என்பன கட்டப்படலாயிற்று. இதன் பின்னர் 1994 ஆம் ஆண்டில் கௌரவ புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா இரண்டு மில்லியன் பெறப்பட்டு மல்கம்பிட்டி றோட் பக்கமாக உள்ள கட்டிடத் தொகுதியின் மேல்மாடி கட்டப்பட்டது. ஆனால் பிரதான வீதியான அம்பாரை வீதிப்பக்கம் அமைந்துள்ள பகுதியில் குடியிருந்தவர்களை எழுப்பவோ சந்தைக் கட்டிடத்தை கட்டவோ தொடர்ந்தும் முடியாமலே போயிற்று.

**நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி**

சம்மாந்துறைக்கென ஒரு நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி கட்டுவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் எத்தனையோ இடையூறுகள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. ஒரு பக்கம் தனியார்களை இங்கிருந்து வெளியேற்றும் பிரச்சினை. மற்றது புதிய கட்டிட வேலைகளுக்கு இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தக நிலையங்களை வேறு இடத்திற்கு மாற்றுவது. இதற்கு தற்காலிக ஏற்பாடாக சம்மாந்துறைப் பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருடன் கலந்துரையாடி ஒரு முடிவு காணப்பட்டது. இதன்படி சம்மாந்துறைப் பற்றுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளவில் அமைந்த பஸ் நிலையத்திற்கு தற்காலிகமாக சந்தை மாற்றப்பட்டது. இந்த நடவடிக்கையால் பொதுச் சந்தைக்குரிய கட்டிட நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெறலாயின. ஆயினும் அம்பாரை றோட் பக்கமாகக் குடியிருந்த தனியார்களின் வீடும் கடைகளும் ஹிஜ்றாச் சந்தியின் அழகை அவலட்சணமாகக் காட்டிக் கொண்டிருந்தன. இந்த இடம் பெறப்படாமல் நவீன பொதுச் சந்தை அமைப்பது என்பது நினைத்துப் பார்க்கக்கூட முடியாது என்பது அனைவருமே ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவீன பொதுச் சந்தை பற்றிய கனவு நனவாகிறது**

சம்மாந்துறை மக்கள் கடந்த அரைநூற்றாண்டுகளாகக் கண்டிருந்த கனவு இன்று நனவாகி ஹிஜ்றா சந்தியில் தலைநிமிர்ந்து நிற்கும் நவீன பொதுச் சந்தையின் அழகையும் அமைப்பையும் கண்டு புளகாங்கிதமடையாத எந்தவொரு சம்மாந்துறை மகனும் இருக்க முடியாது. கடந்த 40 வருடங்களாக எவராலும் சாதிக்கமுடியாத ஒரு சாதனையை இன்று எம்மண்ணில் பிறந்த எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் என்ற இளைஞன் தன்னந்தனியாக நின்று சாதித்திருக்கின்றார் என்றால் இவ்வூர் மக்கள் இவருக்கு என்ன கைமாறு செய்யப்போகின்றார்கள். சம்மாந்துறைத் தாயை அழகாக அலங்கரிக்க வேண்டுமென்பதில் தணியாத தாகம் கொண்டு செயற்பட்டு வரும் கௌரவ பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள் பொதுச் சந்தை விவகாரத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். என்ன விலைகொடுத்தாலும் நவீன பொதுச் சந்தை கட்டியே தீருவதென உறுதிபூண்டார். இதன் காரணமாக பொதுச் சந்தை நிலத்தில் குடியிருந்தவர்களிடம் இதமாகவும், இதயபூர்வமாகவும், அன்பாகவும், ஆறுதலாகவும் பேச்சுவார்த்தை நடாத்தினார். இப்பேச்சு வார்த்தை பூரண வெற்றியளித்ததன் பலனாக 2003 ஜூலை 08 ஆம் திகதி வரலாற்று சிறப்புமிக்க ''சம்மாந்துறை பொதுச் சந்தை கட்டிடம் அமைப்பதனால் காணி இழப்பவர்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை'' என்றொரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் கௌரவ பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் சாணக்கியத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இந்த ஒப்பந்தத்தில் முதலாம் தரத்தவராக பின்வருவோர் கைச்சாத்திட்டனர்.

1. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில்
2. திரு எல்.எஸ்.சீ. சிறிவர்தன - அம்பாறை மாவட்ட செயலாளர்
3. ஜனாப் எம்.எம். நஸீர் - பிரதேச செயலாளர், சம்மாந்துறை
4. ஜனாப் ஏ.எம்.எம். சுபைர்-பிரதேச சபை செயலாளர் - சம்மாந்துறை

இரண்டாவது தரப்பினராக காணியைத் தற்போது ஆட்சிசெய்து உரிமையில் வைத்திருப்பவர்கள் என இனங்காணப்பட்ட 14 பேர் அடங்குவர்.

மேற்படி ஒப்பந்தத்தில் ஆரம்ப வாசகம் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. ''அம்பாரை மாவட்ட சம்மாந்துறைப் பிரிவில் உள்ள எல்லைக்குட் பட்ட பொதுச் சந்தைக் கட்டிடத்தை விஸ்தரிப்பதற்குத் தேவையான மேலதிக காணிகள் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் சந்தைக்கு அருகாமையில் நீண்டகாலமாக உரிமையிலும் உடமையிலும் வைத்திருந்து ஆட்சிபுரிந்து வந்த காணிச் சொந்தக்காரர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட பிரச்சினைக்கு சமூகநலன் கருதி ஒரு சுமுகமான தீர்வுகாணும் பொருட்டு 2004.04.14 இல் அம்பாரை கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு எல்.எஸ்.சீ. சிறிவர்தன அவர்களது தலைமையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் ஏ.எம்.எம். சுபைர் அவர்களுடைய பிரசன்னத்தில் மேற்படி தேவைக்கு காணி இழப்பவர்களாக கருதப்படும் கீழ் பெயர் குறிப்பிடப்படும் 14 பேர்களிக்கிடையே 2003.05.30 இல் சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாகவும் எடுக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானங்களுக்கு அமைவாக உடன்படிக்கையொன்று செய்வதென உடன்பாடு காணப்பட்டது."

மேலே குறிப்பிடப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக காணிச் சொந்தக்காரர்கள் பின்வரும் நன்மைகளைப்பெற வழிவகுக்கப்பட்டது.

1. இனங்காணப்பட்ட 14 பேருக்கும் சம்மாந்துறை செந்நெல் கிராமத்தில் அமைந்துள்ளதும், முன்னர் கடதாசிக்கு ஆலைக்கு சொந்தமாக இருந்த காணியில் தலா 20 பேச்சஸ் வீதம் வழங்குதல்.

2. அத்துடன் இச்சந்தை வேலை முற்றுப்பெற்றதும் மேற்படி 14 பேருக்கும் கடையறை ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்கும் வழங்குதல். அத்துடன் மதிப்பீட்டு வாடகைத் தொகையில் இருந்து 75 வீதம் மாத்திரம் மேற்படி உரிமையாளர்களிடம் இருந்து பிரதேச சபை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சுமார் 40 ஆண்டுகாலமாக சம்மாந்துறையின் அரசியல்வாதிகளினாலும், பிரமுகர்களினாலும் சாதிக்க முடியாமல்போன கைங்கரியத்தினை முடிவுக்கு கொண்டுவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் சந்தை நிலத்திலிருந்து தாமாகவே வெளியேறலாயினர். இதனையடுத்து தனியாருக்கு சொந்தமாக இருந்த இடத்திலிருந்த கடைகளும் வீடுகளும் அங்கிருந்து அகற்றப்பட்டதோடு நவீன சந்தையை கட்டுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. இதன் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துவைப்பதற்கு அப்போதைய அமைச்சரவையின் உறுப்பினர்களான றவூப் ஹக்கீம், மிலிந்த மொறொகொட, எம்.எம். ம.ஃறூப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சருமான கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களின் அயராத உழைப்பினாலும், தீர்க்கதரிசனமான நடவடிக்கையினாலும் இன்று இப்பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. அவ்வேகத்தின் அசமந்தம் காரணமாக பலரது எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது '100 நாள்' என்ற காலெக்கெடுவில் பல கோடி ரூபா செலவில் நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி பூரணத்துவம் பெற்று இன்று திறப்பு விழாக்காணும் பேறுபெற்றுள்ளது.வட - கிழக்கு மாகாணத்தில் இதுவரையில் இதனைப் போன்றதொரு சந்தைத் தொகுதி வேறு எங்குமே கட்டப்படவில்லை. சகல வசதிகளையும் கொண்ட இந்த நவீன பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதி ஹிஜ்றா சந்தி யின் அழகுக்கு மேலும் அழகூட்டிக் கொண்டிருக்கின்றது.

இதனோடிணைந்துள்ள 'ஹிஜ்றா ஜும்ஆ' பள்ளிவாசலும் பிரதியமைச்சர் அவர்களின் முயற்சியினால் மெருகூட்டப்பட்டு அழகிய மின் அலங்காரங்களுடன், இஸ்லாமிய கலையம்சத்துடனும் பொதுப் பொலிவுடன் அழகாகக் காட்சியளிக்கின்றது. இதற்கு இணையாக நவீன பொதுச் சந்தையும், இஸ்லாமிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும்வகையில் கலையம்சத்துடன் வடிவமைக்கப்பட்டு காட்சியளிக்கின்றது. ஹிஜ்றா நவீன பொதுச் சந்தையின் சிறப்பம்சங்களில் ஒன்றாக மேல்மாடியில் அம்பாரை - மல்கன்பிட்டி வீதிகள் மூலையில் அழகான திறந்தவெளி மேடையொன்றும் அமைக்கப்பட்டுள்ளமையாகும். இந்த மேடையை பிரதேச சபையின் அனுமதியுடன் எவரும் பொதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டங்களுக்குப் பயன்படுத்தலாம். இது இலங்கையில் வேறு எங்குமே காணமுடியாத ஒரு புது அம்சமாகும். இவை அத்தனையையும் பார்க்கின்ற மக்கள் தலைவர் அஷ்ரஃப் அவர்களின் கனவுகளை அவரது சிஷ்யன் அன்வர் இஸ்மாயில் நிறைவேற்றுவதாகவே கூறுகின்றனர். அஷ்ரஃபின் அழகியல் உணர்ச்சியை இவரிடம் காணமுடிகிறது.ஒரு நாள் இரவு விடிவதற்குள் பொதுச் சந்தையின் அழகிய பூந்தோட்டம் அமைக்கப்பட்டு சம்மாந்துறையின் ஹிஜ்றாச்சாலைக்குள் புகுவது புதுப் பிரமையைத் தருகிறது.

சம்மாந்துறை ஹிஜ்றா சந்தைக் கட்டிடத்திற்கான அடிக்கல் கௌரவ பிரதம மந்திரி தஹநாயக்க அவர்களினால் மேற்கொள்ளப்பட்டு அது எமது காலத்தின் இளைய தலைவர் நமது மண்ணின் மைந்தன் நாம் எல்லோரும் உரிமைகொண்டாடும் இளைஞன் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களால் பூர்த்திசெய்யப்பட்டது ஒரு பெரும் வரலாறே. பலரும் தொட்டுத் தொட்டு இறுதியில் அன்வர் இஸ்மாயில் இக்கட்டிடத்தை பூர்த்திசெய்தார் என்பது இதனில் உள்ள முக்கியத்துவமல்ல. பலராலும் தொடக்கப்பட்டாலும் சந்தைக் கட்டிடத்தின் முக்கிய பகுதியில் உள்ள மக்களை குடியெழுப்பி அதனை சாதிக்க முடியாமல்போன ஆளுமையுள்ள தலைமைத்துவங்களையெல்லாம் மீறி நாம் பார்க்க வளர்ந்து நமக்குத் தலைமை தாங்கும் இளைஞன் தனது சாணக்கியத்தினால் அப்பிரதேச மக்களோடு பேசி அவர்களோடு உடன்பாடு கண்டு 100 நாட்களுக்குள் சந்தைக் கட்டிடத்தை முழுமையாகப் பூர்த்திசெய்து தமது கலை கலாசார நுட்பங்களுடன் அழகுபடுத்தி பூந்தோட்டமாக்கி பூர்த்திசெய்திருப்பதுதான் இதனில் உள்ள ரகசியமும் வெற்றியுமாகும்.

இதனாலே இச்சந்தைக் கட்டிடத் தொகுதி மாத்திரமன்றி சம்மாந்துறைப் பிரதேச அபிவிருத்தியில் என்றுமில்லாதவாறு புரட்சிகரமான வேகத்தில் குறுகிய காலத்தில் தன்னை அர்ப்பணித்து சேவைபுரிந்து வரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களை சம்மாந்துறைப் பொது மக்கள் நன்றியுடன் வாழ்த்துகிறார்கள்.மேலும் அன்றுமுதல் இன்றுவரை பொதுச் சந்தை அமைக்கும் விடயத்தில் முயற்சிசெய்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள், சமாதானத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய காணி உரிமையா ளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிவிருத்திப் பணியில் மற்றுமொரு மைற்கல் -**
**சம்மாந்துறையில் நவீன பஸ் தரிப்பு நிலையம்.**

மனிதனின் நாகரிக வளர்ச்சிப் படிகளுடன் சமாந்தரமாக நோக்க வேண்டிய ஒரு துறை போக்குவரத்து துறையாகும். நாகரிகம் வளர வளர மனிதனின் தேவைகளும் அதிகமாயிற்று. அத்தேவைகளை அடைந்துகொள்வதற்கு அவன் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு சென்று வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆரம்ப காலத்தில் கால்நடையாக தனது பயணங்களை மேற்கொண்ட மனிதன் படிப்படியாக முன்னேறி மிருகங்கள், வண்டில்கள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகள், புகையிரதங்கள், கப்பல்கள், விமானங்கள் என்று பல்வேறு போக்குவரத்து சாதனங்களை தனது பிரயாணத் தேவைகளுக்காக பயன்படுத்தத் தொடங்கினான். போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்தோடு இணைந்ததாக வீதி அபிவிருத்தியும் இடம்பெறத் தொடங்கியது.

இதற்கேற்ப தனக்கென தனியானதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ள சம்மாந்துறைக் கிராமம் பரந்துபட்ட அதன் நில வளம் காரணமாகும் மக்கள் பெருக்கம் காரணமாகவும் பல்வேறு துறைகளில் துரித வளர்ச்சியடையத் தொடங்கியது. விவசாயம், கால்நடை வளர்ப்பு, வர்த்தகம், கைத்தொழில், கல்வி, மீன்பிடி ஆகிய இன்னோரன்ன துறைகளில் பெரும் முன்னேற்றம் காணத் தொடங்கியது. இந்த வளர்ச்சியோடு ''சம்மாந்துறைப் பட்டினம்" என்ற அந்தஸ்தையும் பெற்றது. அப்போது மாவட்ட தலைநகரமாக புளியந்தீவு (மட்டக்களப்பு) விளங்கியது. எனவே மக்கள் தனது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் நாட்டின் தலைநகர் கொழும்புக்கும் ஏனைய பிரதான நகரங்களுக்கு செல்வதற்காகவும் அடிக்கடி மட்டக்களப்புக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கல்முனை - சம்மாந்துறை வீதி அமைக்கப்படுவதற்கு முன் கிட்டங்கித் துறையிலிருந்து மட்டக்களப்புக்கு தோணிகள், வள்ளங்கள் மூலமாகவே பயணம் மேற்கொண்டு வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்செல்லச் செல்ல இம்மக்களின் போக்குவரத்துத் தேவைகள் அதிகரிக்கத் தொடங்கின. அத்துடன் கல்லோயா அபிவிருத்தித் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டதால் அம்பாறை - கல்முனை வீதி அமைக்கப்பட்டது.இதன் காரணமாக சம்மாந்துறை மக்கள் தனது பிரயாணங்களை தரைமார்க்கமாக மேற்கொள்ளத் தொடங்கினர்.

இதற்காக மாட்டு வண்டிகள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனங்கள் என்பனவற்றையும் பயன்படுத்தத் தொடங்கினர். இதன் மூலம் பிரயாணங்களும் ஓரளவு இலகுபடுத்தப்பட்டன. சம்மாந்துறை மக்கள் கொழும்பு மற்றும் பிரதான நகரங்களுக்கு செல்வதற்கு மட்டக்களப்புக்குச் சென்று அங்கிருந்து பஸ் வண்டிகள் மூலமும், புகையிரதங்கள் மூலமும் பயணங்களை மேற்கொண்டு தமது பல்வேறு தேவைகளையும் நிறைவேற்றி வந்தனர்.

அம்பாரை, மகியங்கனை பாதைகள் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் தென் கிழக்கு மக்கள் இப்பாதையையே பிரதானமாக பயன்படுத்தத் தொடங்கினர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த பின்னர் கொழும்பு - மட்டக்களப்பு புகையிரத சேவை நீண்டகாலம் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த தால் பஸ் போக்குவரத்தையே பெரிதும் நம்பி இருந்ததுடன் இப்பாதை ஊடாகவே தமது பயணங்களை மேற்கொண்டனர். தனிப்பட்ட முதலாளிமாரின் ஏகபோக உரிமையில் இருந்த பஸ் போக்குவரத்துச் சேவையை காலஞ்சென்ற முன்னாள் பிரதமரும் இந்நாள் ஜனாதிபதி மாண்புமிகு சந்திரிகா பண்டார நாயக குமாரணதுங்க அவர்களின் தந்தையுமான எஸ்.டபிளியூ. பண்டாரநாயக்க அவர்கள் தனது ஆட்சிக்காலத்தின் போது (1956 - 1959) அரச உடமையாக்கி ''இலங்கை போக்குவரத்து சபை" யை ஸ்தாபித்தார். இதன் மூலம் மக்கள் பெரிதும் நன்மையடைந்தனர்.

இந்நடவடிக்கையின் மூலம் அரச போக்குவரத்து பஸ்களில் குறைந்த கட்டணத்துடன் மக்கள் தமது பிரயாணங்களை மேற்கொள்ள வழிபிறந்தது. அத்துடன் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் இச்சேவை விஸ்தரிக்கப்பட்டது. முக்கிய நகரங்களில் பஸ்சாலைகள் (டிப்போக்கள்)அமைக்கப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்ட பஸ்சாலைகள் எமது தென் கிழக்குப் பிரதேசத்தில் கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய இடங்களில் மட்டுமே நிறுவப்பட்டன.அதன் பின்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபை மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் கம்பனிகளாக மாற்றம்பெற்று தமது சேவையைத் தொடர்ந்தபோது கிழக்கு மாகாணத்திற்கான பஸ் சேவை ''நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி"என்ற பெயரில் நடத்தப்பட்டது.

இந்த மாற்றம் ஏற்பட்ட பின்புதான் முன்னாள் பிரதியமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் அவர்களின் முயற்சியினால் இக்கம்பனியின் டிப்போ ஒன்று சம்மாந்துறையில் திறந்துவைக்கப்பட்டது. இருந்தபோதும் சம்மாந்துறையில் வாழும் சுமார் 60,000 மக்களின் அதிகரித்த போக்குவரத்துத் தேவைகளை திருப்தியாக மேற்கொள்ள இங்குள்ள டிப்போக்குரிய வளங்கள் போதாமல் உள்ளதன் காரணமாக மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இதன் காரணமாக தமது முக்கிய தேவையாக உள்ள போக்குவரத்தை மேம்படுத்த வேண்டும் என கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள் கொண்ட எண்ணமும் நீண்டகாலக் கனவும் காரணமாக மக்களின் நீண்ட காலத் தேவை இன்று நிறைவேறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல வசதிகளும் கொண்ட நவீன பஸ் தரிப்பு நிலையமொன்று அமைப்ப தற்காக அடிக்கல் நடப்பட்டு நிர்மாணப்பணிகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றன. இது சம்மாந்துறையின் அபிவிருத்திப் பாதையில் மற்றுமொரு மைற்கல்லாகும்.இந்த நிலையத்தை அமைப்பதற்கு பொருத்த மான காணி ஒன்றைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிய பிரதியமைச்சர் அவர்கள் தனது சாணக்கியத்தின் மூலம் சம்மாந்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காணியைப் பெற்றுக் கொள்வதில் வெற்றியும் கண்டுள்ளார்.

இதுபோன்றதொரு பஸ் தரிப்பு நிலையம் தென் கிழக்கில் இதுவரை வேறெங்கும் அமைக்கப்பட்டிராத விதத்தில் நவீனமான விதத்தில் சகல வசதிகளுடன் அமையப்பெறவுள்ளது மிக முக்கிய அம்சமாகும். இவ்வாறான தொரு நிலையத்தை சம்மாந்துறையில் அமைக்க வேண்டுமென மறைந்த தலைவர் மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் உயிரோடு இருந்தபோது கனவு கண்டிருந்தார் என்பதை நாம் நன்கறிவோம். அவர் கண்ட கனவை அவரது பாசறையில் அரசியல் அறிவூட்டி வளர்க்கப்பட்ட தனயன் இன்றைய பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள் நனவாக்கிவைப்பது நமக்கெல்லாம் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவிருக்கும் இந்த நவீன பஸ் தரிப்பு நிலையத்தின் மூலமாக சம்மாந்துறையுடன் மருதமுனை தொடக்கம் பொத்துவில் வரையுள்ள தென்கிழக்கு மக்கள் நிறைந்த பயனை அடையவுள்ளனர்.

**இந்நிலையத்தின் மூலம் கிடைக்கவிருக்கும் நன்மைகள்**

- கல்முனை, அம்பாறை, அக்கரைப்பற்று டிப்போக்களைச் சேர்ந்த பஸ்கள் வந்து தரித்து நின்று பிரயாணிகளை ஏற்றிச் செல்லும்.
- இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்லக்கூடிய பஸ்கள் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும். இதனால் தூர இடங்களுக்கான பஸ்களுக்காக கல்முனை, அம்பாறை ஆகிய இடங்களுக்கு அகால வேளையில் செல்லும் சிரமம் நீக்கப்படும்.
- வெளியிடங்களிலிருந்து இராத் தரிப்பதற்காக வரும் பஸ்களை நிறுத்தி வைப்பதற்கான இடவசதி உண்டு.
- சாரதி, நடத்துனர்கள் தங்குவதற்கான இடவசதி உண்டு.
- பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.
- சம்மாந்துறை,கல்முனை,மருதமுனை,சாய்ந்தமருது,காரைதீவு, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளச்சேனை, அக்கரைப்பற்று. திருக்கோவில், பொத்தவில் போன்ற ஊர்களில் பிரயாணிகளின் நீண்ட தூரப் பிரயாணம் தொடர்பான நீண்ட காலத் தேவை நிறைவேறுகிறது.
- பிரயாணிகளின் தங்குமிட வசதி, மலசலகூட வசதி உண்டு.
- அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான நவீன கடைத தொகுதி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் பிரதியமைச்சர் அவர்களின் அபிவிருத்திப் பணிகளின் தொடரின் பத்தோடு பதினொன்றாக இப்பணியும் வரலாற்றில் இடம்பெறும்.

இச்சேவையின் பயனை மக்கள் அனுபவிக்கும் வரப்பிரதாசத்தை ஏற்படுத்தித்தந்த மக்கள் சேவகன் பிரதியமைச்சர் கௌரவ எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு தென் கிழக்கு மக்கள் சார்பாக இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்தேவைக்காக பெறுமதிமிக்க காணியை வழங்கி உதவியமைக்காக சம்மாந்துறைபல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஜனாப் எம்.எல்.ஏ.அமீர் அவர்களுக்கும் இயக்குனர் சபை உறுப்பினர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஏ.எம். அப்துர் ரஹீம்,**
**பொறுப்பதிகாரி,**
**நியூ ஈஸ்டன் பஸ் கொம்பனி,**
**சம்மாந்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறையில் ஜனாதிபதி கலாசார மற்றும் விளையாட்டுத் துறைக்கான நிலையம்.

இலங்கை திருநாட்டில் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு வழிகளிலும், மூவின மக்களும், ஒற்றுமையாவும், நட்புறவுடனும், இணைந்து செயற்பெற்றுக் கொண்டிருக்கின்ற மாவட்டமாக அம்பாரை மாவட்டம் திகழ்கின்றது. இம் மாவட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம், மக்கள் ஒன்றுசேர்ந்து வாழ்கின்றனர்.

அம்பாரை மாவட்டத்தின் பிரதேசங்களான பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, நிந்தவூர்,காரைதீவு,மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, அண்ணமலை, நாவின்தன்வெளி, வீரத்திடல், இறக்கமாம், வரிப்பத்தான்சேனை, சென்றல்கேம், வீரமுனை, சம்மாந்துறை, மல்வத்தை, மாவடிப்பள்ளி, மல்லிகைத்தீவு, அம்பாறை போன்ற பிரதேசங்களில் வாழ்கின்ற எதிர்கால இளைஞர்களின் விளையாட்டுத்துறையை விருத்திசெய்து அதன் அடைவுகளை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற தூரநோக்கோடு எமது மண்ணின் மைந்தன் இளைய தலைமுறையினரின் நம்பிக்கை நட்சத்திரம் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் ஜனாதிபதி கலாசார மற்றும் விளையாட்டுத்துறைக்கான நிலையங்களை (ஜனாதிபதி சில்பகலா சாலிகா) நிர்மாணிப்பதற்கு ஜனாதிபதி அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்திற்கமைய சம்மாந்துறையில் குறிப்பிட்ட நிலையத்தினை அமைப்பதற்கான அடிக்கல் இன்று நடப்படுகிறது.

இலங்கை திருநாட்டின் அதிமேகு ஜானதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்கள் நமது இளைய தலைவர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் வேண்டுகோளை மிகுந்த சிரத்தையுடன் ஏற்றுக்கொண்டு நமது பிரதேச இளைஞர், யுவதிகளின் கலை, கலாசார, விளையாட்டுத்துறை சார்ந்த திறமைகளை விருத்தி செய்வதற்குரிய வசதிகளை இப்பணியினை நிறைவேற்றுவதன் மூலம் ஏற்படுத்தவுள்ளார். இந்நிலையம் சம்மாந்துறையில் உள்ள வைக்கோல் கொள்வனவு நிலையக் காணியில் சுமார் பத்து ஏக்கர் நிலப்பரப்பில் 33 (முப்பத்தி மூன்று) மில்லியன் ரூபா செலவில் அமையுறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கரையோர பிரதேசங்களில் குறிப்பாக மருதமுனை, கல்முனை, நிந்தவூர், அட்டாளச்சேனை, அக்கரைப்பற்று, போன்ற பிரதேசங்களின் இளைஞர்கள் ஏதோ ஒரு வகையில் விளையாடடுத்துறையில் பிரகாசித்துக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். ஆனால் சம்மாந்துறைப் பிரதேசமும் அதனை அன்மித்த பகுதிகளும் விளையாட்டுத்துறை விருத்தியில் பின்னடைந்து காணப்படுவதால் அவர்களையும் மேற்கூறப்பட்ட பிரதேச இளைஞர்களின் ஒத்தழைப்புடன் முன்னேற்றவும், விருத்திசெய்யவும் இம்மைதான வசதி அமையப் பெறலாம் என்ற ஆர்வத்துடனும் இதனை சம்மாந்துறையில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

என்றாலும் இம்மைதானம் கரையோரப் பிரதேசங்களான கல்முனை, மருதமுனை, அட்டாளச்சேனை, அக்கரைப்பற்று, போன்ற பிரதேசங்களின் ஏதாவது ஒரு இடத்தில் அமையப்பெறவேண்டும் என பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்கள் எடுத்த முயற்சிக்கு அப்பிரதேசங்களில் அதற்கேற்ற தரைத்தோற்றம் அம்சம் சிறப்பாக அமையவில்லை. அத்தோடு இப்பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் வசிப்பிடத்திற்கான வீடுகளை அமைக்கும் திட்டத் திற்குக் பாதுகாப்பான காணியைப் பெறுவதுகூட கஷ்டமாக உள்ள இச்சந் தர்ப்பத்தில் விளையாட்டரங்கு அமைக்கத் தேவையான காணியைப் பெறுவது மிகவும் கஷ்டமாக உள்ள இந்த சூழ்நிலையிலேயே பலரது ஆலோசனைக ளுக்கு அமைவாக இந்நிலையத்தினை சம்மாந்துறையில் நிர்மாணிக்க பிரதி அமைச்சர் திட்டமிட்டார்.

சம்மாந்துறையில் இதற்காண காணியானது சகல வசதிகளும் அடங்கிரு க்க வேண்டிய ஒரு இடத்தில் அமையப் பெறவேண்டும் என்பதற்காக இப்பிரதேசத்தை 32 வருடங்களுக்கு மேல் பாராளுமன்றப் பிரநிதியாகவும் அமைச்சராகவும் இருந்த M.A.அப்துல் மஜீட் அவர்களினாலும் அதற்குப்பின் பாராளுமன்ற உறுப்பினராகவும், பிரதி அமைச்சராவும் இருந்த மர்ஹூம் U.L.M. முகைதீன் அவர்களாலும் எவ்வளவோ முயற்சித்தும் பெறமுடியாத கைத்தொழில் அமைச்சின் கீழ் வைக்கோல் கொள்வனவு நிலையத்திற்கு சொந்தமாக இருந்த இக்காணியில் இம் மைதானம் அமையப்பெற வேண்டும் எனற வைராக்கியத்துடன் அதனைப் பெற கைத்தொழில் அமைச்சருடன் வாதாடி அவர்களின் அனுமதியைப் பெற்று அதன் பின்னர் (PERC) எனும் பொருளாதார நிர்ணய சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரவைக்கு பத்திரம் சமர்பித்து அதன் அங்கீகாரம் பெறப்பட்டு கிழக்கு அபிவிருத்தி அமைச்சினூடாக வர்தமானி அறிவித்தலின் மூலம் இக் காணி 29 ஏக்கரும் அரசிடமிருந்து மீளப் பெற்று சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன அதிலிருந்து 10ஏக்கர் நிலத்தினை இம்மைதானத்திற்கு குறுகிய காலத்தில் பெற்றமையானது எம் இளம் சிங்கமான கௌரவ அன்வர் இஸ்மாயில் பிரதி அமைச்சர் அவர்களின் சாதனை என்பதை நாம் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்தமாகும்.

தற்போது மக்கள் கூடுதலாக இடம்பெயர்ந்து சென்று கொண்டிருக்கிற பகுதியாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர பிரதேசங்கான மருதமுனை, சாய்ந்தமருது, நிந்தவூர் போன்ற பிரதேச மக்கள் இம்மைதானம் அமைக்கப்படும் பகுதியில் கூடுதலான் காணிகளைப் பெற்று குடியிருக்கின்ற தாலும், இவற்றிக்கு அண்மையில் சம்மாந்துறை, உயர்தொழில் நுட்பக்கல்லூ ரியும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானபீடமும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாய ஆராய்ச்சி நிலையமும்,நீர் சுத்திகரிப்பு நிலையமும் காணப்படுவதுடன் இயற்கை சூழலான மலையும் மலை சார்ந்த பிர தேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேசமும், நீர் நிலைகளும் உள்ள இடமாக காணப்படுகின்ற வைக்கோல் கொள்வனவு நிலைய பரந்த காணியில் வீதியோரத்தைக் கொண்ட ஐந்து ஏக்கர் நிலத்தினை எம் பிரதி அமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களினால் தெரிவு செய்யப்பட்டமை வரவேற்கப்பட வேண்யடிதாகும். மேலும் உண்மையில் இவ்விடம் இப்பிரதேசத்தின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுகூடுவதற்கு மிகப்பொருத்தமான இடமாகும். இந்த இடத்தை தெரிவுசெய்த வகையிலும் நாம் பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இடத்தில் அமைக்கப்படவுள்ள விளையாட் டரங்குகளில் உடற்பயிற்சி பகுதி, நீச்சல் தடாகம், கிழக்குமாகணத்தில் எங்குமே காணப்படாத 400மீற்றர் சுவட்டு மைதானம் 750க்கு மேற்பட்டோர் அமர்ந்திருக்ககூடிய பார்வையாளர் அரங்கு, கேட்போர் கூடம், சகல வசதிக ளும் கொண்ட கடைத் தொகுதி, இரவு நேரப் போட்டிக்கான மின்னொளி வசதி, கால்பந்து, கிரிக்கட், டென்னிஸ், வலைப்பந்து, எல்லே, கபடி, மேசைப் பந்து, கரப்பந்து, மெய்வல்லுனர், விளையாட்டிக்கான மைதானங்கள், மற்றும் கலை, கலாசார பொழுதுபோக்கு நிலையம், போட்டியாளர்களினதும் நடுவர்க ளினதும் ஓய்வு அறை போன்றவை பிரதான மையங்களாக அமைக்கப்பட்டு ள்ளன.

இவை மாத்திமன்றி இம்மைதானமானது சம்மாந்துறை மக்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல என்றும் தென் கிழக்கு கரையோர பிரதேசத்தில் அனைத்து மக்களுக்கும் உரியது என்பதும் எம் பிரதி அமைச்சரின் உள் மனதின் ஆழமான வெளிப்பாடாகும். மேலும் தென்கிழக்கு கரையோர பிரதேசத்தில் வாழ்கின்ற விளையாட்டுத்துறையில் ஆர்வமும் ஊக்கமும் உள்ள வீரர்களுக்கு இம் மைதானத்தினை சிறந்த முறையில் தங்கள் அடைவுகளை வளர்ப்பதற்காக நிர்மாணப்பணி ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து 100 நாட்களுக்குள் இவ்வரங்கு இக் கரையோர பிரதேச விளையாட்டு வீர வீராங்கனைகளிடம் ஒப்படைக்கப்படும் என்பதும் எம் பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் சாதனைகளின் மைக்கல்லாகும் இதன் மூலம் எம் பிரதி அமைச்சர் அவர்கள் ஏனைய அபிவிருத்திகள் போன்று விளையாட்டுத்துறை அபிவிருத்தியிலும் தூரநோக்கோடு செய்பட்டுக் கொண்டி ருப்பதை துலம்பரமாக எடுத்துக்காட்டுகின்ற ஒரு அம்சமாகவும் இது காணப்படுகிறது.

மேலும் இவை கரையோரப் பிரதேசமான சம்மாந்துறையில் அமைவ தற்கு பல காரணிகள் சாதகமாக அமையப்பெற்றுள்ளது. அதாவது இம்மை தானத்திற்கு தேவையான உயர் மின்சார இணைப்பை பெறும் வசதி, மை தானத்திற்கு தேவையான பாதுகாப்பு, வாகனத்தரிப்பிட வசதிகள், அணைத்து பிரதேச மக்களும் இலகுவாக பிரயாணம் செய்யக்கூடிய பிரதான பாதை அமைப்பு, வைத்திய வசதி,தொழில்நுட்ப உதவியாளர்வசதி, கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும்வசதி, மைதானப் பாரமரிப்புக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதற்கு அண்மையில் ஓடுகின்ற நீர் வாய்க்கால் அமைப்பும், வருகின்ற போட்டியாளருக்கும்,பார்வையாளருக்கும் தேவையான சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்ளும்வசதி,மழைக்காலங்களில் மைதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தில் ஏற்படுகின்ற நீர்ப்பெருக்கை இலகுவாக வழிந்தோடச் செய்யக்கூடிய தரைதோற்ற அமைப்பு, போன்றவைவைகளை கொண்டதாக இப்பிரதேசம் காணப்படுவதால் அம்பாரை மாவட்டத்தில் குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் உள்ள சம்மாந்துறையில் இவை அமையப் பெறுவது சாலப் பொருத்தம் என இக் கரையோரப் பிரதேசங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு அதிகாரி, மவாட்ட சம்மேள தலைவர்கள், உடற்கல்வி விரிவுரையாளர்கள், வியைாட்டு அதிகாரிகள், உடல் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், கழகங்களின் தலைவர்கள், விளையாட்டுத்துறை பொறியளார்கள். வைத்தியர்கள், உடற்கல்வி ஆசியர்கள், விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் போன்றவர்களின் ஆலோசனைப்படி இது சம்மாந்துறைப் பிரதேசத்தில் அமைவதுதான் சிறந்தது என்ற கருத்து இக் கரையோர பிரதேசமக்களின் மேன்மையான மனப்பாங்கை வெளிக்காட்டுகிறது.

விளையாட்டு மட்டுமன்றி நவீன கடைத்தொகுதி, கலை கலாசார மேம்பாட்டுப்பயன் முதலானவை இந்நிலையத்தில் உள்ளது. எனவே ஜனாதிபதி கலாசார விளையாட்டு நிலையம் இப்பிரதேச மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். இவ்வத்தனைக்கும் நாம் பிரதியமைச்சர் அவர்களுக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக குமாரணதுங்க அவர்களுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். கடந்தகால அரசியல் தலைமைகள் சகல நிலையங்களையும் அம்பாரைக்கே கொண்டுசெல்ல ஜனாதிபதி அவர்கள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற சம்மாந்துறையில் இந்நிலையத்தை அமைக்க எடுத்த முடிவு பெருமைக்குரியதாகும். இம்முடிவானது ஜனாதிபதி அவர்களுக்கு நமது பிரதியமைச்சர் அவர்களோடு இருக்கின்ற தனிப்பட்ட அன்பையும் முஸ்லிம் சமூகத்தின் மீதான அவரது ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகின்றது. எனவேதான் நாம் என்றென்றும் ஜனாதிபதிக்கு கடமைப்பட்டவர்களாகின்றோம்.

**சீ.எம். தௌபீக்**
உடற்கல்வி விரிவுரையாளர்
தர்கா நகர் தேசிய கல்வியியல் கல்லூரி,
தர்காநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறையின் விவசாய, நீர்ப்பாசனப் புரட்சி

கடந்த மூன்று ஆண்டுகளில் சம்மாந்துறையின் பல்வேறு விதமான அபிவிருத்தித் திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், பொதுவசதிகள், விளையாட்டு, விவசாயம், கலாசாரம், வியாபாரத்துறை இவ்வாறு பல்வேறு விதமான அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன. கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதிய மைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அவர்களின் காலம் பொற்காலமே என்று வியக்கத்தக்க அளவிலான அபிவிருத்திப் பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**மோறாவில் அணைக்கட்டு:**

120 அடி நீளமான, 16 கதவுகளைக்கொண்ட மோறாவில் அணைக்கட்டு நீண்ட காலம் பராமரிக்கப்படாமலும், அபிவிருத்தி செய்யப்படாமலும், 1998 இல் உடைந்து போன இவ்வணைக்கட்டினை பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் அயராத முயற்சியின் பயனாக 6.6 மில்லியன் ரூபா செலவில் ஒரு வருடகாலத்துக்குள் இவ்வணைக்கட்டினை புனர்நிர்மா ணம் செய்ததன் மூலம் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் வழங்கக்கூடியதாகவுள்ளது. இப்புனர் நிர்மாணப்பணி அன்வர் இஸ்மாயில் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் தொடக்கிவைக் கப்பட்டு அவர் பிரதியமைச்சராக இருக்கும் இக்காலத்தில் விவசாய கால்நடை கள் நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சர் கௌரவ அனுர குமார திசாநாயக்க அவர்களினால் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**வீரையடி அணைக்கட்டு:**

கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கை புனர்நிர்மாணத்தில் கல்லோயாத் திட்டம் பெரும் பங்கு வகிக்கின்றது. அதுபோன்று இப்பிராந்திய மக்களின் ஜீவநாடியாக அமைந்த விவசாயத்துறையின் புனர்நிர்மாணத்துக்காக வீரையடி அணைக்கட்டு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இவ்வணைக்கட்டு பட்டியடிப்பிட்டியின் சுமார் 10 ஆயிரம் ஏக்கர்களும், நிந்தவூர்ப் பிரதேச விவசாயிகளின் 6ஆயிரம் ஏக்கர்களும் உள்ளடங்கிய நெற்செய்கை காணிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளை வாழவைக்கும் அணைக்கட்டாகும். இவ்வணைக்கட்டு கல்லோயா கங்கைக்கு குறுக்காகவே அமையவுள்ளது. இவ்வணைக்கட்டு தொடர்பாக பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள் காலத்திலும் இப்பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்தும் திருத்தப்படாது இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வீரையடி அணைக்கட்டின் புனர்நிர்மாணப் பணிகள்:

கடந்த இரண்டு வருடங்களில் ஏற்பட்ட வெள்ளங்களினால் மிகமோசமாக பாதிக்கப்பட்ட இவ்வணைக்கட்டினை உடனடியாக திருத்த வேண்டி ஏற்பட்டது. இதனால் சுமார் 20 ஆயிரம் குடும்ப விவசாயிகள் பயிர் செய்ய முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனை உணர்ந்த அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தற்காலிகமாவது இவ்வணைக்கட்டினை திருத்த முயற்சித்தார். அபிவிருத்திக்குப் பணம் பெறமுடியாத ஐக்கிய தேசிய முன்னணி அரசிலேயே மிகவும் கஷ்டப்பட்டு 2 மில்லியன் ரூபாக்களைப் பெற்று தற்காலிகமாவது வீரையடி அணைக்கட்டை புனர்நிர்மாணம் செய்தார்.

### வீரையடி அணைக்கட்டு
### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் நிரந்தர கட்டுமாணம்.

2004 ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அராசாங்கம், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களின் கிராமியப் பொருளாதார மேம்பாட்டுத்திட்ட அடிப்படையில் வீரையடி அணைக்கட்டை புனர்நிர்மாணம் செய்யும் பணியை பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பிரேரித்தார். இது தொடர்பாக விவசாய, கால்நடைகள், நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சர் கௌரவ. அநுர குமார திஸாநாயக்க அவர்களை அழைத்து மோறாவில் அணைக்கட்டு திறக்கப்பட்ட அதேநேரம் பழுதடைந்து போன வீரையடி அணைக்கட்டை நேரடியாக அமைச்சருக்கு காண்பிக்கப்பட்டது. மேலும் சம்மாந்துறை விவசாயிகளின் பிரச்சினை கொழும்பில் விவசாய, கால்நடைகள், நீர்ப்பாசன மற்றும் காணி அமைச்சில் உரையாடப்பட்டது.இதன் அடிப்படையில் 80 அடிநீளமாக இருந்த வீரையடி அணைக்கட்டு எதிர்கால நலன்கருதி 150 அடிநீளமாக 7 கோடி ரூபா செலவில் நிர்மாணப்பணி பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் தொடக்கி வைக்கப்படவுள்ளது.சம்மாந துறை, நிந்தவூர் பிரதேச விவசாயிகளின் வாழ்வில் புதிய திருப்பத்தைக் கொண்டுவரும் இவ்வீரையடி அணைக்கட்டின் புனர்நிர்மாணப்பணியை இப்பிரதேச வாழ் மக்கள் என்றும் நினைவு கூறுவர்.

### வீரையடி அணைக்கட்டு அவசரத் திருத்தப்பணி

அண்மையில் ஏற்பட்ட சுனாமிக்கு பின்னான வெள்ளத்தின் போது இவ்வணைக்கட்டு முற்றாக அழிந்தது. இக்கட்டத்தில் நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதிப்பற்றாக்குறை இருந்தது. அவர்களுடைய இயந்திரங்களும் பழுதடைந்திருந்தன. அச்சந்தர்ப்பத்தில் இடைப்போக வேளாண்மை (2005) செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனை உணர்ந்த பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தனது அமைச்சின் மூலம் 1.2 மில்லியன் ரூபாய்களை பெற்று இயந்திரங்களைப் வாடகைக்குப் பெற்று இப்புனர்நிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார். இதனால் இப்பிரதேச விவசாயிகள் இப்போக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது. நிரந்தரமாக இவ்வணைக்கட்டினை மீள நிர்மாணிப்பதன் மூலம் இப்பிரதேச விவசாயிகள் என்றும் நீர்க்கஷ்டமின்றி நிம்மதியுடன் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

### கந்தன்வெளி அணைக்கட்டு:

இதேநேரம் சேதமடைந்திருக்கும் கந்தன்வெளி அணைக்கட்டினை மீளகட்டி எழப்பவேண்டிய பணியும் இப்பிரதேச விவசாயிகளினால் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் தலையில் சுமத்தப்பட்டது. இந்தப் பிரச்சினையும் விவசாய, கால்நடைகள், நீர்பாசன மற்றும் காணி அமைச்சர் கௌரவ. அநுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு கௌரவ. பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் முன்வைக்கப்பட்டு அவ்வமைச்சின் 2006 ஆண்டின் வேலைத்திட்டத்தின் இவ்வணைக்கட்டு மீளக்கட்டி எழுப்பும் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பணிகள் நிறைவேற்றப்படும் போது சம்மாந்துறையில் விவசாய நீர்ப்பா சனப் பிரச்சினை பெருமளவு தீர்ந்துவிடும்.

### கல்லோயா ஆற்றின் குறுக்குப்பாலம்:

கல்லோயா ஆற்றின் சாவாற்றுக் கிளைக்கு குறுக்காக பாலம் ஒன்று இல்லாதலால் திராயோடை, கொச்சிக்காலாந்து, ஆணைவிழுந்தான் ஆஸ்பத்திரிச்சேனை, நடுப்பிட்டி, விக்ளாமடு ஆகிய கண்டங்களில் ஏறத்தாள 3000 ஏக்கர் விவசாயம் செய்கின்ற ஏழைவிவசாயிகள் தமது விளைபொருட்க ளைக் கொண்டுவருவதில் பல சிரமங்களை எதிர்நோக்கினர். சுதந்திரத்தின் பின்பு ஆட்சி செய்த ஆட்சியாளர்களிடமும் நமது பிரதிநிதிகளிடமும் கல்லோ யாவின் சாவாற்றுக் கிளைக்கு குறுக்காக பாலம் நிர்மாணிக்கும் வேண்டு கோள் விடுக்கப்பட்டது. இவ்வேண்டுகோள் எவராலும் நிறைவேற்றமுடியாமல் இருந்தது. வெள்ள காலங்களில் ஆற்றைக் கடக்க விவசாயிகள் முனைகின்ற போது பல உயிர்சேதங்கள் ஏற்பட்ட வரலாறும் உண்டு.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்க காலத்தில் இப்பாலத்தினை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் பாராளுமன்ற உறுப்பினராகயிருந்த அன்வர் இஸ்மாயில் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டபோதிலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்க தலைமைகளினால் இப்பாலம் புறக்கணிக்கப்பட்டு வட மாகாணத்தின் ஏ-9 வீதியில் நிர்மாணிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்ன ணியின் தலைமைகள் முயற்சி செய்தன் காரணமாக இப்பகுதி மக்கள் பெரும் ஏமாற்றத்தை எதிர் கொண்டனர். இம்மக்களின் குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக அதிமேதகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் வழிகாட்டலின் பெயரில் வட-கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்தின் கீழ் கௌரவ. பிரதியமைச்சர் அன்வர இஸ்மாயில் அவர்களின் தீவிர முயற்சியின் பயனாக 160 மில்லியன் ரூபா (16கோடி) ஒதுக்கீடு செய்யப்பட்டு இதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப் பட்டது. இது வரலாற்று முக்கியத்துவமிக்க பணியாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி தலைமைக்கும் பிரதியமைச்சருக்கும் ஏற்பட்ட முரணபாட்டுக்கு இப்பால நிர்மாணத்தில் அவ்வரசு காட்டிவந்த அசிரத்தையும் பிரதான காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணியின் காரணமாக இப்பிரதேச விவசாயப் பெருங்குடி மக்கள் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களை நன்றி உணர்வுடன் வாழ்த்துவதுடன் அவர்களினது அபிவிருத்தி பணியில் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதற்கு இப்பிரதேச மக்கள் திடசந்தர்ப்பம் பூண்டுள்ளனர். மேற்குறித்த வேலைத்திட்டம் சம்பந்தமாக பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களை சந்தித்து நன்றி தெரிவிக்கச் சென்ற விவசாயப் பிரதிநிதிகளிடம் பிரதியமைசர் அவர்கள் அதிமேதகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கு நன்றியும், விசுவாசமும் உடையவர்களாக இப்பிரதேச விவசாய மக்கள் திகழ வேண்டும் எனக் குறிப்பிட்டார். இப்பாலங்க ளின் விளைவாக ஆற்றுக்கு அப்பால் வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை சம்மாந்துறையுடன் இணைக்கின்ற ஓர் இணைப்புப் பாலமாகவும், பயங்கரவாத காலத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாகவும், மக்கள் மத்தியில் பரஸ்பரம், நல்லிணக்கம், புரிந்துணர்வு, எதிர்கால நம்பிக்கை, பொருளாதார மேம்பாடு என்பவற்றினை கட்டி எழுப்பும் ஒரு மைல்கல்லாகவும் அமையும். இப்பால நிர்மாணம் இன்றில்லா விடினும் எமது இளைய தலைமுறையினரால் எதிர்காலத்தில் நினைத்து பேசப்படும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

**புளக் ஜே பிரிவு வாய்க்கால்:**

இப்பிரிவிற்குரிய C வாய்க்கால் கடந்த 21 வருடகாலமாக விவசாயிகள் கோரிக்கை விடுத்தும் புனர்நிர்மாணம் செய்யப்படாமல் இருந்தது. இதனால் சுமார் எண்ணாயிரம் ஏக்கர் வயற்காணிகள் போதியளவான நீர்ப்பாசன வசதிகளைப் பெறமுடியாதிருந்தது. இப்பிரச்சினை கௌரவ பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களிடம் எத்திவைக்கப்பட்ட போது சுமார் 1.7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சடயன்த லாவ, சாளம்பக்கேணி, சம்புமடு முதலான 6 பிரதேச வயல்வெளிகள் உரிய நேரத்திற்கு போதியளவான நீர்ப்பாசன வசதிகளைப் பெற்று பயன் பெறக்கூடிய தாக உள்ளது.

**நெயினாகாட்டுப் பாம் வீதி:**

நெயினாகாட்டுக் கிராமம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இப்பாம் வீதி திருத்தப்படாமலே இருந்து வருகிறது. ஆனால் இப்பாதையின் ஊடாக நூற்றுக்கணக்கான விவசாயிகளும் மல்வத்தைக் கிராமத்திற்கு செல்கின்றோ ரும் செங்கல் உற்பத்தியாளர்களும் பயணம் செய்வது குறிப்பிடத்தக்கது. இவ்வீதியின் முக்கியத்துவத்தை உணர்ந்த கௌரவ பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் இரண்டு மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைத் தமை குறிப்பிடத்தக்கது.இவ்வாறு என்றுமில்லாதவாறு சம்மாந்துறையின் விவசாய நீர்ப்பாசன வரலாற்றில் பல கோடி ரூபாய்க்கள் செலவிடப்பட்டு இப்பிரதேச மக்கள் விவசாயத்தில் தன்னிறைவு காணக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கைங்கரியத்தை மேற்கொண்ட கிழக்கு உட்கட்ட மைப்பு அபிவிருத்தி பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசையும் மக்கள் என்றும் நினைவு கூர்வர்.

அல்-ஹாஜ் எம்.ரி.எம். சஹீட் (M.Sc),
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தொழில்நுட்பக் கல்லூரி,சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறையின் அபிவிருத்தி நகர்வுகள்

**மின்சார அபிவிருத்தி:**

சம்மாந்துறையின் பிரதான பகுதிகளுக்கு மின்சாரம் மிக நீண்டகாலமாக வழங்கப்பட்டிருந்தாலும் விடுபட்ட பல பகுதிகள் தொடர்ச்சியாக விடுபட்ட பகுதிகளாகவே இருக்கின்றன. இந்த சூழ்நிலையில்தான் குறிப்பிட்ட பகுதிகளைக் கவனத்திற்கொண்டு திட்டமிட்டு மின் அபிவிருத்தி வாரங்கள் மூலம் கௌரவ பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார். இந்தவகையில் 2003 ம் ஆண்டு மின்சார வசதியற்று இருந்த நெயினாகாட்டுப் பிரதேசமும், 40 வீட்டுத் திட்டமும் நமது வரலாற்றில் 8.7 மில்லியன் ரூபா செலவில் மின்சாரத்தைப் பெற்றது முக்கிய அம்சமாகும். இதுபோன்று மின்சாரம் அருகில் இருந்தும் அவற்றைப் பெறுவதிலே கூடிய பணத்தினை செலவிட வேண்டிய மக்களுக்கு இன்னும் மிக அருகிலே மின்சாரத்தைக் கொண்டு செல்கின்ற வசதியை 4.9 மில்லியன் ரூபா செலவிலே பிரதியமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். இந்தவகையில் சம்மாந்துறை பெண்கள் அரபுக் கல்லூரி வீதி 1.9 கி.மீ தூரம், செந்நெல் கிராம குழியடி வீதி, கல்லரிச்சல் பகுதியின் பல்வேறு வீதிகள், கைகாட்டி தென்னம்பிள்ளைக் கிராமம், மலையடி 3ம் வீதி, இறக் காமம் மையவாடி வீதி, வரிப்பத்தாஞ்சேனை குறுக்கு வீதி, மத்திய முகாம் மையவாடி வீதி போன்ற வீதிகள் முற்றாக மின்சார வசதிகள் வழங்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று 1.7 மில்லியன் ரூபா செலவிலே சமீட்புர குறுக்கு வீதி, உடையார் லேன், குச்சர் மையதீன் வீதி, வீசி வீதிக்கு முன் வீதி, மல் - 13, விச வைத்தியர் காட்டுப்பள்ளி குளியை யடி குறுக்கு வீதிகள், மையவாடி முறத்தியர், சம்புமடு, மடு வீதிகளுக்குமான மின்சார வசதிகளை வழங்குவ தற்கான வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. சம்மாந்து றையில் மின்சார வசதி வழங்கப்படாது இருந்த பிரதேசங்கள் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் காலத்தில் கவனத்திற் கொள்ளப்பட்டு 95 வீதமான பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் இனிவ ரும் காலத்தில் சம்மாந்துறையில் மின்சார விளக்கு எரியாத வீதிகளே இல்லை என்ற நிலமை உருவாகிவிடும்.

எல்.ரி. றசீட்
இலங்கை மின்சார சபை,
அம்பாரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீதி அபிவிருத்தி:**

சம்மாந்துறையின் சகலவிதமான அபிவிருத்திகளையும் சமகாலத்தில் முன்னெடுக்கும் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் பல்வேறு வீதிப் புனருத்தாரண அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியினை உருவாக்கியுள்ளார். இந்தவகையில் சம்மாந்துறையின் பிரதான வீதி நெல்லுப்பிடிச் சந்தியிலிருந்து ஹிஜ்றா பள்ளிவாசல் வரை 26 மில்லியன் ரூபா செலவில் வீதி விஸ்தரிப்பு பணிகள் நடைபெறவுள்ளது. இதற்கான நிதி பிரதமரின் பணிப்புரையின் பேரில் கிடைக்கப்பெற்றுள்ளது. இதேபோன்று சம்மாந்துறையின் பல உள் வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. இந்தவகையில் ஜ.்.பர் அரிசி ஆலையிலிருந்து கல்லரிச்சல் வரையிலான வீதி, மஸ்தார் லேன், உடங்கா 5 வது வீதி, மையவாடி உஸ்வா வீதி, செந்நெல் கிராமம் வடைலயர் வீதி, மலையடிக் கிராமம் கட்டிமேனி வீதி, அன்வர் இஸ்மாயில் புர வீதி, மஸ்ஜிதுல் அப்ரார் வீதி முதலானவை 7.9 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன. மேலும் அலிவன்னியார் வீதி, அல்முனீர் வீதி, சம்மாந்துறைப் பிரதேச சபையின் உபஅலுவலக உள்ளக வீதிகள், மஜீட்புர வீதி, மத்தியமுகாம் வீதிகளும் இந்தவகையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதேபோல சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மல்வத்தை பாடசாலை வீதி, மல்கம்பிட்டி வீதி முதலானவற்றுக்கான வடிகால் வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நாவிதென்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சில வீதிகளுக்கான மேம்பால வடிகால் வசதிகளும் இறக்காம பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளிவாசல் வீதியும், மஜீட்புர வீதிக்கான மேம்பாலமும் அமைக்கப்படவுள்ளன. மேலும் இறக்காமப் பிரதேசத்திலே வரிப்பத்தாஞ் சேனை உள்வீதிகளும் வாழைக்காலை வீதிகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. மேலும் அப்பிரதேசத்தின் மத்திய வீதி, இளைஞர் வீதி, எஸ்.பி வீதிக்கான வடிகால் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ்வனைத்துக்குமான நிதி ஏலவே ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே நாவிதென்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல வீதிகளை புனரமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறையின் பழைய மார்கட் வீதி, மத்திய வீதி, பிலாவடி வீதி, தைக்காப்பள்ளி வீதி, அறபா வித்தியாலய வீதி, ஷியா சந்தியிலிருந்து வீரமுனை வரையான வீதி, கோரக்கோயில்,வைக்கோல் கொள்வனவு நிலைய த்திலிருந்து கைகாட்டி சந்தியின் பிரதான பண்ட் வீதி வரை கல்லரிச்சல வீதி வேலைகள் முதலானவை ஒரு கோடியே இருபது இலட்ச்ச ரூபா செலவில் எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது விவசாயிகளுக்கு பயங்கரவாத, ஹர்த்தால் காலங்களில் பயணம் செய்வதற்கு பொருத்தமான வகையில் தூரநோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

ஏ.எம்.எம். சுபைர்
செயலாளர், பிரதேச சபை,
சம்மாந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவசதிகள், நகர, கலாசார அபிவிருத்தி:**

சம்மாந்துறையின் பொது வசதிகளையும் கலாசார வசதிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களுடைய நீண்டகாலக் கனவு நிறைவேறி வரும் காலமாக இக்காலத்தைக் கருதவேண்டும். இந்தவகையில் சம்மாந்துறையினுடைய ஹிஜ்றா சந்தை நிர்மாணம் குறிப்பிடத்தக்க ஒரு பணியாகும். அதற்கு முன்னால் அச்சந்தியின் முகப்புறத் தோற்றம் பூந்தோட்டத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதுபோல நெல்லுப்பிடிச் சந்தியில் மாலை நேர பொழுதுபோக்குச் சதுக்கம் 4.7 மில்லியன் ரூபா செலவிலே ஏற்படுத்தப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்த வேலைகள் நடைபெற்றுள்ளன. நெல்லுப்பிடிச் சந்தியிலும் வங்களாவடியிலும் பிரதான நுழைவாயில்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நெல்லுப்பிடிச் சந்தியின் நுழைவாயில் 5 மில்லியன் ரூபா செலவிலே 3 வழிப் பாதைகள் கொண்டதாக அமையவுள்ளது. இதற்கான ஒப்பந்த வேலைகள் மத்திய பொறியியல் சபை (C.E.C.B) யுடன் நிறைவேற்றப்பட்டு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. தேசிய நீர் வழங்கல் அதிகார சபையின் ஆதரவுடன் இறக்காமத்தில் கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதற்கு கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு 3 மில்லியன் ரூபாக்களை வழங்கியுள்ளது. மேலும் கல்லரிச்சல் பிரதேசத்திற்கான நூலகம் 1.5 மில்லியன் ரூபா செலவிலே அமைக்கப்பட்டு வருகின்றன.

சம்மாந்துறையின் கலாசார சீர்திருத்தத்திலே புராதன பிரதேசமான மல்கம்பிட்டி பள்ளிவாசல் புனருத்தாரண அபிவிருத்தி குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் மல்கம்பிட்டி பள்ளிவாசலுக்கான நுழைவாயில் வேலைகளை பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் முன்னாள் பொதுவசதிகள் அமைச்சர் மஹ்றூப் அவர்களுக்கும் உள்ள தனிப்பட்ட உறவின் காரணமாக அமைச்சர் அவர்கள் தனது சொந்த செலவிலே நிறைவேற்றிக்கொடுத்தார். மல்கம்பிட்டி பள்ளிவாசலுக்கு இலங்கை மின்சார சபையின் மூலம் குடியிருப்புக்கள் இன்மையால் மின்சாரம் வழங்க முடியாத சூழ்நிலை இருந்தது. இதனால் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் தீவிர முயற்சியினால் சூரிய சக்தியினாலான மின்சாரம் அப்பள்ளிவாசலுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும் மின்சார சபையின் மூலமாக நிரந்தர மின்சாரம் வழங்குவதற்கான முயற்சியிலே பிரதியமைச்சர் அவர்கள் தற்போதும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறையின் வரலாற்றிலே பள்ளிவாசல்களுக்கு நிதி ஒதுக்குகின்ற வழக்கத்தினை பரந்த அடிப்படையில் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் மேற்கொண்டு வருகின்றார். இந்தவகையில் ஹிஜ்றா ஜும்ஆப் பள்ளிவாசல் நுழைவாயிலும், அலங்கார வழியும் 3.5 மில்லியன் ரூபா செலவிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தைக்காப் பள்ளி கட்டிட நிர்மாணப் பணிக்காக 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரிக்கு 2.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உலமாக்களுக்கான தலைமைக் காரியாலயத்தை அமைப்பதற்காக 3.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. மேலும் மஸ்ஜிதுல் ஸலாமுக்கான 2 மில்லியன் ரூபா வேலைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன. மஸ்ஜிதுல் அப்ழல், மஸ்ஜிதுல் ஹுதா, மஸ்ஜிதுல் ஜமாலியா பள்ளிவாசலுக்குமான நிதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. சம்மாந்துறையின் பெரும்பாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசல்களுக்கு நிதி கிடைப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பள்ளிவாசல்களுக்கு நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளின் அடிப்படையில் புனித பிரதேச பிரகடணம் மேற்கொள்ளப்பட வுள்ளது. இத்திட்டத்தின் அடிப்படையில் சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல், சின்னப்பள்ளி வாசல், தாறுல் ஹசனாத் குர்ஆன் மனனக் கலாசாலை,தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கலாசாலை, கங்கத்தியப்பா பள்ளி முதலியன பெரிதும் பயன்பெறவுள்ளன.

எம்.சி. அன்சார்
மக்கள் பணிமனை,
சம்மாந்துறை.

**கல்வித் துறையில் அபிவிருத்தி நகர்வு**

அரசியலில் கடந்த 45 வருடங்களாக தொடர்ச்சியாக பாரளுமன்ற பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துள்ளது என்ற வகையில் சம்மாந்துறை வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.

1960 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை முன்னாள் அமைச்சர் ஜனாப் எம்.ஏ.அப்துல் மஜீட் அவர்களும் 1994 முதல் 2001 வரை முன்னாள் பிரதிஅமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம். மொஹிடீன் அவர்க ளும் 2001 முதல் இன்று வரை இந்நாள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி கௌரவ எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அவர்களும் சம்மாந்துறையை பிரதிநிதித்து வப்படுத்தியுள்ளார்கள்.சம்மாந்துறையின் கல்வி வரலாற்றை நோக்குகின்ற போது இவர்கள் அனைவரும் சம்மாந்துறையின் கல்வி வளர்ச்சிக்கு தமது பங்களிப்பை செய்து வந்துள்ளமை அறியக் கூடியதா யுள்ளது.

தற்போது சம்மாந்துறை மக்களைப் பாரளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்ப டுத்துகின்ற வயதில் இளையவரும் சட்த்தரணியும், கிழக்கு உட்கட்டமைப்பு பிரதி அமைச்சருமான கௌரவ எம்.ஐ.எம். அன்வர் இஸ்மாயில் அவர்கள் மக்கள் பிரநிதியாகத் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து இன்று வரை கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளைப் தனியாக நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்குறுகிய காலத்தினுள் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளை நோக்குகின்ற போது கடந்த ஐந்து தசாப்தங்களில் குறித்த காலப்பகுதியினுள் செய்யப்பட்ட அபிவிருத்தி பணிகளைவிட ஒப்பீட்டு ரீதியில் பன்மடங்கு அதிகமானது என்பது வெள்ளிடை மலை.

இக் காலப் பகுதியினுள் கல்வித்துறை அபிவிருத்திக்காக மாத்திரம் செலவிட்டது. 40மில்லியன் (4கோடி) ரூபாவுக்கும் அதிகமானதா கும். பல்வேறு நிதி மூலங்களில்யிருந்து இந்நிதியை பெற்று இன,மத,பிரதேச வேறுபாடுயின்றி சகல பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதில் தன்னை முழுமையாக அர்பணித்து சேவையாற்றியுள்ளமை நண்கு உணர முடிகிறது. கடந்த 10-15 வருடங்களுக்கும் மேலாக எவ்வித அபிவிருத்தியை காணாத பல பாடசாலைகள் இக்காலப் பகுதியினுள் பல்வேறு வழிகளில் அபிவிருத்தி அடைந்துள்ளன. பின் தங்கிய கிராமங்களில் தற்காலிக கொட்டில்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொனத் துயரங்களுக்கு மத்தியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த பாமர மக்களின் குழந்தைகள் இன்று நகர்ப்புறங்களில் உள்ள முன்னிலைப் பாடசாலைகளில் உள்ளது போன்ற மாடிக் கட்டிடங்களில் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழ்நிலைகளில் தமது கல்வியைத் தொடருகின்ற பாக்கியத்தைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு பாடசாலையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிரு த்திப் பணிகளை சற்று விரிவாக நோக்குவது பயனுள்ளதாயிருக்கும் என்று நம்புகிறோம்.

**தேசிய பாடசாலை மற்றும் நகர்ப்புறப் பாடசாலைகளின் அபிவிருத்தி.**

சம்மாந்துறைக்குப் பெருமை சேர்க்கின்ற அடையாளங்களின் ஒன்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் ஆகும். எமது ஊரின் கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கின்ற இப்பாடசாலை இங்குள்ள ஒரேயொரு தேசிய பாடசாலையாகும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவர் தொகை அதிகரிப்புக்கும் ஈடு கொடுக்ககூடிய வகையில் இங்குள்ள வளங்கள் இல்லாதிருந்தமை பெருங்குறையாகும், 50 வருடங்கள் கடந்து பொன் விழாக் கண்ட இப்பாடசாலையின் நிருவாககூடம், ஒன்று கூடல் மண்டபம், மற்றும் பௌதிக வளங்கள் என்ப ஒரு தேசிய பாடசாலையின் தரத்திற்கு அமைந்திருக்கவில்லை. கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக புதிய கட்டிடங்கள் அமைக்கப்படவில்லை.

இப்பாடசாலையின் பழைய மாணவர் என்று தன்னை அடையாளப்ப டுத்துவதில் எப்போதும் பெருமையும் மனநிறைவும் அடையும் பிரதி அமைச்சர் எம.ஐ.எம். அன்வர் இஸ்மாயில் அவர்கள் இப் பாடசாலையின் நிலையை உயர்த்துவது தனது தலையாய கடமை என்பதை உணர்ந்து பல அபிவிருத்திப் பணிகளை இங்கு முன்னெடுத்துச் சென்றார். இக்காலப் பகுதி இக்கல்லூரியின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட வேணடும். இங்கு அவரால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளாவன.

இரண்டு மாடிகளைக் கொண்ட நிர்வாக அலகு - 8 மில்லியன் ரூபா விவசாய விஞ்ஞான அலகு - 1.9 மில்லியன் ரூபா ஆராதனை மண்டபத் திற்கான பெருந் திருத்தம் - 1 மில்லியன் ரூபா கணனிக் கற்கை நிலைய மும் கணனிகளும் அலங்கார நுழைவாயில், பாடசாலை உள்ளக வீதிகள், சுத்தமான குடிநீர் வசதிகள் இவற்றுக்கு மேலதிகமாக மூன்று மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடம் ஒன்றிற்கான திட்டவரைவு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சம்மாந்துறை கல்வி வலயத்தில் இயங்குகின்ற ஒரேயொரு பெண்கள் கல்லூரி அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியாகும். இங்கு மாணவிகள் தங்கியிருந்து கற்பதற்கான விடுதியொன்றின் அவசியம் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்தபோதிலும் அது கைகூடவில்லை. ஆரம்பத்திலிரந்து கலவன் பாடசாலையாக இயங்கிவந்த இப்பாடசாலையை முஸ்லிம் மாணவிகள் தமது சமய, கலாச்சார விழுமியங்களுடன் கல்வி கற்பதற்கான தனிப் பெண்கள் கல்லூரியாக மாற்ற வேண்டும் என்ற தாகத்துடன் அப்போ தைய அரசியல் அதிகார சக்திகளின் எதிர்ப்புக்கு மத்தியில் போராடியவர்க ளில் முக்கிய பங்குவகித்த இன்றைய பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இங்கு விடுதியில்லாத பெருங்குறையை நீக்க முன்வந்தார். 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் விடுதிக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ்விடுதி அமைக்கப்பட்ட பின் கரையோர மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பல முஸ்லிம் மாணவிகள் மற்றும் வெளியிடங்களிலுள்ள மாணவிகள் பயனடைவர். அத்துடன் பூர்த்திசெய்யப்படாமல் இருந்த 3 மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் கட்ட வேலைகளுக்கு ரூ. 2 மில்லியன் நிதி ஒதுக்கி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சம்மாந்துறை ஊரின் மத்தியில் அமைந்துள்ள முக்கிய பாடசாலைகளில் ஒன்று முஸ்லிம் மகளிர் வித்தியாலயமாகும். இங்கு கல்வி கற்கும் மாணவர் செறிவிற்கேற்ப கட்டிட வசதிகள் இல்லை. மிஷனரி காலத்தில் கட்டப்பட்ட பயன்படுத்த முடியாத பழைய கட்டிடத்தில் மிகவும் நெருக்கடிக்கு மத்தியில் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். கடந்த 13 வருடங்களாக எந்தக் கட்டிடத்தையும் இப்பாடசாலை பெறவில்லை. பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் பெரு முயற்சியினால் 6.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

சம்மாந்துறை அல்முனீர் வித்தியாலயம் மற்றுமொரு பிரபல பாடசாலையாகும். வகுப்பறை பற்றாக்குறை காரணமாக தற்காலிகக் கொட்டில்களிலும் மாணவர்கள் கற்க வேண்டிய பரிதாபகரமான நிலை இங்கும் நிலவியது. இந்நிலையை நிவர்த்திசெய்யும் பொருட்டு 4 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படுகிறது. இதேபோன்று அல்மனார் வித்தியாலயத்தில் 3 மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் கட்ட வேலைகளுக்காக ரூ 2.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு பூர்த்தியடைந்துள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக அல்அமீர் வித்தியாலயத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்த வகுப்பறைக் கட்டிடம் பிரதியமைச்சர் அவர்களின் நிதியில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

**புளக் 'ஜே' பிரதேசப் பாடசாலைகள் அபிவிருத்தி**

சம்மாந்துறையில் மக்கள் செறிவு அதிகரித்துக் காணப்படும் புளக் ஜே கிழக்கு, புளக் ஜே மேற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக எவ்வித அபிவிருத்தியையும் காணாது வரட்சியுடன் இயங்கி வந்தன. இப்பாடசாலைகள் இன்று இரு மாடிக் கட்டிடங்களுடன் கம்பீரமாகக் காட்சி தருகின்றன. இவற்றிற்கு காரணமாக இருந்த பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள தாறுஸ் ஸலாம் மகா வித்தியாலயத்தில் கிழக்கு மாகாணத்திலே எங்குமில்லாதவாறு ஒரு கோடி ரூபா செலவில் ஒன்றுகூடல் மண்டபம் நிர்மாணிக்கப்படுகின்றது. பூர்த்தியடையாமல் இருந்த 3 மாடிக்கட்டிடத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் 2.7 மில்லியன் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்படுகிறது. அத்துடன் கணனிக் கற்கை நிலையம் அமைக்கப்பட்டதுடன் கணனிகளும் வழங்கப்பட்டுள்ளன.

புளக் ஜே மேற்கில் அமைந்துள்ள பிரபல பாடசாலையான அல் அர்ஷத் மகா வித்தியாலயத்தில் பிரதான தேவைகளாக இருந்த பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 6 மில்லியன் ரூபா செலவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மாடிக் கட்டிடம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. 6.2 மில்லியன் ரூபா செலவில் ஒன்றுகூடல் மண்டபமும் 3 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டரங்கும் ஏக காலத்தில் நிர்மாணிக்கப்படுகின்றன. இப்பிரதேச மக்களின் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை வளர்ச்சியில் இவை குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறே செந்நெல் கிராமத்தில் ஸாஹிறா வித்தியாலயம் பழைய கட்டிடங்களில் முன்னர் இயங்கிக் கொண்டிருந்தது. இக்கட்டிடங்கள் மாணவர் தொகைக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அத்துடன் அங்கு புதிய கட்டிடங்கள், விளையாட்டு மைதானம், விஞ்ஞானகூடம் என்பன அமைப்ப தற்குத் தேவையான காணியும் இருக்கவில்லை. இதையுணர்ந்த முன்னாள் பிரதியமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் அவர்கள் செந்நெல் கிராமத்தின் மத்தியிலே 5 ஏக்கர் அரச காணியொன்றில் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பழைய பாடசாலைக் கட்டிடத்தில் வைத்தியசாலை ஒன்று இயங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொ ண்டார். இதனால் அப்பிரதேச மக்கள் வைத்திய வசதிகளை தமது காலடியி லேயே பெற்று நன்மையடைந்தனர். சில பிற்போக்கு சக்திகள் இந்நடவடிக் கைகளை தமது சுயநல நோக்கத்திற்காக எதிர்த்தனர். இறுதியில் தோல்வியும் கண்டனர்.

அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட பாடசாலை நிரந்தரக் கட்டிடங்கள் இன்றி தற்காலிக கொட்டில்களில் பல வருடங்கள் இயங்கி வந்தன. இதனையுணர்ந்த பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் 12 மில்லியன் ரூபா செலவில் ஒரே நேரத்தில் இரு மாடிக் கட்டிடங்கள் இரண்டு நிர்மாணிக்கப்படுவதற்கான அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டார். இன்று மாடிக் கட்டிடங்கள் இரண்டும் செந்நெல் கிராமத்திற்கு அழகு சேர்ப்பது போல் தலைநிமிர்ந்து நிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மேலும் ஏற்கனவே பூர்த்திசெய்யப்படாதிருந்த வகுப்பறைக் கட்டிடம் ஒன்றைப் பூர்த்திசெய்வதற்கான நிதி ஒதுக்கியதுடன், சுற்று மதில், மின்சார இணைப்பு ஆகியனவும் 6 இலட்ச்சம் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. சம்மாந்துறையின் கைகாட்டியில் அமைந்திருக்கின்ற அல்-அஸ்ஹர் வித்தியால யத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டிருந்த போது அங்கு கல்விகற்றுக் கொண்டிருந்த சிறுமியொருத்தி பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களை நோக்கி ஒரு வினாவைத் தொடுத்தார். ''நாங்கள் மாடிக் கட்டிடத்தில் கல்வி கற்க முடியாதா? எங்களுக்கும் மாடிக் கட்டிடம் ஒன்று அமைத்துத் தருவீர்களா?'' என்பதுதான் அந்த வினா. அன்று பதிலளித்த அப்போது பாராளுமன்ற உறுப்பினராக மாத்திரம் இருந்த இன்றைய பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் ''இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக உங்களுக்கு மாடிக் கட்டிடம் ஒன்று அமைத்துத் தருவேன்'' என்றார்கள். இவ்வாறு பதில ளித்துவிட்டு வந்தது முதல் இந்த சிறுமியின் வினா பிரதியமைச்சரின் உள்ளத்தை நெருடிக்கொண்டே இருந்தது. உடனடியாக செயலில் இறங்கினார். அப்போதைய கல்வி அமைச்சரை அணுகி இரண்டு மாடிக் கட்டிடம் அமைப்பதற்கான நிதியை ஒதுக்கித் தருமாறு வலியுறுத்தினார்கள். அமைச்சரும் உடன்பட்டு இப்பாடசாலையை 'ஆரம்பக் கல்வி அபிவிருத்தி' செயற்திட்டத்தினுள் உள்ளடக்கி அதனை அபிவிருத்தி செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்கினார். இதன் மூலம் இப்பாடசாலையில் 5 மில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது மாத்திரமல்லாமல் மதிலும் அமைக்கப்பட்டு ஆரம்பக் கல்வி மாணவர்கள் கற்பதற்கான கணனி மற்றும் உபகரணங்களும் நூலகத்திற்கான நூல்களும் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி செயற்திட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரேயொரு முஸ்லிம் பாடசாலை இதுவாகும் என்றால் மிகையாகாது.

இப்படியாக ஒவ்வொரு பாடசாலைக் கட்டிடத்தின் பின்னும் ஒரு நீண்ட வரலாறு உள்ளது. சம்மாந்துறை அறபா வித்தியாலயத்தில் 10 வருடங்களுக்கு முன்பு இரண்டு மாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டு பூர்த்திசெய்யப் படாமல் இடைநடுவில் வேலைகள் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. அத்துடன் ஒப்பந்தக்காரருக்கும் பாடசாலை அபிவிருத்திச் சபைக்குமிடையே நீதிமன்றத்தில் வழக்கும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதனால் மாணவர்கள் கற்பதற்குத் தேவையான வகுப்பறைகள் இன்றி துன்பப்பட்டனர். இங்கும் அந்தக் கட்டிடம் பூர்த்திசெய்யப்படுவதற்கான நிதியினை ஒதுக்கி இன்று அந்தக் கட்டிடம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

ஏத்தாளக் குளத்தில் இயங்கிய ஏத்தாளக்குளம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை 1989 ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரங்களின் பின் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் தற்காலிகமாக இயங்கி வந்தது. இதனால் அப்பாடசாலை மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் உளப்பாதிப்புக்களுக்கும் உள்ளாகினர்.

இவர்களின் பரிதாப நிலையை எண்ணி வேதனையுற்ற பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் முயற்சியினால் இப்பாடசாலைக்காக காணியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் 1.6 மில்லியன் ரூபா செலவில் புதிய வகுப்பறைக் கட்டிடம், சுற்றுமதில், மலசலகூடம் என்பன அமைக்கப் பட்டு தற்போது சுமுகமாக இயங்கி வருகிறது.

மதீனா வித்தியாலயம் அல்மனார் வித்தியாலயத்தில் முதல்கட்டிட வேலைகளுடன் நிறுத்தப்பட்டிருந்த 3 மாடிக் கட்டிடம் 2.7 மில்லியன் ரூபா செலவில் இரண்டாம் கட்ட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

கைர் பள்ளிப் பிரதேசத்தில் உள்ள ஸபூர் வித்தியாலயத்தில் இடநெரு க்கடியை போக்கும் விதத்தில் 9 வருடங்களின் பின் 4 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

**இறக்காமப் பிரதேச பாடசாலைகள் அபிவிருத்தி**

பிரதேச வேறுபாடின்றி சம்மாந்துறை கல்வி வலயத்தில் உள்ள இறக்காம கோட்டப் பாடசாலைகளும் பல்வேறு வழிகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

வரிப்பத்தஞ்சேனை அல்அமீன் வித்தியாலயத்தில் 4 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

அமீர்அலிபுர வித்தியாலயத்தில் கடந்த அரசாங்க காலத்தில் இடைநடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் கைவிடப்பட்டிருந்த இரண்டு மாடிக் கட்டிடத்தை பூர்த்திசெய்வதற்காக 1.7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வாங்காமம் ஒராபி பாஷா வித்தியாலயத்தில் 15 வருடங்களின் பின் ஒரு கட்டிடம் 4 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. சேகுஒலிபுரம் அல்மதீனா, அல்-அஷ்ரப் மகா வித்தியாலயங்களுக்கு இரண்டு மாடிக் கட்டிடத்திற்கான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நாவிதென்வெளிப் பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்தி**

நாவிதென்வெளிக் கோட்டத்தில் உள்ள வீரத்திடல் அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தில் 1.8 மில்லியன் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வுகூடமும், கணனிக் கற்கை நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது. வீரத்திடல் அல்ஹிதாயா மகாவித்தியாலயம், சாளம்பக்கேணி அஸ்ஸிறாஜ் வித்தியா லயம் ஆகியவற்றில் இரு மாடி வகுப்பறைக் கட்டிடங்கள் அமைப்பதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. தொடர் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

**தமிழ்ப் பாடசாலைகள் அபிவிருத்தி**

இனமத வேறுபாடின்றி வலயத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் பலவும் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் சமமாக அபிவிரு த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வீரமுனை இராம கிருஷ்ன மிஷன் வித்தியாலயத்தில் ஆராதனை மண்டபத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் 3.8 மில்லியன் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

ஹீ. கோரக்கர் தமிழ் வித்தியாலயத்தில் 6.7 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. நாவிதென்வெளி அண்ணாமலை மகா வித்தியாலயத்தில் இரண்டு மாடிக் கட்டிடத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் 1.7 மில்லியன் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்படு கின்றன.

வேப்பையடி கலை மகள் வித்தியாலயம், கொளணி கணேஷா வித்தியா லயம் ஆகியவற்றில் இரண்டு மாடிக் கட்டிடங்கள் அமைப்பதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. தொடர் நடவ டிக்கைகள் நடைபெறுகின்றன.

**புதிய பாடசாலைகள் ஆரம்பித்தலும் அபிவிருத்தியும்**

மக்கள் பரம்பலினால் ஏற்பட்ட புதிய பாடசாலைகளின் தேவையைக் கருத்திற் கொண்டு புதிய பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளும் கௌரவ எம். ஐ. அன்வர் இஸ்மாயில் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டன. இதன் பலனாக சம்மாந்துறை மையவாடிக்கருகா மையில் இஸ்மாயில் வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை

ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இறக்காமம் கோட்டத்தில் வரிப்பத்தன் சேனையில் அல்-அஸ்ஹர் வித்தியாலயம் என்ற பெயரில் புதிய பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்படுகிறது.

சம்மாந்துறை இஸ்மாயில் வித்தியாலயத்தில் புதிய கட்டிடம் ஒன்று அமைப்பதற்கான 1.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு நிர்மான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கடவுள்ளன.

**தளபாடங்கள் விநியோகம்.**

சம்மாந்துறை வலயப் பாடசாலைகளில் மிக மோசமான தளபாட பற்றபக்குறையை நிர்வாகிக்கும் பொருட்டு கௌரவ பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினால் 2 மில்லியன் ரூபா செலவில் பல பாடசாலைகளுக்கு தளபாடங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கல்வித் துறையில் இப்பாரிய அபிவிருத்திப் பணிகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மாணவர்களின் பெறுபேறுகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு இவ்வபிவிருத்தியின் வெளியீடு என்றுதான் சொல்ல வேண்டும். எதிகாலத்தில் மேலும் பல அபிவிருத்திகள் ஏற்பட பிரதியமைச்சர் கௌரவ அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் சுகமான வாழ்வையும் திறந்த ஆளுமையையும் வழங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**எம்.ஏ. கிதிர் முகம்மட்**
நிர்வாக உத்தியோகத்தர்,
வலயக் கல்வி அலுவலகம்,
சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட்டுத் துறையில்**
**பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் பங்களிப்பு**

அபிவிருத்தி நகர்வுகள் எனும் இம்மலருக்கு அன்வர் இஸ்மாயில் அவர்களின் விளையாட்டுத் துறைப் பங்களிப்பு பற்றி அம்பாறை மாவட்ட மைதான அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் என்றரீதியிலும் அம்பாறை மாவட்டத்தின் விளையாட்டு அதிகாரி என்ற வகையிலும் அம்பாறை மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் என்றவகையிலும் இலங்கை மெய்வல்லுநர் சங்க நிர்வாகக் குழு என்றவகையிலும் ஒருசில விடயங்களை எடுத்துக்கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எனது 29 வருடகால அனுபவத்திலிருந்து முதலில் ஒரு உண்மையினைக் கூறவிரும்புகின்றேன். இதுவரை காலமும் எந்தவிதமான அமைச்சர்களாலோ, அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களாலோ ஒரு மைதானம் அல்லது ஒரு விளையாட்டு சம்பந்தமான கலந்துரையாடல் இம்மாவட்டத்தில் விளையாட்டு சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றாகக்கூடி ஒரு முடிவு எடுத்ததாக இல்லை. ஆனால் இதனைக் கருத்திற்கொண்டு விளையாட்டுத் துறையில் அனுபவமில்லாத ஒரு பிரதியமைச்சராக இருந்தும் இம்மாவட்டத்திற்கான முக்கிய விளையாட்டுத் துறை சார்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு 26.05.2005 ம் திகதி தனது மக்கள் பணிமனையில் அழைத்து எவ்வாறு இதனை முன்கொண்டு செல்ல வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இதற்கு எவ்வாறான திட்டங்களைத் தீட்டவேண்டும் என்றும் கலந்துரையாடினார். அம்பாரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவொரு வரலாற்றுச் சாதனையாகும்.

அம்பாரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கரையோரப் பகுதிகளைக் கொண்ட பிரதேச செயலகங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இருப்பினும் இப்பிரதேச செயலகங்களின் அமைவிடப் பகுதிகளில் ஒரு 400 மீற்றர் மைதானம் கூட இல்லை. இதனால் மிகவும் திறமைவாய்ந்த எமது பகுதி வீர, வீராங்கனைகள் 200 மீற்றர் மைதானங்களில் ஓடி பழக்கப்பட்டவர்கள். மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் 400 மீற்றர் மைதானத்தில் இவர்கள் ஓடவேண்டிய நிலை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் இவர்கள் தங்களது ஓட்டங்களை சரியான நேரத்திற்கு ஓடமுடியாமை, உளவியல் தாக்கத்திற்குட்படுகின்றமை, தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு உட்படுகின்றமை போன்ற சகல பிரச்சினைகளுக்கும் ஒரு வழிகாட்டியாக எமது சம்மாந்துறைப் பகுதியில் அமையப்பெறும் மைதானம் காணப்படும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. விளையாட்டுத்துறையில் அனுபவமில்லாத ஒரு பிரதியமைச்சருக்கு இப்படியொரு சிந்தனை ஏற்பட்டது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அம்பாரை மாவட்டத்தில் காணப்படும் அம்பாரை, தெகியத்தகண்டிய, ஒலுவில் போன்ற பிரதேசத்தில் காணப்படுகின்ற 400 மீற்றர் மைதானத்தில் காணப்படும் குறைபாடுகளான போக்குவரத்து பிரச்சினை, பயிற்சி உபகரணங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் பிரச்சினை, மைதானத்தில் பயிற்சிபெற அனுமதிபெறுவதற்கான பிரச்சினை, இனங்களுக்கிடையிலான பிரச்சினைகள் இவை அனைத்தையும் ஒரு தீர்வுக்கு கொண்டுவரவேண்டும். இப்பிரச்சினைகள் அனைத்தையும் மழுங்கடிக்கச்செய்ய வேண்டும் என்று இவரால் முன்நோக்குடன் சிந்தித்து மூன்று இன மக்களுக்கும் ஒரு பொதுவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தினை, கடந்த 33 வருடங்களாக வைக்கோல் கம்பனிக்குச் சொந்தமான பல முன்னாள் அமைச்சர்களாலும், பாராளுமன்ற உறுப்பினர்களாலும் பெற முடியாமல் இருந்த நிலத்தினை தெரிவுசெய்து மூன்று இனமக்களின் விளையாட்டுத் திறனையும், உடல் ஆரோக்கியத்தினையும் பாதுகாக்க போராடி பெற்று மக்களின் கையிலே இம்மைதானத்தினை ஒப்படைத்துள்ளார்.

இலட்சியவாதிகளும் சாதனையாளர்களும் அழியலாம். ஆனால் இலட்சியங்களும் சாதனைகளும் அழிக்கப்படக்கூடாது. எமது பிரதியமைச்சரின் சேவைகளுக்கும் இலட்சியங்களுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். எமது அம்பாரை மாவட்ட மைதான அபிவிருத்திச் சங்க சார்பில் இத்தகைய உறுதிமொழி அளிப்பதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அல்-ஹாஜ் எம். அப்துல் நபார்,**
மாவட்ட விளையாட்டு அதிகாரி,
கச்சேரி,அம்பாறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியும் அன்வர் இஸ்மாயிலும்

தென்கிழக்குப் பல்கலைக் கழகம் உருவாக்கப்படுகின்ற அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, தலைவர் எம.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் தனது இணைப்பாளரான அன்வர் இஸ்மாயில் அவர்களிடம், ''இன்று அமைச்சரவையில் முக்கிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது பற்றி நான் பத்திரிகையாளர்களோடு கதைக்க வேண்டும். இதற்காக ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை ஒழுங்கு செய்யுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். அன்றிலிருந்து அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்துக்குமான தொடர்பு ஆரம்பமாகின்றது.

இப் பல்கலைக் கழகத்திற்கான உபவேந்தர் ஒருவர் தீர்மானிக்கப்பட்டவுடன் அதற்கான பதிவாளராக ஏ.எல். ஜ.்.பர் சாதிக் அவர்களை தீர்மானித்துக் கொண்டு அவரை நேரடியாகச் சென்று அழைத்து வருமாறும் தலைவர் அஷ்ர.்.ப் அவர்கள் தனது இணைப்பாளரையே பணித்தார். இவ்வாறு இப்பல்கலைக் கழகத்தின் ஆரம்ப கட்டப் பணிகளிலே தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுக்கும் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் ஒரு நெருக்கமான உறவு இருந்து வந்தது. இதனால் என்னவோ தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுடைய் மறைவுக்குப் பின்னர் இன்று இப்பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தியிலே போதியளவு அக்கறை உள்ளவராக பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களையே இனம் காணவேண்டியுள்ளது.

தலைவர் அஷ்ர.்.ப் அவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் சேர்ந்து அவ்வாணைக்குழு மூலம் அனுமதியை பெற்று அதனை தன்னுடைய அமைச்சின் மூலமே தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தியினை செயற்படுத்தி வந்தார். இந்த வகையில் அவருக்கு அவர் பதவி வகித்த புனர்வாழ்வு அமைச்சு பெரிதும் உதவியாக இருந்தது. தலைவர் அஷ்ர.்.ப் அவர்கள் தனது அமைச்சின் பெரும்பாலான நிதியின் மூலமாக பல்கலைக் கழக கட்டிட பணிகளையும், ஏனைய வாகனத்தேவைகளையும் நிறைவேற்றி வந்தார். அவரது மறைவுக்குப் பின்னர் இப்பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தியில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டது. இப்பல்கலைக் கழகத்தை தொடர்ந்து கொண்டுசெல்ல முடியுமோ என்று பலரும் ஐயம் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் இப்பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கினாலும் அபிவிருத்தியை இங்கு காணமுடியாமலே இருந்தது. ஐ.தே.மு. அரசாங்கம் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தினை அஷ்ர.்.பின் அரசியல் பிரச்சார நிலையமாகவே நோக்கியது. அவ்வமைச்சரவையில் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சராக இருந்த கபீர் ஹாஸிம் அவர்களை அடிக்கடி சந்தித்துக் கதைத்தும் இப்பல்கலைக் கழகத்திற்கு அழைத்து வந்தும் இப்பல்கலைக் கழக வளர்ச்சியில் அக்கறை செலுத்துமாறு அன்வர் இஸ்மாயில் அவர்கள் வற்புறுத்தியே வந்தார். இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் நீங்கள் அக்கறை செலுத்தினால் இம்மாணவர்கள் மாத்திரமே உங்களுக்காக பிரார்த்தனை செய்வர் என்றும் குறிப்பிட்டார். இப்பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி தொடர்பாக அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் அடிக்கடி சந்தித்து கதைத்து வந்தார். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. இறுதியாக ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் அன்வர் இஸ்மாயில் அவர்களுக்கும் முரண்பாடு வருவதற்கும் இப்பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தியில் அவ்வரசு காட்டிய அசமந்தப் போக்கும் அலட்சிய மும் ஒரு காரணமாகும்.

பின்னர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தனது தனிப்பட்ட முயற்சியின் காரணமாக உலக வங்கியின் தலைவர் திரு. பீற்றர் ஹெரல்ட் அவர்களை இப்பல்கலைக் கழகத்திற்கு அழைத்து வந்து இங்குள்ள தேவைகளை விளக்கினார். இதன் காரணமாக இப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட உள்ளக அபிவிருத்திகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதனோடு அன்வர் இஸ்மாயில் அவர்கள் பிரதியமைச்சர் ஆனதுடன் உயர் கல்வி அமைச்சருடன் உரையாடி பல்கலைக் கழக மாணிய ஆணைக்குழுவிடம் இப்பல்கலைக் கழகத்திற்கான போதியளவு நிதியினை பெறுவதில் அக்கறை காட்டி வந்தார். முன்னாள் அமைச்சர் றவூப் ஹக்கீம் மூலம் களியோடை எல்லையில் அணைக்கட்டொன்றினை நிர்மாணிப்பதற்காக ஐ.தே.மு. அரசின் காலத்தில் 2 மில்லியன் ரூபா மாத்திரம் பெறப்பட்டது. அதன் மீதிப்பணமான 4.7 மில்லியன் ரூபா கூட கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் மூலமே பின்னர் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும் தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுடைய காலத்திலேயே அவருடைய அமைச்சின் மூலமே வழங்கப்பட்டன. பலதடவை கோரிக்கை விடுத்தும் பின்னர் ஒரு வாகனத்தைக்கூட இப்பல்கலைக்கழகத்திற்காக பெறமுடியாதிருந்தது. பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் இந்தியத் தூதரகத்தோடு பேசி இப்பல்கலைக்கழகத்திற்காக ஒரு மோட்டார் காரினை அண்மையில் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். தலைவர் அஷ்ர.்.ப் அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் முதன்முதல் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் தனிப்பட்ட முயற்சியின் காரணமாக இவ்வுதவி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இது மாத்திரமன்றி இப்பல்கலைக்கழகத்தினை இந்தியப் பல்கலைக்கழகங் களோடு இணைப்பதற்கான முயற்சியினையும் அவர் மேற்கொண்டு வருகின்றார். அந்த வகையிலே இப்பல்கலைக்கழகத்திலிருந்து அரசியல் துறை விரிவுரையாளர் ஒருவர் இந்தியாவின் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்திற்கு சென்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இதனடிப்படையில் விஞ்ஞான, வர்த்தக, முகாமைத்துவ, கலை, கலாசார பீடங்களைச் சேர்ந்த விரிவுரையாளர் குழுவினை இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாடு காணப்பட்டுள்ளது.பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களின் வேண்டுகோளின் பேரில் தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விவசாய பீடத்தை நிறுவுவதற்கான பணியினை மேலும் அவசரப்படுத்த ஜனாதிபதி இணங்கியுள்ளார். இது தொடர்பாக தஞ்சாவூர் விவசாய பல்கலைக்கழகத் திற்கு தென்கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் அண்மையில் விஜயம் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக அறபு இஸ்லாமிய கற்கை பீடத்தினை உருவாக்குவதற்கான கோரிக்கையினை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த பிரதிய மைச்சர் அவர்கள் அந்த முயற்சியிலேயே முழுமையாக வெற்றி கண்டுள்ளார். 2006 ஆம் ஆண்டில் இப்பீடத்திற்கான மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இந்த விடயங்கள் எல்லாம் தலைவர் அஷ்ர∴ப் அவர்களின் கனவுகளாகும். இதனை பிரதியமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்து செயற்படுத்தி வருகின்றார்.

தலைவர் அஷ்ர∴ப் அவர்களுக்கும் இந்த நாட்டின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமரதுங்க அவர்களுக்கும் உள்ள தனிப்பட்ட புரிந்துணர்வு காரணமாகவே இப்பல்கலைக்கழகம் ஒரு மின்னல் போல தோன்றியது. இப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் ஆயிரக்கணக்கில் பட்டம் பெற்று வெளியாக வேண்டும்; இங்கு பலபீடங்கள் உருவாக வேண்டும். இதன் முதலாவது பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி பிரதம அதிதியாக கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணங்களெல்லாம் தலைவர் அஷ்ர∴ப் அவர்களுக்கு இருந்தது. ஆனால் அந்த எண்ணங்களெல்லாம் நிறைவேறு வதற்கு முன்னமே தலைவர் அஷ்ர∴ப் அவர்களின் மரணம் நிறைவேறி விட்டது. இதனையும் உணர்ந்த அன்வர் இஸ்மாயில் இப்பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவுக்கு பிரதமஅதிதியாக ஜனாதிபதியை அழைப் பதற்கான நேரத்தினை பெற்று இவ்வைபவம் நிறைவேறியதன் மூலம் தலைவர் அஷ்ர∴ப் அவர்களின் எண்ணத்தினை நிறைவுசெய்துள்ளார். இதன் மூலம் இப்பல்கலைக்கழகத்திற்கும் மாணவர்களுக்கும் கௌரவத்தினையும், பெருமையினையும் தேடிக்கொடுத்துள்ளார்.

இவ்வாறு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பற்றி தலைவர் அஷ்ர∴ப் அவர்களுக்கு இருந்த கனவுகளை எல்லாம் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்கள் தனது அரசியல் வாழ்வு காலத்தில் நிறைவேற்ற வேண்டுமென்ற அவாவுடன் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார். தலைவர் அஷ்ர∴ப் அவர்களுக்குப் பின் தடைப்பட்டிருந்த தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தியினை அவர் தொடக்கிவைத்திருக்கின்றார். இந்த விடயத்தினை தென் கிழக்குப் பல்கலைக்கழக ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ர∴ பின் பிறந்த தினத்தையொட்டி நடைபெற்ற வைபவத்திலே அப்பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஏ.ஜீ. ஹுசைன் இஸ்மாயில் பின்வருமாறு வெளிப்படுத் தினார். ''தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தியில் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்களுக்குப் பின்னர் அதிகம் அக்கறை காட்டும் அரசியல்வாதியாக பிரதியமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் இனங்காட்டப்பட்டுள்ளார். அவரது முயற்சியினால் அறபு இஸ்லாமிய கற்கை நெறிப் பீடம், விவசாய விஞ்ஞான பீடம் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன. (தினகரன்: 10.11.2004)"

**வை.பி. சலீம்**

இணைப்புச் செயலாளர், கௌரவ பிரதி அமைச்சர்
கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு
அபிவிருத்தி அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிஜ்றாவில் இலங்கும் நவீன சந்தை

ஊர் நடுவமைந்தது ஹிஜ்றா - எங்கள்
உள்ளத்தில் நிறைந்தது ஹிஜ்றா
பாரெலாம் போற்றிடும் ஹிஜ்றா - பார்க்கப்
பதினாறு கண்களைக் கேட்டிடும் ஹிஜ்றா.

நானா திசையிலும் சாலை - தன்னை
நண்ணி வருவதைக் கண்டு
வானையண்ணார்ந்து நிமிர்ந்து - இங்கு
வாருங்கள் என்று அழைத்திடும் ஹிஜ்றா.

ராச உறுப்புக்களெல்லாம் - நம்
நெஞ்சுக்குள் உள்ளது போல
தேசத்து முக்கியம் எல்லாம் - ஹிஜ்றா
தெருக்களில் பூத்துக் குலுங்குதல் காண்போம்.

ஆருக்கும் தேவையில்லாமல் - இது
அசறப்பாச் சந்தியாய்க் காடாய்க் கிடந்து
ஊருக் கொதுக்கிடமாகி - எந்த
ஊசாட்டமுமின்றிக் கிடந்தது அன்று.

அன்றிருந்த மக்கள் சந்தைப் பொருட்களை
ஆலையடிச் சந்தையில் வாங்கினார்கள்
ஒன்றுக்கு நூறாக மக்கள் பெருகிட - இவ்
வூர்ச் சந்தை போதாமலாகியது.

சந்தையின் அவசியம் தோன்றியதால் - ஒரு
சந்தையை ஹிஜ்றாவில் ஆக்குதற்கு
முந்தியிருந்த தலைவர்கள் பெரியார்கள்
முக்கியம் தந்து முயன்றார்கள்.

காலச் சகடச் சுழற்சியின் வேகம்
கண்முன் சுழன்று பலன் தந்தது போல
மூலை முடுக்கெலாம் மக்கள் செறிந்து
முக்கியம் தந்தனர் ஹிஜ்றாச் சந்திக்கு.
சந்தியின் முக்கியத்தை நன்றாயறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கபல பெரியார்கள் அப்போதிருந்து
சிந்தித்துச் சிற்சில முயற்சிகளைச் செய்து
செய்வதும், பின்னடைவு காண்பதுவுமானார்.

எத்தனையோ வேகமாய் முயற்சி மேற்கொண்டு
ஏறாத இடமெலாம் ஏறித்திரிந்து
அத்தனை பேர்களும் பூரணப் பயனை
அடையமுடியாமலே திக்கற்று நின்றார்.

பிடரியைச் சந்தையின் தேவை பிடிக்க
பிரச்சினை இல்லா நிலத்தில் கல்நாட்டி
கடைகளைக் கட்டியுடன் பொருட்கள் குவித்து
கஸ்டத்தைப் போக்கிட வழிகள் செய்தார்கள்.

நடமாட்டம் குறைவான ஒரு பாதை முகத்தில்
நமக்கான சந்தையைக் கட்டிமுடிக்க
நடமாட்டம் கூடிய பாதை முகமொன்று
நலிவான தோற்றத்தில் களையற்றுப் போச்சு.

உரித்து முடிக்காத முழுத் தேங்காயைப் போல
ஒரு பக்கம் தைக்காத சட்டையைப் போல
சிரைத்து முடிக்காதவனின் முகத்தைப் போல
சீரற்றுக் கிடந்ததனை யாவருமறிந்தோம்.

பேர்பாதை ஓரத்தின் நிலச் சொந்தக்காரர்
பேரங்கள் பேசிவரும் பெரியோரின் பேச்சை
சீரற்ற செவியர்களாய்க் கேட்டு நின்றார்கள்.
சிக்கல்கள் பின்னணியில் உள்ளதாய் எண்ணி.

வளவுகளைத் தருகின்ற பேர்களுக் கென்று
வழங்குகின்ற இழப்பீடு இன்னின்ன வென்று
தெளிவாகச் சொல்லாமல் கேட்கின்றதாலே
தினையளவும் நாமசைய மாட்டோ மென்றார்கள்.

இவர்களது பேச்சுக்கும், வாக்குகட்கும்
இணங்கிப் போய் வளவுதர ஒப்புக்கொண்டால்
தவங்கிடந்து பெற்றநிலம் தனையிழந்து
தலை தெறித்துத் திரியும் நிலை வரலாமென்று.

அசையாத நிலைப்பாட்டைக் கொண்டோராக
அணுவளவும் தளராமல் இருந்ததாலே
விரைவாக முயன்றோரும் வேகம் குன்றி
விட்டார்கள் அதன்பாட்டில் கிடப்பதற்கு.

இவ்வாறு சூழுரைத்த மக்களை அண்மி
எமதிளைய இனிய மகன் அன்வறிஸ்மாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வையாத் தீர்க்கமாய்ப் பேசியதனாலே
   தீர்வொன்று கண்டிடும் இணக்கத்தைப் பெற்றார்.

இணக்கத்தைத் தந்தோரின் இழப்பீட்டுக்காக
   எத்தனையோ பாழிகளில் சுழியோடிப் பெற்ற
காணியை அளந்தவர்கள் கையிற் கொடுத்து
   கடைகளும் தருவதாய் ஒப்பந்தம் செய்தார்.
உடனடியாய் நஸ்டங்கள், நிவாரணங்கள்
   உறுதியாய், ஒப்பந்தமாய் எழுதியீந்து
கடைத்தொகுதி நவீனமயச் சந்தையொன்றை
   கட்டுவிக்க முயன்ற மகன் அன்வறிஸ்மாயில்.

நவீனமயச் சந்தைக்கு அடிக்கல் நாட்டி
   நடுமட்டில் தளம்போட்டு முடித்தெடுக்க
நெடுநாட்கள் சென்றதனைப் பொறுத்திடாமல்
   நிறுத்தியதை வேறு கைக்கு மாற்றிவிட்டார்.

நூறுநாள் கெடுவைத்துக் கையளித்து
   நிமிடங்கள் தவறாமல் வேலை செய்த
பெறுபேற்றை இப்பொழுது முழுமையாக
   பெருமையுடன் காணுகின்றோம் சந்தையாக.

எங்களுக்குக் காலிமுகம் போற்பரந்து
   இருக்கிறது ஹிஜ்றாவின் நாலாம் சந்தி
மங்களமாய் மக்களிதிற் கூடுதற்கும்
   மகாநாடு, கூட்டங்கள் நடாத்துதற்கும்

சந்தையின் உயிர்மூலையில் மேடையொன்றை
   சரித்திரத்தில் இல்லாத வாறமைத்து
சிந்தைக்கு விருந்தளித்து ஊரின் பேரை
   திக்கெல்லாம் பரவுதற்கு வழிசமைத்தார்.

சிறுவயதை அரசியலுக் கர்ப்பணித்து
   சிரத்தையுடன் மக்களது நலன்கள் பேணி
விறுவிறென்று வேலைகளை முடித்துவைக்கும்
   விறல் மைந்தன் அன்வறே உன் ஆயுள் நீள்க!

பசிதாகம் நோக்காது சிரமப்பட்டு
   பறவைபோல் பலவிடமும் பறந்து சுற்றி
நிதிதேடி யலைந்து பெற்றுக் கொண்டுவந்து
   நினைத்தவற்றை உடனடியாய்ச் செய்துவைப்பாய்.

காலத்தின் தேவைகளைத் தெரிந்தெடுத்து
   கச்சிதமாய் முடிப்பதற்கு வடிவமைத்து
காலத்தைக் கடக்காமற் கடிதிற் செய்யும்
   கரும வீரன் நீயென்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் உன்கையில் இல்லா வேளை
அநேகருக்கு ஆயிரமாய்ச் செய்து உள்ளாய்.
அதிகாரம் கிடைத்த சில நாட்களுக்குள்
அதைவிடவும் ஆயிரமாய்ச் செய்து உள்ளாய்.
எத்தனையோ பராக்கிரமர் முயன்று பார்த்தும்
இயலாமல் கைவிட்ட பெரும் பொறுப்பை
சித்தமுடன் கையேற்றுச் சிரமப்பட்டுச்
சீராக்கிச் செய்ததுதான் நவீனச் சந்தை.

தொடர் மாடிக் கட்டிடங்கள் கடைகளோடு
சூழ்ந்திருக்கும் நாற்சந்திக் கழகையூட்டும்
கடைத்தொகுதி மேடையுடன் நவீனச் சந்தை
கண்களுக்கு விருந்தாகிக் களிப்பையூட்டும்.

முகப்புக்களில் முஸ்லிம்கள் கலைஜொலிக்க
முழுவதிலும் கலாச்சார மணம்மணக்க
அகப்புறத்தில் அழகுக்கு அழகு மிஞ்ச
அதிநவீனச் சந்தையுருக் காணுகின்றோம்.

எம்முடைய ஊர்பெயரை எடுத்து ஓதும்
ஹிஜ்றாவின் சந்தியிலே அமைந்த சந்தை
நம்மவர்க்குக் கிடைத்தவொரு பாக்கியந்தான்
நாள் முழுதும் இதன் பயனை அனுபவிப்போம்.

தேசமெல்லாம் ஊடறுக்கும் ஹிஜ்றாச் சந்தி
சிறப்படையப் பாடுபட்ட அமைச்சருக்கு
பாசமுடன் மக்கள் குரலாயொலித்து
பாராட்டி நன்றிகளும் கூறுகின்றேன்.

கலாபூஷணம், கலைமணி
ஏ.ஸி. இஸ்மாலெவ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது நிரந்தர அரசியலின் பதிவு**
**அன்வர் இஸ்மாயிலின் வரவு**

பார்த்தாயா காக்கா சந்திய
அதன் முகத்தில் அழகான
மறுப்போல மார்க்கட்
ஊர முகத்தப்பாருகா என்ன செழிப்பு
வெள்ளாம விளஞ்சமாதிரி...

இனி என்ன காக்கா
காய் கறியோ...
மீனோ.. இறைச்சோ...
இலக்கறியோ.. என்ன சாமானோ...
மனம் குளிர வாங்க
நாலு கத வாய்யாற நின்று பேச
நல்ல இடம்தான் சோக்கான மார்க்கட்

கல்யாண பொண்ணப் போல
சீவிச் சிங்காரிச்சி கண்ணுபற மாதிரி
நிற்குது பார் மார்க்கட்

யாருமே கட்டிவைக்காது கிடந்த குமருதான்
கல்யாணக் கோலம் காண வைத்தது
தம்பி அன்வர் இஸ்மாயில் எம்பிதான்
'இனி ஊருக்கு ராசா அவர்தான்' என்று
மார்க்கட்டுல சாமான் வாங்குற சனம்
வாயில விரல் வைத்து
இப்படித்தான் பேசுமாக்கும்

நமக்கொரு மார்கட்ட கேட்டு
நாம மல்லுக்கட்டி
நாற்பது வருஷமாகுது காக்கா
இதற்கு முன்ன இருந்தவங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினெகெட்ட வேலையென்று
மாட்டைத்தானே படுக்க விட்டாங்க

தம்பி அன்வர் இஸ்மாயிலும் இல்லாட்டி
இனி யாரு செய்யப் போறாங்க
கொஞ்ச காலத்துக்க
அவர் செஞ்ச சேவ
இனிவரும் காலத்திற்கு போதும் காக்கா

நெல்லுப்புட்டி சந்தியில
வரவேற்பு கோபுரம்.
செந்நெல் கிராமத்தில்
தண்ணி டாங்கி.
இஸ்மாயில் புரத்தில்
வீட்டுத்திட்டம்
மெலிந்து கிடந்த வீதிகளும்
உருப்பெருத்து
அழகெடுத்து
ஊர மதிப்ப பாருகா காக்கா

நாடு முழுக்க தேடினாலும்
உலமா சபைக்கென்றொரு
தனிக்கட்டடத்த காணலாமா
முதல் முறையா அதையும் நமதூருல கட்ட
பாடுபட்டதும்
கல்லு நட்டதும்
நமக்கெல்லாம் பெருமைதானே காக்கா

இது மட்டுமா காக்கா
இன்னும் எவ்வளவு
ஜனாதிபதி விளையாட்டரங்கு
பாடசாலை அபிவிருத்தி
பள்ளிவாசல் பொது வேலையென்று
சொல்ல சொல்ல நாக்கூறும்
தம்பி அன்வர் இஸ்மாயில் எம்பி
செய்த சேவைகளை....

பூ மரத்தப்போல
அவர் வந்து வாச்சதுவும்
நாம செய்த புண்ணியம்தான்
நல்ல துணிச்சலான புள்ள

உள்வீட்டில் கூப்பிட்டுவைத்து பேசும்
உளத்தன்பு கொண்ட ராசா
ஊருக்கு மட்டுமல்ல பக்கத்து ஊருக்கெல்லாம்
வாரி இறைத்த வள்ளல்
சமூகத்தின் விடியலுக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலித்துக் கொண்டிருக்கும்
நமது உரிமைக்குரல்

தம்பிர சீவனைப் போட்டுவை
ரஹ்மானே!
இன்னும் நிறையவும்
குமரு குட்டிகள் வாழ்ந்து
ஊரும் செழித்து
சமூகமும் விடிவுபெற....

இறக்காமம்
எம். நவாஸ் செளபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியொரு சந்தை செய்வோம்.

சம்மாந் துறைப்பெண் சந்தையாய் நின்று
சந்தோசச் சிரிப்பில் அங்கம் மவர்ந்தனள்
எம்மண்ணும் மகிழ்ந்தது மனசும் நிறைந்தது
எம்மன நிறைவினில் பிரார்த்தனை பிறந்தது.

முன்னொரு காலத்துப் பூமரத்தடிச் சந்தை
முற்றிலும் மறந்த பிற்காலச் சூழலில்
இன்னமொரு சந்தை அஷறப்பா சந்தியில்
இறுகிக் கொண்டது உசும்பவே யில்லை.

இறுகிக் கொண்டதைத் துலக்கிடவைக்க
இயன்ற வரையினில் அமைச்சர் பலரும்
முயன்று பார்த்தனர் முடியவே யில்லை
முயற்சியில் வென்றவர் அன்வர் இஸ்மாயில்.

அஷறப்பா பின்னர் ஹிஜ்ரா வானாள்
அதனால் தானோ யோகம் வந்தது
நேஸம் கொண்டார் சந்தைப் பெண்ணில்
நித்திய மணமகன் அன்வர் இஸ்மாயில்.

சந்தைப் பெண்ணாள் மணக்கோலம் பூண்டாள்
சரித்திர மென்று புதிதாய் மலர்ந்தது
முந்தையோர் வியக்க பிந்தியோர் வாழ்த்த
முழுதும் நிறைந்த காட்சி பகர்ந்தது.

அசலூராரும் வாருங்கள் அங்காடியைப் பாருங்கள்
''ஆ'' வென்று பிளக்காமல் அனுபவித்துச் செல்லுங்கள்
நேசமோடு எம்மூரார் அநியாயச் செயலகற்றி
நிறைவான நெஞ்சோடு நித்தமும் பேணுங்கள்.

- சம்மாந்துறை **மஷூறா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணைக் காப்போம்!

முருங்கை இலைக்கறிக்கும்
பொட்டியான் கருவாட்டுக்கும்..
முருங்கைக் காய்க்கும்..
விரால் கருவாட்டுக்கும்..
பொன்னாங்கண்ணி இலைக்கறிக்கும்
துடி உழுவை மீனுக்கும்........

முத்தச் சுரக்காய்க்கும்
முகம் சிவந்த கூனிக்கும்..
மரவள்ளிக் கிழங்குக்கும்..
மாட்டிறைச்சி வெள்ளச் சொதிக்கும்.

தமிழ் இலக்கியப் பாடத்தை
தரமாக படித்துத் தந்திட்ட..
இனிய ஆசிரியராம்..
மர்ஹூம் முஹம்மது இஸ்மாயில்..
ஆசிரியரும் எங்களுக்கு வாய்த்தது போல...
அவர் மகனாம்., அன்வர் இஸ்மாயில்...

தம்பியின் துடிதுடிப்பும்
துவண்டு விடாத் தைரியமும்..
அரசியலில் தூர நோக்கும்..
அன்பான வார்த்தைகளும்..
எப்பகுதி மக்களுக்கும் ஏற்ற
இனிய வராம் தலைவரினால்...

வாயிலும் 'கா'
தோளிலும் 'கா'
வந்தோரை வரவேற்பதில் வல்லவராம் 'கா' - வென்று..
வாயாரப் புகழ்ந்திடும்
செந்நெல் பூமியாம் சிறப்புமிகு சம்மாந்துறையில்.....

எத்தனையோ கோடி செலவில்
எழில்மிகு நவீன சந்தை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிஜ்ராவில் அமைத்துத் தந்த, - எங்கள்
இறைவனுக்கும்., இளைய தலைவருக்கும், - நம்
அரசுக்கும் நன்றி கோடி!
மாடுகளை மேய்த்திங்கு - தினமும்
மாசு படுத்திடாமல் - எம்
மார்க்கட்டை கண்ணெனக் காப்போம் நாமும்.

சம்மாந்துறை **ஏ.அஸீஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிகழ்காலத்தின் நல்லவை!**

ஆலையடி என்று அந்நாளில் பேர் கொண்ட
நல்லதொரு சந்தை எங்களூர்ச் சந்தை!
சோலைக் கிளிகளால் சனக் கூட்டம் பெருகி நிற்கும்!
சம்பா விளையும் சம்மாந்துறை வாணிபத்தின்
துறைமுகமாய் இருந்ததனால் தக்க பெயரோடு
சம்மாந்துறையென சீரான பேர் கொண்டிலங்கும்!
காலத்தின் தேவைகள் கனதூரம் விரிந்தமையினால்
சந்தையும் மாறியது; சந்தோஷம் தேடியது!

ஊருக்கு மத்தியென்று ஊரவர்கள் எடுத்தாலும்
ஹிஜ்ரா சந்தியும் இதயமாய் இருந்திலங்க
ஊருக்குப் பெரிய சந்தை உருவாக வேண்டுமென்ற
உயர்வான சிந்தனைகள் உருவாக்கினதொரு சந்தையினை!
பேருக்குச் சந்தையாய் பலகாலம் கழிந்தாலும்,
தேவை பலவும் தேங்கி நிற்கப் பிறந்த மேனியனாய்
இருந்த நிலையை எவர்கண்ணும் ஏறப்பார்க்கவில்லை
எத்தனை இடர்தான் ஹிஜ்ரா சந்தை கட்டுவதில்!


இறந்த காலத்தில் இருந்தாட்சி செய்தவர்
இயலாமைதான் இத்தனை காலம் இழுத்ததுவோ?
சிறந்த நிகழ்காலமிது; நிகழும் நல்லவை பலவும்
பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் சேவைகளால்!
இறவாப் புகழ்தேடின் இனிய தலைவனாய்
எதிர்காலம் ஏற்றிப் பேசும் உன்னை
இறைவிரும்பும் நற்செயல்கள், இதயம் யாவும்
இவரில் நிலைக்க இதுபோதில் பிரார்த்தனைகள்!

இலட்சக் கணக்கில் இங்கு கொட்டிக் குவிந்ததனால்
உருவாகிக் கம்பீரமாய் புன்னகைக்கும்
ஹிஜ்ராவின் நவீன சந்தை காலமெல்லாம்
இவர் பேரையும் சொல்லும்! அலங்கார நுழைவாயில்...
இதுபோல எண்ணிலாதவை இங்கு செய்தோனை இதயம்
கனிந்து வாழ்த்துகிறான் சம்மாந்துறை மாதா!
இறைவகுத்த நியதியிலே அவன் தூதர் வழியினிலே
இங்கு வியாபாரம் நிகழ்ந்து இறையருள் பெருகிட
இறையருட் கவிஞன் இப்றாகிம் வாழ்த்துகிறேன்
வாழ்க ..... வளம் பெறுக வல்லோன் அருள் பெறுக!

இறையருட் கவிஞன் ஏ. இப்றாகிம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*




***Our history goes back over one hundred years in time. Over the years, innovation not only built up the largest portfolio of products and services, but also continues adding value to them.***

For instance, our incentive scheme for savers, PATHUM VIMANA, offers prizes worth over Rs.60 million each year. Current Account holders can also enjoy FREE Life Insurance. With our SHANTHI Housing Loans, you could get your home for free! NRFC and RFC account holders win with our PATHUM UDANAYA Scheme. Credit Card holders too can win great prizes – and even minors can win superb prizes with SINGITHI PATHUM.

All these benefits are supported by hi-tech SMS and Internet banking facilities and available through HNB's 143 Customer Centres islandwide.

Give us a call and discover how we can add value to your life.

HNB

HNB Head Office, HNB Towers, 479, T B Jayah Mawatha, Colombo 10.
Tel: 2662772, Telex: 21259 HATNBK CE, Fax: 2662832 E-mail: moreinfo@hnb.net Website: www.hnb.net

HNB Your Partner In Progress

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

## SLECIC GIVES YOU CONFIDENCE TO FACE UNFORSEEN AND UNEXPECTED CREDIT RISKS IN YOUR EXPORT BUSINESS

International markets are exposed to tremendous opportunities as well as credit risks

- SLECIC offers **Seller's Risk** to safeguard against unforeseen risks and unexpected losses due to non payment/delayed payment by the buyers abroad.
- SLECIC possesses expertise in buyer and country underwriting to navigate you through the intricacies of international trade and payments.
- The **Pre-Shipment Credit Guarantee** to obtain pre-shipment finance on more liberal terms for purchasing of raw materials, manufacturing, processing and packing of goods for export against Letters of Credit or Confirmed orders.
- The **Post-Shipment Credit Guarantee** to obtain adequate working capital at post-shipment stage by banks purchasing, discounting or negotiating export bills.
- **Bizinfo** providing Buyer Information and Credit Status Reports to the banking sector. SLECIC acts as a "Reseller" of buyer information of principals worldwide.
- **Export Finance** is a product which provides direct finance at a post-shipment stage to medium & small scale exporters.
- Bank Guarantee on **Cost of Passage Advances** covers all the pre-departure advances granted by banks to Sri Lankans going abroad.

**SLECIC**

*Information Support Protection For Exporter*


**Sri Lanka Export Credit Insurance Corporation**
Level 04, Export Guarantee House
42, Navam Mawatha, Colombo 02

Tel : 4719410 -13 / 5378161-65 Fax : 074-719400
E-mail : info@slecic.lk Website : www.slecic.lk

*(An Enterprise under the Ministry of Advanced Technology & National Enterprise Development)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

CTS

# COLOMBO DISTRIBUTORS

Distributors for Unilever Sri Lanka Limited,

No. 370, Main Street,
Kalmunai
Tel: 067- 22 21 277
067- 22 23 603

Fax: 067- 22 23 123
E-mail: colombodis@mail.ewisl.net

# J.M. SUBAIR

*General Merchants & Rice Millers*

No. 12, Masjithul Akbar Road,
Maruthamunai
Tel: 067-2229793

Subair Rice Mill,
220, Main Street,
Periyaneelavanai.
Tel: 067-2229637 Fax: 067-2221317


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

CRM
Central Rice Mill
Sammanthurai

# CENTRAL RICE MILL

Kalmunai Road, Sammanthurai,
Tel: 067 - 22 600 40 Mobile: 0777- 845 264

M.I. Samsudeen
133, P.P.Road, Kalmunai. 067- 22 29 904

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

# இலங்கை வங்கியின் மிகப்பெரிய

# குத்தகை

# (லீசிங்) சேவை

- இவை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ அரிய வாய்ப்புகளை அள்ளி வழங்குவதற்கு இலங்கை வங்கி சித்தமாய் உள்ளது.

- நீங்கள் செய்ய வேண்டியது என்ன?
இன்றே இலங்கை வங்கிக்கு சென்று இவ் அரிய அனுகூலங்களை அனுபவித்துக்கொள்ளுங்கள்.

BOC
The Bank You Can Trust

அன்றும் இன்றும் என்றும் உங்களுடன் நாம்

SAMMANTHURAI

786

# JAMSEEN RICE MILL

Al-Haj M.C.A.M. Jowfer Sadique
Malkampity Road,

SAMMANTHURAI. Tel: 067- 22 60 269

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

TRM

# THABLEEQUE RICE MILL

**மர்ஹூம் கவிஞர் அன்பு முகையதீன்**

அவர்களின் ஞாபகார்த்தமாக சகோதரர்,

அல்ஹாஜ் எம். ஐ. அப்துல் லத்தீப்

தப்லீக் அரிசி ஆலை

108, பிரதான வீதி, கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

# கல்முனை ப.நோ.கூ சங்கம்
# கல்முனை.

* கூட்டுறவே நாட்டுயர்வு !

* ஒற்றுமையின் உறுதியே கூட்டுறவு !!



நாட்டின் சமாதானத்திற்காகவும் நாட்டின் ஒற்றுமைக்காகவும் கல்முனை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர் சபையும், ஊழியர்களும், அங்கத்தவர்களும் எல்லாம் வல்ல இறைவனைப்பிராத்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

## கல்முனை ப.நோ.கூ சங்கம்
## கல்முனை

கூட்டுறவே நாட்டுயர்வு !
ஒற்றுமையின் உறுதியே கூட்டுறவு !!



நாட்டின் சமாதானத்திற்காகவும் நாட்டின்
ஒற்றுமைக்காகவும் கல்முனை பல நோக்குக்
கூட்டுறவுச்சங்க இயக்குனர் சபையும் ஊழியர்களும்
அங்கத்தவர்களும் எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்

MTK

# MUFFA TRADERS

**DEALERS OF GENERAL MERCHANTS**
**AND HOME NEED GROCERIES**

**118, Market Road,**
**Kalmunai.**

**Dial : 067-2229219**
**067-2220258**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From...*

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**பிரதான வீதி,**
**சம்மாந்துறை.**

தொ.பேசி - 067-2260031
067-2260351
067-2260655
பெக்ஸ் - 067-2260160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from:*

**இன்னும் நீங்கள் எதிர்த்து நிற்கவும்**
**பொறாமை கொள்ளவும் நாடினால்**
**அதில் தோற்றுப் போவது நமது**
**மக்களும் மண்ணும் தான்**

**Ali Construction**
No. 39 Ampara Road,
Sammanthurai.
Tel: 067-2260827, 077-3150401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Advertising, printing and promotion service**

**NEON, STAINLES STEEL, ACRYLIC,**

DIGITAL PRINT'S

* Digital sign Boards
* Digital flex Benner Indoor and Out door
* Digital hordings
* Digital stickers
* Vehicle stickers
* Graphic design
* Computerrised sticker cutting
* Type Setting

PRINTING

* Offset, Screen,


* Plastic Bags HDP and LDP

OTHER SERVICE

* Gift Items for aniversary
* Key tegs
* Communication Local,IDD Calls, Fax, Laminating, Binding, Photo copy (bulk) , Stationary
* INTERNET CAFE

09, Station Road, Dehiwala.
Tel :011-420 4644
Fax : 011-420 4645

# MY creation
advertising




**GRAPHIC DESIGN**

**PHOTO EDITING**

**INSTANT FRAME**

**WEDDING ALBUM**

**OFFSET, SCREEN PRINTING**

**SPECIALIST IN DIGITAL SIGN BORDS**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# We build your home and
## bring you Sathuta

Constructions are the physical indicator of the level of development of a nation. We contribute to the construction industry in this country in so many ways. Thereby, we serve you, the people of this country, in so many ways.

We are civil engineering and building contractors of both government and private sectors. We provide consultancy services in all areas of constructions. We do bring best quality building materials, construction machinery and equipment from overseas for our constructors' use. By selling 'things made in Sri Lanka' in foreign markets, we bring much needed foreign currency to this country.

Never forget. We are giving you the best service when you are planning the most important thing of your family - your home. We help build your home and bring you Sathuta.



සතුට
SATHUTA BUILDERS

## Sathuta Builders (Pvt.) Ltd.

71 Negombo Road, Kurunegala 60000, Sri Lanka
Tel 0094 37 2221836-8 Fax 0094 37 2221839 e-mail sathuta@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGINEERS
& ARCHITECTS
cecb

ඉංජිනේරුමය කාර්යයන් පිළිබඳ මධ්‍යම උපදේශක කාර්යාංශය
மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம்
CENTRAL ENGINEERING CONSULTANCY BUREAU


ඉදිකිරීම් ඒකකය,
මහනුවර මූලික කායර්‍යාලය,
නො : 26, පළමු පටුමග,
ධර්මරාජ මාවත, මහනුවර.

Construction Unit,
Kandy Base Office,
No. 26, 1 st Lane,
Dharmaraja Mawatha, Kand

දුරකථනය / Telephone : 081-2201638 DGM - 081-2203058 ෆැක්ස් / Telefax : 081 -2201638 E-mail : cecbkandy@hotmail.co

ප්‍රධාන කාර්යාලය : 415, බෞද්ධාලෝක මාවත, කොළඹ 7, ශ්‍රී ලංකා
தலைமை அலுவலகம் : 415 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7, இலங்கை.
Head Office : 415, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka

Telephone : 011- 2668800 (30 Lines), 2696216 (08 Line)
Telefax : 2687369
E - mail : cecb@slt.lk



1957 අංක 49 දරණ රාජ්‍ය කාර්මික පනත යටතේ සංස්ථාපිතයි.
1957 இல 49 அரச கைத்தொழில் கூட்டுதடதாபனங்களின் சட்டத்தின்படி நிறுவப்பட்டது
Established under the State Industrial Corporation Act 49 of 1957

මහවැලි සහ ගංගාධාර සංවර්ධන හා රජරට සංවර්ධන අමාත්‍යාංශය
மகாவலி ஆற்றுப்பள்ளதாக்கு அபிவிருத்தி ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சர்
MINISTRY OF MAHAWELI, RIVER BASING DEVELOPMENT & RAJARATA DEVELOPMENT



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org